நவம்பர் 14 - நவம்பர் 20, 2010 November 14 - November 20, 2010 பக்கங்கள் - 28 25.00


REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்

பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



## தமிழ் பேசும் மக்களின் அரசியல்?

## சவால்களுக்கு மத்தியில் ஜனாதிபதியின் பதவியேற்பு



# சவால்களுக்கு மத்தியில் ஜனாதிபதியின் பதவியேற்பு



நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இரண்டாவது பதவிக்காலத்துக்காக மகிந்த ராஜபக்ஷ பதவியேற்கும் நிலையில் -

உள்ளூரிலும் சர்வதேச மட்டத்திலும் எழுந்துள்ள எதிர்ப்பு அலைகளுக்குப் பதில் கூற வேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது.

சர்வதேச மட்டத்தில் இருந்து கிளம்பியுள்ள போர்க் குற்றச்சாட்டு ஒருபுறம்.
வாழ்க்கைச்செலவு அதிகரிப்பால் அல்லாடும் பொதுமக்களின் போராட்டம் மறுபுறம்.

சர்வதேச மட்டத்திலும் உள்ளூரிலும் குற்றக்கூண்டில் நிறுத்தப்பட்டுள்ள நிலையில் மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 19ஆம் திகதி தனது இரண்டாவது பதவிக்காலத்தை ஆரம்பிக்கின்றார்.

பெரும் சவால்களை எதிர்கொண்டுதான் தனது பதவிக்காலத்தை அவர் ஆரம்பிக்கின்றார்.

உள்நாட்டுப் போர் உச்சக்கட்டத்தை அடைந்து, இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 2002 ஆம் ஆண்டு உருவான யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பயனாக ஏற்பட்ட சமாதான சூழலில் முதலாவது பதவிக்காலத்தை மகிந்த ராஜபக்ஷ ஆரம்பித்தார்.

2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 திகதி அவர் தனது பதவிக்காலத்தை ஆரம்பித்தபோது நாடு அமைதியாக இருந்தது. நாட்டுக்குள்ளோ, சர்வதேச மட்டத்திலோ இலங்கைக்கு எதிராக எந்தக் குற்றச்சாட்டும் சுமத்தப்படாத காலம்.

உள்நாட்டில் ஜனநாயகத்துக்கு எதிராகவோ, வாழ்க்கைச்செலவுக்கு எதிராகவோ எந்தவித போராட்டமும் இடம்பெறாத காலம்.

சர்வதேச மட்டத்திலும் இலங்கையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படத்தக்க குற்றச்சாட்டு எதுவும் சுமத்தப்படாத காலம்.

அக்காலகட்டத்தில் ஆடம்பரமான நிகழ்வில் பதவியேற்ற மகிந்த ராஜபக்ஷ, தமிழர் பிரச்சினைக்குப் பேச்சு மூலம் தீர்வுகாண முயற்சிக்கப் போவதாக அறிவித்தார்.

அந்த அறிவிப்பு வந்து ஒரு வாரத்தில் வந்த மாவீரர் தின நிகழ்வில், மகிந்த ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்தத் தாயார் என விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தனது மாவீரர் உரையில் மகிந்தவுக்கு நேசக்கரம் நீட்டினார்.

அதன்பயனாக இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் முதல் கட்டப் பேச்சுக்கள் ஜெனீவாவில் இடம்பெற்றன. அந்தப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படா நிலையில் 2006 ஆம் ஆண்டு ஒகஸ்டில் போர் வெடித்தது.

முகமாலையில் ஆரம்பமான போர் காரணமாக குடாநாட்டுக்கும் ஏனைய பகுதிகளுக்குமான தரைப்பாதை மூடப்பட்டு, குடாநாடு ஏனைய பகுதிகளில் இருந்து துண்டிக்கப்பட்டது. அவசர தேவைகளுக்கோ, ஏனைய பணிகளுக்கோ, குடாநாட்டுமக்கள் வெளியே செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

கப்பல் மூலம் பொருள்கள் எடுத்துவரப்பட்டன. கப்பல் மூலமும் விமானம் மூலமும் மக்கள் தமது போக்குவரத்தை மேற்கொண்டனர்.

போக்குவரத்து, உணவு ஆகிய முக்கிய அத்தியாவசிய விடயங்களிலும் குடாநாட்டு மக்கள் முடக்கப்பட்ட நிலையில் கொலைகள், கடத்தல்கள் உச்சக்கட்டத்தை அடைந்திருந்தன.

தினமும் 5,6 பேர் என கண்ட இடங்களில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டனர். இரவு வேளைகளிலும் கொள்ளைகள், களவுகள் தாராளமாக இடம்பெற்றன.

ஓர் அச்சநிலை குடாநாட்டில் தோற்றுவிக்கப்பட்டது. இதனால் மக்களின் சகஜநிலை பாதிக்கப்பட்ட நிலையில், கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான மனிதாபிமான நடவடிக்கை என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட போர் தொடர்ந்து நடைபெற்று 2009 ஆம் ஆண்டு மே மாதம் விடுதலைப்புலிகள் ஒழித்துகட்டப்பட்டு அச்சநிலைக்கு முடிவு ஏற்படுத்தப்பட்டது.

விடுதலைப்புலிகளை ஒடுக்கி, போரை முடிவுக்குக் கொண்டுவந்த போதும், அந்தப் போரால் ஏற்பட்ட போர்க் குற்றங்களில் இருந்து தப்பிக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அந்தப் போரில் கொல்லப்பட்டவர்கள் தொடர்பான படங்கள், வீடியோக்கள், வரைபடங்கள் சர்வதேச மட்டத்தில் இணையங்களில் வெளிவரத்தொடங்கின. சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு எதிராக பெரும் குற்றச்சாட்டு எழுந்து நிற்கிறது.

1983 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் தொடர்ந்த கொலைகள், கடத்திக் காணமல்

## சர்வதேச, உள்ளூர் நெருக்கடிகள் உச்சக்கட்டம் நோக்கி...

போதல், கைது செய்தல், சித்திரவதை செய்தல் போன்ற சம்பவங்கள் தொடர்பாக இலங்கை மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் பதிவாகி வந்தன.

அந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு எல்லாம் மேலாக இப்போது இலங்கை மீது போர்க் குற்றச்சாட்டு வந்து நிற்கிறது.

இந்தக் குற்றச்சாட்டை அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், ஏன் ஐ.நா. கூட இலங்கை மீது சுமத்தியுள்ளது.

இந்தப் போர்க்குற்றச்சாட்டுத் தொடர்பாக விசாரணைசெய்து தமக்கு ஆலோசனை வழங்க நிபுணர் குழு ஒன்றை ஐ.நாவின் செயலாளர் நாயகம் பான் கீமூன் நியமித்துள்ளார். அந்த நிபுணர் குழு தனது விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்தக் குழுவுக்கு சாட்சியம் அளிக்க எவராவது விரும்பினால் தமக்கு சாட்சியங்களை அனுப்பலாம் என்று அந்தக் குழு பகிரங்கமாக அறிவித்துள்ளது.

இதற்குப்புறம்பாக, ஜேர்மன், பிரிட்டன் போன்ற நாடுகளில் உள்ள புலம்பெயர்ந்த தமிழர்கள் அந்த நாடுகளில் உள்ள மனித உரிமை ஆர்வலர்களுடன் இணைந்து சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக அறிவித்துள்ளனர். இதற்கான முயற்சிகள் எடுக்கப்படுவதாக தகவல்கள் வெளியாகின்றன.

இந்த நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரிட்டனுக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தார்.

ஆனால் அந்த விஜயம் ரத்துச் செய்யப்பட்டு விட்டது. அந்த விஜயம் ரத்தானமைக்குக் காரணம், பிரிட்டனுக்கு அவர் விஜயம் மேற்கொள்ளும் போது, அங்குவைத்து அவர் போர்க் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்படலாம் என்று இந்திய இணையத்தளம் ஒன்று பரபரப்பான தகவலை வெளியிட்டது.

ஆனால் இத்தகவலை மறுதலித்த இலங்கை, ஜனாதிபதியின் பதவியேற்பு தொடர்பான நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படுவதால், அவர் பிரிட்டனுக்கான விஜயத்தை டிசெம்பருக்கு பிற்போட்டுள்ளதாகவும், அவரது விஜயம் ரத்துச் செய்யப்படவில்லை என்றும் அறிவித்திருந்தது.

சர்வதேச மட்டத்தில் போர்க் குற்றச்சாட்டுக்கு முகம் கொடுப்பதற்காக கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு ஒன்றை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்தார்.

அந்த ஆணைக்குழு தனது விசாரணையை முழு வீச்சில் பல்வேறு இடங்களிலும் தற்போது நடத்திக் கொண்டிருக்கிறது.

அங்கு பதிவாகும் சாட்சியங்கள், இலங்கை மீது சர்வதேசம் சுமத்தும் குற்றச்சாட்டுக்களை ருசுப்படுத்தும் வகையில் அமைகின்றன என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

சர்வதேசத்தில் போர்குற்றச்சாட்டை எதிர்கொண்டுள்ள இலங்கை, உள்நாட்டில் ஜனநாயக விரோதச்செயல், வாழ்க்கைச் செலவு உயர்வு போன்ற செயற்பாடுக்களால் எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புக்கு ஆளாகியுள்ளது.

அரசின் மக்கள் விரோதச் செயற்பாடுகளைக் கிராம மக்கள் மத்தியில் தெரிவித்து ஆதரவு தேடும் நோக்கில் கிராமிய சஞ்சாரம் என்ற போராட்டத்தை ஐ.தே.க. ஆரம்பித்துள்ளது.

கிராம மட்டத்தில் அரசுக்கு எதிரான கருத்துக்களைத் தெரிவித்து அதன்மூலம் அரசுக்கு நெருக்கடிகளைக் கொடுக்க ஐ.தே.க. இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளது.

ஜனாதிபதியாக இரண்டாவது பதவிக்காலத்தை மகிந்த ராஜபக்ஷ ஆரம்பிக்கவுள்ள எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முதல்நாள் கொழும்பில் லட்சக்கணக்கானவர்களை அழைத்துவந்து பெரும் எதிர்ப்புப்போராட்டத்தை நடத்தப்போவதாக எதிர்க்கட்சிகள் அறிவித்துள்ளன.

இதேவிதமான போராட்டத்தை நடத்தப் போவதாக ஜே.வி.பியும் அறிவித்துள்ளது.

இதேவேளை, வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப சம்பளம் வழங்கவேண்டும் என்று கோரி அரசுக்கு எதிராக வேலை நிறுத்தங்களை மேற்கொள்ளப் போவதாக தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

இதுவரை காலமும் யுத்தத்துக்கு முகம்கொடுத்து வந்த இலங்கை ஆட்சியாளர்கள் சர்வதேச மட்டத்தில் போர்க்குற்றச்சாட்டுக்கு முகம்கொடுக்கும் நிலை, உள்நாட்டில் வாழ்க்கைச்செலவு, ஜனநாயக விரோதச் செயல் என்ற எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுக்கு முகம் கொடுக்கும் நிலை.

இந்த நிலையில் - பெரும் சவால் மிக்க நிலையில் - ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது இரண்டாவது பதவிக்காலத்தை ஆரம்பிக்கப்போகிறார்.

சமாதான சூழலில் முதலாவது பதவிக் காலத்தை ஆரம்பித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, மிக நெருக்கடியான காலகட்டத்தில் இரண்டாவது பதவிக்காலத்தை ஆரம்பிக்கின்றார்.

இலங்கையை சூழ்ந்துள்ள சர்வதேச, உள்ளூர் நெருக்கடிகளுக்கு தீர்வுகண்டு வெற்றிகொள் வாரா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ? இதுவே இன்று எழும் கேள்வியாகும்.

யாழவன்

WESTERN UNION | yes!

money transfer

yes!

## வெஸ்டர்ன் யூனியன் மூலம் வெளிநாட்டிலிருந்து பணத்தினைப் பெற்று பெறுமதி மிக்க பரிசுகளை வென்றிட ஒரு அரிய சந்தர்ப்பம்!



மாதாந்த சீட்டிழுப்பின் மூலம் தங்க நாணயங்களை வென்றிடும் அதிர்ஷ்டசாலிகள் ஐவரில் ஒருவராகவோ அல்லது ஐரோப்பாவிற்கான பயணமொன்றினை வென்றிடும் அதிர்ஷ்டசாலிகளாகவோ விரும்புகிறீர்களா?

2010 ஒக்டோபர் 20ஆம் திகதியிலிருந்து எந்தவொரு வட பிராந்திய வெஸ்டர்ன் யூனியன் பிரதிநிதிகள் மூலமாகவும் பணத்தைப் பெற்றுக்கொண்டால், மாதாந்தம் இடம்பெறும் அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் நீங்களும் பங்குபற்றி தங்க நாணயங்களையும், இருவர் ஐரோப்பா பயணிப்பதற்கான அதிர்ஷ்டத்தினையும் வென்றிடலாம்

| சீட்டிழுப்பு | வெற்றியாளர் தொகை | சீட்டிழுப்பு திகதி | பரிசுகள் |
|---|---|---|---|
| 1 வது சீட்டிழுப்பு | 05 | 24 நவம்பர் 2010 | 5 தங்க நாணயங்கள் |
| 2 வது சீட்டிழுப்பு | 05 | 28 டிசெம்பர் 2010 | 5 தங்க நாணயங்கள் |
| 3 வதும் இறுதியுமான சீட்டிழுப்பு | 07 | 17 ஜனவரி 2011 | 5 தங்க நாணயங்களுடன் இருவருக்கான ஐரோப்பா பயண டிக்கெட் |

தாமதம் செய்யாதீர்கள்! உடனேயே பணம் அனுப்புபவருக்கு அறிவித்து பெறுமதிமிக்க பரிசுகளை ...றிடும் சந்தர்ப்பத்தினைப் பெறுங்கள்.

மேலும் விபரங்களுக்கு எந்தவொரு வெஸ்டர்ன் யூனியன் பிரதிநிதி நிலையங்களையும் அணுகுங்கள்.

## வெஸ்டர்ன் யூனியன்

- விரைவானது
- நம்பிக்கையானது
- இலகுவானது
- சட்டபூர்வமானது
- நாடளாவிய 4100 பிரதிநிதிகளையும் இலங்கையின் வட பகுதியில் 70 கிளைகளையும் உள்ளடக்கியது.

- இந்நிகழ்வு 2010 ஒக்டோபர் 20ஆம் திகதி ஆரம்பித்து 2011 ஜனவரி 15ஆம் திகதியுடன் முடிவடையும்.
- 5 தங்க நாணயங்களின் வெற்றியாளர்கள் ஒவ்வொரு மாதமும்: 24 நவம்பர் 2010, 28 டிசெம்பர் 2010, 17 ஜனவரி 2011. ஒரு சீட்டிழுப்பில் பங்குபற்றும் ஒருவர் ஒரு தங்க நாணயத்தினை மாத்திரமே வெல்லலாம். வெஸ்டர்ன் யூனியன் மூலம் பணம் பெற்றுக்கொள்ளும் ஒருவர் எத்தனை சீட்டிழுப்பிலும் பங்குபற்றலாம்.
- எந்த அளவு பணத்தினைப் பெற்றுக்கொண்டாலும் ஒரு பரிமாற்றத்தினை மேற்கொள்ளும் ஒருவர் ஒரு முறை மாத்திரமே பங்கு பற்றுவதற்கு தகுதியுடையவராவார்.
- ஐரோப்பா பயணத்திற்கான வெற்றிபெறும் தகுதி இருவருக்கு உரியது.
- இச்சீட்டிழுப்பு 2011 ஜனவரி 17 ஆம் திகதி இடம்பெறும்.
- இதன் ஏற்பாட்டாளர் முன்னறிவத்தலின்றி பயணிக்கும் நாட்டில் மாறுதலை ஏற்படுத்தலாம்.
- வெற்றியாளாகள் தமது பரிசுகளை 2011 ஜனவரி 22ஆம் திகதி இடம்பெறும் இறுதி இசை விழாவின்போது பெற்றுக்கொள்ளலாம். பரிசுகளை பெறுவதற்கான இறுதித் திகதி 2011 பெப்ருவரி 15ஆம் திகதியாகும். பயணச் சீட்டுகளை வெல்வோர் பயணிக்கும் தினத்தினை சீட்டுகளை பெறமுன்னரே அறிவிக்கவேண்டும்.
- ஏற்பாட்டாளரின் அனுமதியுடன், விமானச் சீட்டினை பணமாக மாற்றிக் கொள்ளலாம்.
- பயணச் சீட்டும், சேவையும் மூன்றாந்தரப்பினர் அல்லது பயண முகவரினாலோ மேற்கொள்ளப்படும். இச்சேவையினரால் அளிக்கப்படும் சேவைக்கோ பயண செலவு மற்றும் மேலதிக வரிக்கட்டணங்கள் வீசா கட்டணங்கள் அல்லது பயணத்தின்போது ஏற்படும் செலவுகளுக்கு வெஸ்டர்ன் யூனியன் பொறுப்பாளிகள் அல்ல.

**தங்க நாணயங்கள் மற்றும் ஐரோப்பா பயண அதிர்ஷ்ட சீட்டிழுப்பு நிபந்தனைகளையும் சட்ட திட்டங்களையும் உள்ளடக்கும்**

licence No. WP/GT/3168

பிரதான பிரதிநிதிகள்

MMBL Money Master | NDB வங்கி | மக்கள் வங்கி | ශ්‍රී ලංකා තැපැල් இலங்கை அஞ்சல் SRI LANKA POST | UNION BANK If it's important to you, it's important to us

# ஈராக் போர்க்களத்தில் இறந்தவர்கள் எத்தனை பேர்?

அமெரிக்க இராணுவத்தின் அராஜக தர்பாரைத் தொடர்ந்து ஆதாரங்களுடன் அம்பலப்படுத்திப் பதறவைக்கிறது, லண்டனின் 'விக்கிலீக்' இணையத்தளம்.

கடந்த ஒக்டோபர் 22ஆம் திகதி, இந்த இணையத்தளம்... 2004ஆம் ஆண்டு முதல் 2009 வரையில், ஈராக் போர் தொடர்பான ஏராளமான நேரடி இராணுவக் கள அறிக்கைகளை வெளியிட்டுள்ளது. இது அமெரிக்காவை மட்டுமல்ல, உலகையே அதிரவைத்தது!

ஈராக் போர்க் களத்தில்... தாக்குதல் நடந்த இடம், எந்த வகையான தாக்குதல், யார் நடத்தியது, எத்தனை பேர் உயிரிழப்பு, காயமடைந்தவர்கள் எத்தனை பேர், அதில் குழந்தைகள் எத்தனை எனப் பலவற்றையும் பகிரங்கப்படுத்தியிருக்கிறது 'விக்கிலீக்' இணையதளம்.

கடந்த ஜூலை மாதத்தில் 'ஆப்கானிஸ்தான் வோர் டைரி' என்ற பெயரில், ஆப்கான் போர் அறிக்கைகளை இந்தத் இணையத்தளம் வெளியிட்டு அமெரிக்காவுக்கு முதல் அதிர்ச்சியை அளித்தது. இப்போது... ஈராக் தகவல்கள். இது மாதிரியான கொடூரங்கள் நடந்தன என்று மனித உரிமையாளர்கள் பொதுவாகச் சொல்லிப் பதறுவார்களே தவிர, அதற்கான ஆதாரங்களை வெளியே கொண்டுவருவது அத்தனை சுலபமல்ல.

அப்படியிருக்க, ''உலக இராணுவ வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில், முதன் முறையாக இப்படி பெரும் இரகசியம் வெளியாகியிருக்கிறது...'' என்று இதைச் சொல்கிறார்கள்.

**விக்கிலீக் வெளிப்படுத்தி வரும் முக்கியத் தகவல்கள் இவைதான்...**

ஈராக் போரின்போது ஒரு லட்சத்து 9 ஆயிரத்து 32 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் 66 ஆயிரத்து 81 பேர் அப்பாவிப் பொதுமக்கள் (இவர்களை தீவிரவாதிகள் என்கிறது அமெரிக்கா!). ஈராக் படையைச் சேர்ந்தவர்கள் 15 ஆயிரத்து 196 பேர். கூட்டுப் படைகளைச் சேர்ந்தவர்கள் 3 ஆயிரத்து 771 பேர். மிகக் கொடுமையான சித்திரவதைகள் மூலமாக இவர்கள்



கொல்லப்பட்டுள்ளனர். அமெரிக்கக் கூட்டுப் படைகளால், ஈராக்கியர்கள் மீது அவிழ்த்துவிடப்பட்ட ஆயிரக்கணக்கான சித்திரவதை, பலாத்காரம் மற்றும் கொலைகளை அமெரிக்கா மூடி மறைத்ததும் தெரிய வந்திருக்கிறது.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி புஷ் பதவியில் இருந்த வரையில், 'ஈராக் தாக்குதலில் உயிர் இழந்தவர்கள்பற்றிய எந்தக் கணக்கும் இல்லை' என்றே கூறிவந்தது. ஆனால், 'ஈராக் பாடி கவுன்ட்' என்ற அமைப்பு, 'ஒரு லட்சத்து 22 ஆயிரம் ஈராக்கியர்கள் கொல்லப்பட்டு இருப்பார்கள்...' என்று சொல்லி வந்தது. கிட்டத்தட்ட அந்தக் கணக்கு 'விக்கிலீக்' ஆவணங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது.


மேலும், '2007ஆம் ஆண்டு ஜூலை 12ஆம் திகதி பாக்தாத் நகரில் ஹெலிகொப்டர் தாக்குதலில் 'ரொய்ட்டர்' செய்தி நிறுவனத்தில் பத்திரிகையாளர்கள் இருவர் உட்பட பலர் கொல்லப்பட்டனர். சரண் அடைய வந்த நூற்றுக்கணக்கானவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்ட கர்ப்பிணிப் பெண் மற்றும் அவர் குடும்பத்தினரை 'செக் போஸ்ட்' அருகில் வைத்து சித்திரவதை செய்துகொன்றனர். இதனால், 'போர்க் குற்றங்களில் ஈடுபட்டதற்காக, அமெரிக்காவை சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டும்!' என்ற கருத்து, பல நாடுகளில் இருந்து வலுப்பெற்று வருகிறது. தவிர, ஈராக் போராளிகளுக்கு ஈரான் நாடும் ரோக்கெட் லோஞ்சர், கார் குண்டுகள், ஏவுகணைகள் உள்ளிட்ட பயங்கர ஆயுத உதவிகள் அளித்ததும் தெரியவந்துள்ளது.

இராணுவ இரகசியத்தை பொட்டென்று போட்டு உடைத்ததால் கோபப்படும் அமெரிக்கா, இந்த இணையத்தள நிறுவனர் ஜூலியனை வலை வீசித் தேடிவருகிறது. எந்த நேரத்திலும் அமெரிக்காவால் கொலைசெய்யப்படலாம் என்ற அச்சத்தால் அவர், மாறுவேடத்தில் சுற்றி வருகிறார். கிரெடிட் கார்ட்டைப் பயன்படுத்தினால், இருக்கும் இடம் தெரிந்துவிடும் என்பதால், நண்பர்களிடம் பணமாக வாங்கித்தான் செலவுசெய்கிறாராம்!

அமெரிக்காவுக்கு உதவியவர்களுக்கும், ஜூலியனால் வேறு விதமான மண்டையிடிகள் முளைத்துள்ளன. ஆப்கானிஸ்தானில் தலிபான்களையும், ஈராக் அரசையும் தூக்கி எறிய அமெரிக்காவுக்கு உதவியவர்களின் உயிர், எந்த நேரத்தில் போகுமோ என்ற அச்சம் நிலவுகிறது. காரணம், சமீபத்தில் வெளியான ஆப்கானிஸ்தான் போர் குறித்த 'விக்கிலீக்' ஆதாரங்கள், அமெரிக்கா மற்றும் கூட்டுப் படைகளுக்கு உதவிய, 1,800 பெயர்களையும் குறிப்பட்டுள்ளது. அந்தப் பெயர்களைக் கண்டறிந்து, 'அவர்களில் யார் யார் எல்லாம் அமெரிக்காவுக்கு உதவினார்கள்' என்பதைச் சல்லடை போட்டுத் தேடும் வேலையில் இறங்கியிருக்கும் தலிபான், இதற்காக 9 பேர்கொண்ட ஒரு குழுவை நியமித்துள்ளது. ''அவர்கள் மீது என்ன நடவடிக்கை என்பதை தலிபான் நீதிமன்றம் முடிவு செய்யும்!'' என்று அதன் செய்தித் தொடர்பாளர் சபயுல்லா முஜாஹித் அறிவித்துள்ளார். அதேபோல், ஈராக் போரில் அமெரிக்காவுக்கு உதவியவர்களின் பட்டியலை அல்கொய்தா தயார்செய்து, தண்டனை தர முடிவெடுத்துள்ளதாம். இதனால், ஈராக்கைவிட்டு அமெரிக்கா முழுமையாக வெளியேறினால், 'தங்களது நிலை என்ன ஆகுமோ?' என்ற கொலை பயத்தில் உள்ளனர் பல அமெரிக்க ஆதரவு ஈராக்கியர்கள்.

இந்த விஷயத்தால் பெரும் தலைவலிக்கு ஆளாகியிருக்கும் அமெரிக்கா, விக்கிலீக் வெளியிட்டுள்ள ஆவணங்களை வரிக்கு வரி படித்து, அதில் தங்களுக்கு உதவியதாக வெளியாகியுள்ள 200இக்கும் மேற்பட்ட ஈராக்கியர்களின் பெயர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் நடவடிக்கையைத் தொடங்கியிருக்கிறதாம். சுருக்கமாகச் சொன்னால், உலக உருண்டையை ஒரு சுற்று உலுக்கிப் பார்த்து விட்டது இந்த துப்பறியும் இணையதளம்!





பா.பிரவீன்குமார்

# RanHomes

## 2010 கௌரவ விருது

யாழ்ப்பாணத்தில்
புதிய கிளை
அலுவலகம் திறந்து
வைக்கப்பட்டுள்ளது.





Swarna Lanka Award





Shramabhimani Award

சுவர்ண லங்கா - ஷ்றாம்பிமானி

வீடமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின்

**சிறந்த தெரிவுகள்**

உங்களது சொந்த நிலத்திலேயே நாம் வீடுகள் அமைப்போம்

## எமது திட்டங்கள்

ஜா-எல
எக்கல
கந்தானை
கொட்டுகொட
மஹர
சீதுவ
வென்னப்புவ
களனி

## எமது சேவைகள்

★கடந்த 15 வருடங்களாக அரச, தனியார் வங்கிகள் மூலம் கடன் வசதிகள் ஒழுங்குசெய்து கொடுக்கின்றோம்.

★வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கையர்கள் இலங்கைக்கு வராமலேயே கடன் பெற்றுக்கொள்ள உதவுதல்.

★தரத்தில் சிறந்த பொறியியலாளர்கள், தொழில்நுட்பவியலாளர்களின் மேற்பார்வை


★உங்கள் சொந்த நிலத்திற்குக் கட்டணம் எதுவுமின்றி வருகைதந்து விவரங்களைத் தருதல்



















போயா, ஞாயிறு தினங்கள் உட்பட ஒவ்வொரு நாளும் திறந்திருக்கும். நீங்கள் விரும்பும் ஒவ்வொரு நேரத்திலும் தொடர்புகொள்ளுங்கள்

நீங்கள் விரும்பும் ஒவ்வொரு நேரத்திலும்...
தொடர்புகொள்ளுங்கள்

**0773763122 / 0772646637**


## Ranasingha Homes (Pvt) Ltd.

No 9/2 A Perera Mawatha, Ja-ela. Fax: 011-4 831 787 E-mail: ranhomes@sltnet.lk Web: www.ranhomes.com
Branch Office :No 841,Hospital Road,Chundikuli,jaffna TP/Fax: 021-2220400

# கிளாலி மக்களின் எதிர்பார்ப்பும் ஏக்கமும்

இலங்கையிலேயே அதிக மிதிவெடிகள் - கண்ணிவெடிகள் உள்ள பகுதியாக கிளாலி தொடக்கம் நாகர்கோவில் வரையான பகுதியே உள்ளது என்று சொல்லப்படுகிறது.

இந்தப் பகுதியிலுள்ள கண்ணிவெடிகளை அகற்றி முடிக்க ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் செல்லும் என்கிறார் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள தொண்டு நிறுவனமென்றின் இடைநிலை உத்தியோகத்தர்.

ஏறக்குறைய இதே கருத்தைத்தான் சொல்கிறார்கள் படையினரும். போர் முடிந்துவிட்டது. பெரும்பாலான பிரதேசங்களில் மக்கள் இயல்பு வாழ்வுக்குள் நுழைந்துவிட்டார்கள். திருவிழாக்கள், கொண்டாட்டங்கள் எல்லாம் அமோகமாக நடக்கின்றன.

நாட்டின் நாலா பக்கமும் பேருந்துகள் ஓடுகின்றன. எல்லாப் பேருந்துகளிலும் சனக்கூட்டம் நிரம்பிவழிகிறது. தினமும் தீபாவளி போல சனங்கள் நிறைந்திருக்கிறார்கள்.

ஆனால், கைவிடப்பட்ட ஊர்களாக, காடுமண்டிய கிராமங்களாக, கால்வைக்க முடியாத தெருக்களாகப் பல ஊர்களும் தெருக்களும் உள்ளன.

இந்தக் கிராமங்களின் மக்கள் அகதிகளாகவே தொடர்ந்தும் இருக்கிறார்கள். மீண்டும் தங்கள் சொந்தக் கிராமத்துக்கு எப்போது போவாம் என்று தெரியாதவர்களாக இருக்கிறார்கள். மீண்டும் தங்கள் கிராமங்களுக்குப் போகவேண்டும் என்ற தவிப்போடிருக்கிறார்கள்.

... அவர்களுடைய வீடுகளில்லை என்று அவர்களுக்குத் தெரியும். கடையும் சந்தையும் தெருக்களும் தென்னையும் மாவும் பலாவும் பூமரங்களும் இல்லை என்றும் அவர்களுக்குத் தெரியும்.

பொதுவாகச் சொன்னால், அவர்களுடைய ஊர்களிலே எதுவுமேயில்லை. புதரையும் முள்ளையும் சிதைந்துபோன கட்டடங்களையும் கைவிடப்பட்ட காவலரண்களையும் தவிர அங்கே வேறெதுவும் மிஞ்சவில்லை என்று அவர்கள் அறிவார்கள்.

ஆனாலும் அவர்கள் தங்கள் ஊருக்குப் போகவே விரும்புகிறார்கள். அது அவர்களுடைய சொந்த ஊர். எனவேதான், என்னதானிருந்தாலும் அங்கே போகவிரும்புகிறார்கள்.

ஆனால் அவர்களால் அங்கே போகமுடியாது. யுத்தம் முடிந்த பின்னர் அகதி வாழ்க்கையும் முடிந்துவிடும் என்றுதான் நினைத்தார்கள். ஆனால் அது இன்னொரு வடிவத்தில் இன்னொரு காரணத்தின் நிமித்தமாகத் தொடரும் என்று அவர்கள் எண்ணியிருக்கவே இல்லை.

கிளாலி கிளிநொச்சி மாவட்டத்தின் ஒரு கரையோரக் கிராமம். ஆனால், அது யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருக்கிறது. ஒருகாலம் கிளாலி என்றால் பெரும் மதிப்பாக இருந்தது. யாழ்ப்பாணத்துக்கும் நாட்டின் ஏனைய பகுதிக்குமான தொடர்புச்சாதனமாக கிளாலியே இருந்தது. குடாநாட்டுக்கான பயணம் முதல் குடாநாட்டு மக்களுக்குத் தேவையான பொருட்கள் வரை கிளாலியினூடாகவே கொண்டுவரப்பட்டன.

கிளாலி அப்போது சனப் புழக்கம் அதிகமிருந்த ஒரு இறக்குதுறை. யாழ்ப்பாணத்துக்கும் வன்னிக்குமான போக்குவரத்துப்பாதை துண்டிக்கப்பட்டபோது கிளாலிக் கடலே வழியைத் திறந்தது. ஆனாலும் அது ஓர் அபாய வழியாகவே இருந்தது.

அந்தக் கடல்வழியை மறித்துவிடுவதற்காக அப்போது இலங்கைக் கடற்படையினர் கடுமையாக முயற்சித்தனர். நூற்றுக்கணக்கானோர் அப்போது அந்தக் கடலில் செத்துமடிந்திருக்கின்றனர். எனினும் மரணங்களைக் கடந்துகொண்டே பயணம் தொடர்ந்தது. அந்தக் காலட்டத்துப் பதிவுகளை பல படைப்பாளிகள் மறுபதிவு செய்திருக்கிறார்கள். அந்தளவுக்குக் கிளாலிக் கடல் அதிபயங்கரமானதாகவும் தவிர்க்க முடியாததாவும் முக்கியமானதாகவும் இருந்தது.

அதிலும் யாழ்ப்பாண இடம்பெயர்வின்போது கிளாலி பெற்றிருந்த முக்கியத்துவம் இன்னும் அதிகமானது. ஒரு சிறிய அமைதியான கிராமத்தில் நான்காண்டு காலம் லட்சக்கணக்கான மனிதர்கள் கூடிக் கழித்தார்கள்.

உண்மையில் கிளாலி ஒரு அமைதியான கிராமம். தெற்கே கடல், சிறுகடல், கொய்யும் திரளியும் பாலையும் கயலும் ஒட்டியும் ஓராவும் பிடிபடும் கடல். கடலோரமாக உள்ள ஊர் நிரம்பத் தென்னந்தோப்புகளும் கடலுமான அழகிய கிராமமாக்வே அது இருந்தது.

என்னவோ தெரியாது கிளாலியில் ஏழு கிறிஸ்தவத் தேவாலயங்கள் இருந்தன. சைவக் கோவில்களும் பத்துக்கு மேலிருந்தன. தென்னந்தோப்புக்குப் போட்டியாகப் பனைமரங்கள்.

தென்னையோடும் பனையோடும் கடலோடும் கழிந்தது கிளாலி மக்களின் வாழ்க்கை. அங்கு சுமார் 500 குடும்பங்களுக்கு மேல் இருந்தன. தென்னை மரங்களே பெரும்பாலான குடும்பங்களை வாழவைத்தன.

தேங்காயும் கிடுகும் தென்னை மட்டையும் பனைமட்டையும் ஏற்றிவிற்கும் தொழில்வாய்ப்பு கிளாலிக்குக் கிடைத்த ஓர் அருமையான கொடை.

கிளாலியில் இருந்த சிறிய இறங்குதுறையில் மீன்பிடிப் படகும் ஒரு சந்தையும் இருந்தன. கொடிகாமம், பளை, சவகச்சேரிச் சந்தைகளைக் கிளாலித்துறை மீனும் கிளாலித் தேங்காயும் நிறைத்திருந்தன. ஒரு சீசனுக்கு கிளாலி மாம்பழங்கள் தாராளம். வாருங்கள் தேங்காயும் மாங்காயும் மீனும் பனம்பழமும் கிழங்குமாக நிறைந்திருந்த ஓர் அழகிய வளம் நிறைந்த ஊரில் இன்று மிஞ்சிக்கிடப்பது கண்ணிவெடிகள். ஊரில் நிறைந்திருப்பது காடும் புதரும் முள்ளும் கல்லும்தான்.

**- ஜோசவ் தயாளன்**

கிளாலி மக்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல இடங்களிலும் இருக்கிறார்கள். வன்னியிலும் ஒரு குறிப்பிட்ட தொகையினர் இருக்கின்றனர்.

எல்லோருக்கும் இருக்கின்ற ஒரே எதிர்ப்பார்ப்பு மீண்டும் எப்போது தங்கள் கிராமங்களுக்குச் செல்வது என்பதே. இது நியாயமான எதிர்பார்ப்பே.

ஆனால், இந்த எதிர்பார்ப்பு எப்போது நிறைவேறும் என்பதே கேள்வி.

பளை பிரதேச செயலர் பிரிவில் கிளாலியைப்போல் இன்னும் நான்கைந்து கிராம அலுவலர் பிரிவுகள் இரண்டு மூன்று ஆண்டுகள் வரை காத்திருக்கவேண்டிய நிலையில்தானிருக்கின்றன.

இவை எல்லாவற்றுக்கும் எப்போது முடிவு வரும்? எப்போது விடிவு வரும்? என்பதே இப்போது அறியவேண்டிய பதிலாகும்.

ஓர் இருபது ஆண்டுகளுக்குள் கிளாலி எந்தனைவிதமாக மாறிவிட்டது. ஒரு காலம் சனங்களால் நிறைந்திருந்த இடம் இப்போது சனமே இல்லாமல் வெறிச்சோடிப் போயிருக்கிறது.

மீண்டும் இந்தப் பழைய வளமான கிராமத்தில் மனிதக் காலடிகள் பதிவது எப்போது? மக்களின் சிரிப்பும் பாட்டும் கூத்தும் எப்போது? இதற்காகவே காத்திருக்கின்றனர் கிளாலி மக்கள்.

அகதிகளின் பிரச்சினைக்கே தீர்வுகாணமுடியாத அரசிடம் அரசியல் தீர்வை எதிர்பார்க்கலாமா என்று ஒருவர் கேட்கிறார்.

அனுபவ மொழிக்கு கிளாலி உண்மை உலகில் வேறில்லை.





# உயிர் வலிக்கும் கணங்கள்...!



# ஒரு தாயின் கண்ணீர்க் கதை

## அந்த இறுதி நாட்களில் வன்னியில் நேர்ந்த அவலங்கள்

நாங்கள் இராணுவக் கட்டுப்பாட்டினுள் வந்து வலயம்-04 முகாமின் கம்பி வேலியினுள் அடைக்கப்பட்டிருந்தோம். நான் செங்கன்மாரி நோயால் பாதிக்கப்பட்டு எழுந்து நடக்கக் கூட முடியாத நிலையிலிருந்தேன். முகாமின் இறுதிப் பகுதியிலேதான் எங்கள் கூடாரம் அமைந்திருந்தது. அங்கிருந்து வைத்தியசாலைக்கு, முகாமின் தொடக்கப் பகுதிக்கு வரவேண்டும். இரண்டு நாட்கள் வைத்தியசாலைக்கு வந்து ஏராளம் மக்கள் என்பதினால் வைத்தியரிடம் காட்ட முடியாமல் திரும்பிச் சென்றேன். ''நான் உயிர் தப்ப மாட்டேன். அதனால்தான் போய்ப் போய் இரண்டு நாளும் திரும்பி வந்துள்ளேன். இனி வைத்தியசாலை போகமாட்டேன். நான் செத்தால்... இந்த கூடாரத்துக்கு அருகிலேயே புதைத்து விடுங்கள். நான் உங்களுடனே இருந்து விடுகிறேன்'' என்று வீட்டாரிடம் கூறினேன். பிறகு, வீட்டாரின் வற்புறுத்தல் காரணமாக மூன்றாம் நாளும் வைத்தியசாலை சென்றேன். அன்று வைத்தியரிடம் காட்டியபோது, பூவரசங்குளம் வைத்தியசாலைக்கு அனுப்பப் போவதாகக் கூறினார்கள். என்னாலோ எழுந்து நடக்க முடியாத நிலை. எனக்கு ஆறுமாதக் குழந்தையும் இருக்கிறது. குழந்தையைத் தூக்க என்னால் முடியாது. அதனால், குழந்தையுடன் அம்மாவையும் கூட்டிக் கொண்டு போக... வைத்திய அதிகாரி மறுத்து விட்டார். இதனால், அம்மாவையும் குழந்தையையும் விட்டுவிட்டு அழுதழுது வைத்தியசாலைக்குச் சென்றேன். அங்கே...''செங்கன்மாரிக்கு இங்கு மருந்து எதுவும் இல்லை. நீங்கள் ஓய்வாக இருந்து இளநீர் குடித்து, பழங்கள் சாப்பிடுங்கள். அதுதான் பராமரிப்பு. அதன்பின் முகாமுக்குச் செல்லலாம்.'' என்றார். நான் கையில் ஆயிரம் ரூபாதான் வைத்திருந்தேன். போட்ட உடுப்பு மாத்திரமே. உடுப்பை வாங்குவதா? சாப்பாடு வாங்குவதா? என, ஒரே குழப்பம். அன்று இரவு வைத்தியசாலை சாப்பாடுதான் சாப்பிட்டேன். வரிசையில் நின்று அழுதழுதே சாப்பாடு வாங்கினேன். ஏனெனில், நான் ஒரு அரச சமூகசேவை உத்தியோகத்தர். மற்றவர்களுக்கு உதவி செய்து உணவு வழங்கித்தான் பழக்கம். இன்று நான் கையேந்திக்கொண்டு நிற்கிறேனே... என்று அழுதேன்.

மறுநாள்... நோயாளர்களைப் பார்க்க வந்தவர்களைக் கேட்டு, எனது உறவினர் ஒருவருக்கு தகவல் அனுப்பினேன். மதியம் ஆகிவிட்டது. மதிய உணவு வரிசையில் நின்றேன். அன்று, சிலர் வெளியில் இருந்து உதவி வழங்க வந்திருந்தனர். புகைப்படம் எடுத்தனர். அப்போது நான் சுவரைப் பார்த்து அழுதுகொண்டிருந்தேன். அந்தநேரம், ஒலிபெருக்கியில் எனது பெயரைக் கூறி உறவினர் வந்திருப்பதாக அறிவித்தார்கள். நான், யார் என்னிடம் வருவார்கள் என்று பார்த்தேன். என்னிடம் வந்த உறவினர்களுக்கு என்னை அடையாளம் தெரியவில்லை. நான் கண்ணீரோடு ...இங்கே இருக்கிறேன் என்று அவர்களைப் பிடித்தபோதுதான், அவர்கள் என்னை இனங்கண்டு கொண்டனர். அவர்கள் என்னை அழைத்துச் செல்ல இருந்தனர். நான் ''இல்லை. நான் முகாமுக்கு போகப் போறன். குழந்தையை விட்டிட்டு என்னால் இருக்க முடியாது.'' என்றேன். பிரச்சினையில்லை. இன்னும் இரண்டு, மூன்று நாட்களில் முகாம் பார்க்க விடுவார்கள். அப்படிப் போகும்போது குழந்தையைக் கொண்டு வரலாம். இங்கு ஒரு பராமரிப்பும் இல்லாமல் இருந்து என்ன செய்யப் போகிறாய்....? என்றனர். எனவே, வைத்தியசாலையை விட்டு வெளியேறி உறவினர் வீடு வந்துவிட்டேன்.

அவர்கள் ஆயுர்வேத வைத்தியரிடம் என்னை அழைத்துச் சென்று மருந்து எடுத்ததோடு, வீட்டில் பால், பழங்கள், இளநீர், கீழ்காய் நெல்லி, இலை உருண்டை வெள்ளைக் கறி சோறு என்று தந்து என்னை நன்றாக பராமரித்தார்கள். அந்தப் பராமரிப்பின் மூலம், எனது உடல் தேறத் தொடங்கியபோது பால் வேதனை செய்து மார்பு வீங்கி...கட்டி ஆகிவிட்டதுடன் மீண்டும் காய்ச்சல் ஆரம்பித்தது. இதைவிட குழந்தையை நினைத்து நினைத்து ஒரே அழுகை. இரவு பகலாய் குழந்தை முகம்தான். பகல் என்னை மறந்து சிலவேளை நித்திரையாகி விடுவேன். இரவில் நித்திரையும் வராது. நான் பட்ட வேதனையை எப்படி விபரிப்பது என்று எனக்குத் தெரியவில்லை. முகாமில் தாய்ப்பாலுடன் இருந்த குழந்தைக்கு கொடுக்க பால்மாவும் இல்லை. நாங்கள் வரும்போது அங்கர் கொண்டு வந்திருந்தோம். அதனை தண்ணீரில் கரைத்துக் கொடுக்க, ஏற்கனவே கழிச்சலுடன் இருந்த குழந்தைக்கு கழிச்சலோடு காய்ச்சலும் தொடங்கிவிட்டது. இதனால் வாயும் அவிந்து குழந்தை ஒரே அழுகை. எனது அம்மா தண்ணீர் எடுக்கப் போவதோ... சாப்பாடு எடுக்கப் போவதோ... அழும் குழந்தையைப் பார்ப்பதோ...? பெரும் துன்பத்தின் மத்தியில் இருந்தார். எனக்கு உடல்நிலை ஓரளவு தேறி நடமாடத் தொடங்கி விட்டேன். வலயம்-04 முகாமை வெளியார் பார்க்க எப்போது அனுமதிப்பார்கள் என்று எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருந்தேன். சரியாக நான் குழந்தையைப் பிரிந்து இரண்டு மாதங்களின் பின்னர், பார்வையிட அனுமதித்தனர். அன்று போனேன். குழந்தையைக் கொண்டுவர சந்தர்ப்பம் அமையவில்லை. பார்த்து அழுதுவிட்டு திரும்பி வந்தேன். பின்னர் இரண்டு கிழமையால் போய்ப் பார்த்துவிட்டு குழந்தையைக் கொண்டு வந்தேன். குழந்தை இவ்வளவு நாளும் அம்மாவுடன் இருந்துவிட்டு என்னிடம் வந்து ஒரே அழுகை. நான் பால் கொடுக்க குடிக்க மறுத்து விட்டது. குழந்தைக்கு தேவையானவைகளை வாங்கி எமது உறவினர்களுடன் வசிக்கத் தொடங்கினோம். இரவில் திடீர் திடீரென பலத்த சத்தமாய் அழுவான். அத்துடன் மருந்திற்கும் நிற்காத வயிற்றோட்டம். நிறையவே இருவரும் கஷ்டப்பட்டோம். அதைவிட குழந்தை என்னை விட்டுவிலக மறுத்தது. அம்மா..அம்மா ..என்று ஒரே அழுகை. நித்திரை கொள்ளும் சிறிது நேரத்தில்தான், நான் உடுப்பு தோய்ப்பது, குளிப்பது என எனது அலுவல்கள் பார்ப்பேன். இப்படி ஒரு மாதம் கழிந்த நிலையில் தான் எனது அம்மாவுடன் நாம் சேர்ந்தோம். அம்மாவைக் கண்ட குழந்தை ஒரே அழுகை. அதன் பின், குழந்தை என்னை நாடுவதை விட்டுவிட்டு என் அம்மாவையே பற்றிக்கொண்டது. தனது தேவைகளை நிறைவேற்றவே அம்மா மிகவும் சிரமப்பட்டார். என்னைவிட எனது அம்மாவை அதிகம் நேசித்தது. அம்மம்மா... அம்மம்மா... என்றபடி பின்னாலும் முன்னாலும் திரிவான். அம்மாதான் தூக்க வேண்டும். நான் தூக்கினால் அழுவான்.

அவனுக்கு அம்மா என்றால் போதும். சிலவேளை என்னை அம்மா என்று அழைப்பான். அம்மாவிடம் வாங்கோ... என்றால், என்னைக் கடந்து அம்மாவிடம் ஓடுவான். நான் தற்போது வேலைக்குப் போகிறேன். இரவுக் கடமையும் செய்வதால் எனக்கும் பிள்ளைக்குமான தூரம் அதிகரித்துவிட்டது. தற்போது அம்மாவுடனேயே குழந்தைக்கு அதிக நேரம் போகிறது. என்ன செய்வது? இப்படிப்பட்ட நிலையில் நான் மட்டுமல்ல. இன்னும் எத்தனையோ தாய்மார்கள் இருக்கிறார்கள். தாய், தந்தையை குழந்தைகள் பிரிந்து தவிப்பதற்கு யார் காரணம்? எதனால் இப்படியான வேதனைகள்? அநாதை இல்லங்களுக்கும் முதியோர் இல்லங்களுக்கும் முடிவு வராதா...? கடவுளே... இப்படியான துயரங்கள் இனி எந்தவொரு இனத்திற்கும் ஏற்படக் கூடாது.

- இலக்கியன் -

### அவலங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்

வன்னியில் நடந்த இறுதிக்கட்ட யுத்தத்தின் போது, ஏராளமான வேதனை தரும் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றினை பலர் எழுதி வருகிறார்கள். நீங்களும் உங்களுக்கு நேர்ந்த அவலங்களையும்... கண்ணெதிரே கண்டு துடித்த வேதனைச் சம்பவங்களையும்... உங்களைப் பாதித்த வலிக்கின்ற அந்தக் கொடிய நாட்களின் பதிவுகளையும் வாசகர்களோடு பகிர்ந்து கொள்ளலாம். அதற்கான களத்தினை தருகிறது சுடர்ஒளி. எனவே, நீங்களும் உங்கள் அவலங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:
''உயிர் வலிக்கும் கணங்கள்''
சுடர்ஒளி வாரமலர்,
85,ஜெயந்தமல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.




# குழந்தைக்கு பாலூட்டும் காலத்தில் வலிநீக்கி மருந்து உபயோகிக்கலாமா?

*கேள்வி: ஆண். வயது 42. மூன்று மாதங்களுக்கு முன்னர் எனக்கு கால், கைகளில் வலிப்பு நோய் (Epileptic Seizure) ஏற்பட்டு அன்றிலிருந்து வலது தோள்பட்டை தொடர்ந்து வலியாக உள்ளது. வலது பக்கம் சாய்ந்து படுக்க முடியாது. வலது கை மூலம் எதையும் தூக்க, இழுக்க முடியாது. வலது தோள்பட்டையின் மேல்புறத்தில் தொடமுடியாத வலி உள்ளது. எக்ஸ்ரே பரிசோதனை செய்து பார்த்தும் காரணம் கண்டறியப்படவில்லை. மருத்துவர்களிடம் காட்டினால் 'வலிநீக்கி' மாத்திரைகள் மாத்திரமே தருகின்றனர். உங்கள் ஆலோசனையை வேண்டுகின்றேன்.*

பதில்: கால், கைகளில் வலிப்பு நோயின்போது தோள்பட்டை பாதிப்பு ஏற்படுவது பொதுவானது. தோள்பட்டை மூட்டு முன்புறமாகவோ, பின்புறமாகவோ விலகக்கூடிய சந்தர்ப்பம் உண்டு. இப்படி விலகும்போது எலும்பு முறிவு கூட ஏற்படலாம். அல்லது தோள்பட்டை தசைகள் கிழிந்து தோள்பட்டை மூட்டு பந்தனங்கள் (Capsule) கிழிந்து அவற்றின் ஊடாக செல்லும் நரம்புகள் பாதிக்கப்படலாம்.

எனது அறிவுரை என்னவென்றால், முதலில் பாதிக்கப்பட்ட தோள்பட்டை மூட்டு மற்றும அந்தக்கையை உபயோகிப்பதை தவிர்க்கவும். இதனால் அந்தப்பகுதிகள் ஓய்வுபெற்று தசைகள் குணமாக வழிவகுக்கும் அடுத்ததாக Ortho Paedic Surgeon என்கின்ற எலும்புமுறிவு வைத்திய நிபுணரின் ஆலோசனை பெறவும்.



*கேள்வி: ஆண். வயது 39. உயரம் 5 அடி 3 அங்குலம். நிறை 48 கிலோ கிராம். ஒன்பது வருடங்களுக்கு முன்னர் எனக்கு நெஞ்சுவலி ஏற்பட்டு இதயப் பரிசோதனைகள் ECG, Treadmill Test செய்யப்பட்டன. இந்த இதயப்பரிசோதனைகள் எனது வலிக்கு காரணமில்லை என்பதும், நெஞ்சுத் தசைகளின் பிடிப்பே வலிக்கு காரணம் என்பதும் அறியப்பட்டன. ஆனால், எனக்கு அடிக்கடி Gastritis ஏற்படும். பின்னர் இரண்டு வருடங்களுக்கு முன்னர் திரும்பவும் இதேபோல் வலி ஏற்பட்டு, ECHO, மற்றும் Treadmill Test செய்யப்பட்டு - திரும்பவும் தசைப் பிடிப்பு என கண்டறியப்பட்டு சிகிச்சை செய்து குணமடைந்தேன். எனினும் அடிக்கடி நெஞ்செரிவு ஏற்படும் போது அமிலம் சமப்படுத்தும் Antacid மாத்திரைகள் சாப்பிட்டு சரிப்படுத்திக்கொள்கின்றேன். தினமும் உடற்பயிற்சி செய்வேன். குதித்தோடும் Jog Sprint பயிற்சியும் செய்வேன். Skipping என்கின்ற கயிறு அடித்தல் பயிற்சி 60 தடவைகள் செய்யமுடியும். கடந்த சில தினங்களாக எனது இடது மார்புப் பகுதியில் வலி ஏற்படுகிறது. அந்த இடத்தில் தொட்டால் வலிக்கிறது. மற்றப்படி எதுவிதப் பிரச்சினையும் இல்லை. தசைவலியாக இருக்கலாம் என்று சிறிது நாட்களுக்கு உடற்பயிற்சிகளை நிறுத்தி வைத்துள்ளேன். ஆறு வருடங்களுக்கு முன்னர் தொடர்ந்து 6 - 7 வருடங்கள் புகைபிடித்துள்ளேன். அவ்வேளைகளில் தினமும் 7 - 10 சிகிரெட் புகைத்துள்ளேன். குடியோ, மாமிச உணவோ பாவிப்பதில்லை. இயலுமான அளவு கொழுப்பு Fast Foods உணவுகளைத் தவிர்க்கிறேன். எனக்கு அடிக்கடி நெஞ்சுவலி வருவதன் காரணம் என்ன? பரிகாரம் கூறவும்.*

பதில்: நீங்கள் சுகாதார பழக்கவழக்கங்களை தொடர்ந்து கைக்கொண்டு வருவதையிட்டு பாராட்டுக்கள். உங்கள் நெஞ்சுவலி அநேகமாக தசைநார் வலியாகத்தான் இருக்கவேண்டும். இதயப்பரிசோதனைகளின் முடிவுகளை அறிந்திருப்பதனால் நீங்கள் தினமும் செய்யும் உடற்பயிற்சிகளில் நெஞ்சுவலி ஏற்படாது என்பதன் அடிப்படையில் இந்த வலி இதய சம்பந்தம் இல்லாதது என்று ஓரளவு உறுதியாக கூறமுடியும். எனினும் உங்கள் நெஞ்செரிவு Gastritis பிரச்சினையை - உணவுக் குழாய் அழற்சி என்று கூறுவார்கள். அதன் காரணமாகவும் ஏற்பட வாய்ப்புள்ளது. அதே வேளையில் உணவுக்குழாய் வால்புத் தளர்ச்சி ஏற்படுவதால் கூட இரைப்பையில் உள்ள பாதி சமிபாடடைந்த உணவு நெஞ்சுக்குள் தள்ளப்பட்டு நெஞ்சுவலி வரலாம். இதனை உணவுக்குழாய் ஏற்றம் (Hiatus Hernia) என்று அழைப்பார்கள். எனவே, Endos Copy எக்ஸ்ரே CT SCAN பரிசோதனைகள் செய்து சரியான நோய் என்னவென்று நிதானிக்கப்பட வேண்டும். Gastro Enterologist என்கின்ற விசேட வைத்திய நிபுணரின் ஆலோசனை பெறவேண்டும்.




*கேள்வி: எனது மனைவி வயது 28. நான்கு மாதங்களுக்கு முன்னர் சிசேரியன் சத்திர சிகிச்சை மூலம் பிரசவம் நடந்தது. கடந்த ஒரு மாதமாக அவருக்கு மூட்டு வலியும், பல் வலியும் ஏற்பட்டுள்ளன. முழு நாளும் இந்த வலிகளால் கஷ்டப்படுகின்றார். மருத்துவரிடம் காட்டிய போது இதற்கென்று மருந்துகள் வேண்டாம் என்று அறிவுறுத்தினார். இன்னொரு மருத்துவர் தொடர்ந்து தினமும் வலிநீக்கி மருந்து ஒன்று உபயோகிக்க எழுதித் தந்துள்ளார். குழந்தைக்கு பாலூட்டும் காலத்தில் வலிநீக்கி மருந்து உபயோகிக்கலாமா? இந்த மருந்தை உபயோகிக்கும் போது வலிகள் குறைந்துள்ளன.*

பதில்: பிரசவத்திற்குப் பின்னர் பொதுவாகவே முதல் 48 மணி நேரத்துக்கு Abdominal Cramps என்கின்ற வயிற்று நோவும் தசைச் சோர்வு Muscle Fatiguel இருப்பது உண்டு. அதுபோல் பாலூட்டும் தாய்மாருக்கு பாலூட்டும்போது அடிவயிற்றில் வலி ஏற்படுவதுண்டு. இதற்கு காரணம், பால் சுரக்க உடல் உற்பத்தியாக்கும் ஹோர்மோன் பாலூட்டும் போது கருப்பை தசைகள் சுருங்கச் செய்வதுதான். இந்த சுருங்கச் செய்வது ஒருவகையில் கருப்பையில் பிரசவத்தின் பின்னர் உள்ள இரத்த கட்டிகளை வெளியேற்றுவதற்கும் விரைவாக கருப்பையை சுருங்கசெய்வதற்கும் உதவுகிறது.


இந்த வலிகளைத் தவிர மூட்டு வலிகள், பல்வலிகள் என்பன பிரசவத்தின் பின்னர் ஏற்படுவது - அதுவும் நான்கு மாதங்களுக்கு பின்னர் ஏற்படுவது பிரசவத்தோடு சம்பந்தப்பட்ட தொன்றல்ல. கர்ப்ப காலத்தில் கல்சியம் சத்து குறைவு ஏற்படுவதுண்டு. சிசுவின் எலும்பு வளர்ச்சிக்கு தேவைப்படும் கல்சியம் தாயின் உடலிலிருந்துதான் பெறப்படுகிறது. இதன்காரணமாக தாயின் பற்களில் கல்சியம் அகற்றப்படுவதால் முரசுகரைதல், பற்கள் வலுவிழத்தல் ஏற்படலாம். இதனால் பல்வலி தோன்றலாம். மூட்டு வலி ஏற்படுவது முழுக்க வேறு காரணங்களாக இருக்கலாம். எதற்கும் நீங்கள் ஒரு பொது வைத்தியர் அல்லது Orthopaedic Surgeon எனப்படும் எலும்பு சம்பந்த விசேட வைத்திய நிபுணரின் ஆலோசனை பெறுவது நல்லது.

பாலூட்டும் காலத்தில் வலிநீக்கி மருந்துகளை தொடர்ந்து உபயோகிப்பது விரும்பத்தக்கதல்ல. இந்த மருந்துகள் பாலோடு கசிந்து குழந்தையின் ஈரல் மற்றும் உடல் வளர்ச்சிக்கு தீங்கு ஏற்படுத்துவதற்கு சந்தர்ப்பம் உள்ளது.

*கேள்வி: ஆண். வயது 50. எனக்கு புரஸ்டேட் வளர்ச்சி ஏற்பட்டிருப்பதாக என்னைப் பரிசோதித்த மருத்துவர் கூறினார். எனக்கு சிறுநீர் கழிக்க பிரச்சினை யில்லை. ஆனால், சிறுநீரை முழுக்க கழிக்க முடியாமல் சிறுநீர் - சிறுநீர்ப்பையில் (Bladder) தங்கி தேங்கி இருக்கின்றது. மருத்துவர் தந்த மருந்துகளை உபயோகித்தும் பெரிதாக பலன் எதுவும் தெரியவில்லை. ஆலோசனை வேண்டுகின்றேன்.*

பதில்; உங்கள் விவரங்களை வைத்து நோக்கும்போது உங்களுக்கு புரஸ்டேட் வீக்கத்தின் Enlargement of Prostate ஆரம்பநிலை என்று அறிய முடிகிறது. எனினும் இந்த வீக்கம் வயதிற்கேற்ற சாதாரண வீக்கமா (Benign Prostate Enlargement) அல்லது Cancer என்கின்ற புற்றுநோய் காரணமா என்பது அறியப்பட வேண்டும். சிறுநீரில் இரத்த கழிவு உள்ளதா, PSA என்கின்ற புரஸ்டேட் Antigen அதிகரித்துள்ளதா என்பவை அறியப்பட வேண்டும். ஆண்களுக்கு அதிகளவில் ஏற்படும் பயங்கர புற்றுநோய், புரஸ்டேட் புற்று நோய் என்பதை மனதில் கொள்ளுங்கள். இதற்கு ஆரம்பத்திலேயே சிகிச்சை செய்தால் குணம் காணலாம்.

ஆனால், கவனம் எடுக்காமல் இருந்தால், விரைவில் அது பெருகி,




பரவி, பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். மேலும் Benign வகை வீக்கம் எனில், மருந்துகள் மூலம் குணம் காணலாம். வீக்கம் பெரிதாயிருப்பின் அல்லது வீக்கத்தினால் சிறுநீரகப் பாதிப்பு ஏற்படின் சத்திரசிகிச்சை மூலம் அதனை அகற்றலாம். எனவே, Urologist ஒருவரின் ஆலோசனை மற்றும் தீவிர கண்காணிப்பு, வருடத்திற்கு ஒரு தடவை PSA அளவு பார்த்தல் என்பவை முக்கியம்.

**இலவச மருத்துவ ஆலோசனைகளை**

'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர்
**எஸ்.அருள் ராமலிங்கம்**
**நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்த மல்லிமாராய்ச்சி மாவத்தை கொழும்பு - 14.

# தமிழ் பேசும் மக்களின் அரசியல்?

அருள் மனோகரன்

"தமிழ் பேசும் மக்களின் எதிர்காலம் எப்படி இருக்கப் போகிறது?" அரசியல் பற்றிச் சிந்திப்போரும், அரசியல் பேசுவோரும் எதிர்கொள்கின்ற முதற்கேள்வி இதுவாகவே இருக்கிறது. இந்தக் கேள்வி சாதாரண கேள்வியல்ல. ஒவ்வொரு தமிழ்பேசும் மனிதரிடமும் உள்ள அச்சமும், எதிர்காலம் குறித்த பயமுமே இந்தக் கேள்வியாக வெளிக்கிளம்புகிறது. எனவே, இது முக்கியமான கேள்வியே. இந்த முக்கியமான கேள்விக்கான பதில் என்ன?

கடந்த அறுபது வருடங்களாக தமிழ் பேசும் மக்கள் போராடியிருக்கிறார்கள். பல வடிவங்களில், பல தலைமைகளின் கீழ், பல்வேறு வகையான தியாகங்களைச் செய்து அவர்கள் போராடியிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் பெற்றதோ தோல்வியையே! அவர்கள் சந்தித்தது துயரம், அவமானம், கொடூரம், நிர்க்கதி நிலை போன்றவையே! இவையெல்லாம் எப்படி ஏற்பட்டன? எதற்காக ஏற்பட்டன? மிக உச்சமான




தியாகத்தைச் செய்த மக்கள், மிக வியப்பூட்டும் வீரத்தைத் தொட்ட மக்கள் எப்படித் தோற்கடிக்கப்பட்டார்கள்? மக்கள் தவறு செய்தார்களா? மக்களை வழிநடத்தியவர்கள் தவறு செய்தார்களா?

எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தை தந்தை என்றார்கள். மிக அதிகமான - உச்ச மதிப்பை அந்த மனிதருக்குக் கொடுத்தார்கள். ஆனால், இறுதியில் அவர் "தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேணும்" என்று கையை விரித்தார். தலைமைத்துவப் பொறுப்பில் இருப்பவர்கள் மக்களுக்கு இப்படியான கருத்தைச் சொல்லவே முடியாதென்பது அரசியல் அறிஞர்களின் கருத்தாகும். வரலாறும் இதையே சொல்கிறது. அவ்வாறாயின், அந்தத் தலைமையின் வழிமுறையும் அணுகுமுறையும் தவறு என்பது நிரூபணமாகிறது. எனவேதான், அகிம்சை வழி அரசிய போராட்டங்களில் நம்பிக்கையற்ற அடுத்த தலைமுறை ஆயுதத்தைத் தூக்கியது.

இதெல்லாம் பழைய கதை. சகலரும் அறிந்த கதைதான். ஆனால், திரும்பத் திரும்ப ஒரே மாதிரித் தானே காரியங்கள் நடக்கின்றன என்பதால், திரும்பவும் இவற்றை எழுதவேண்டி நேர்கிறது. ஆயுதப் போராட்டத்தின் இறுதி முடிவும் செல்வநாயகம் கையை விரித்த நிலைக்கே வந்து நின்றது. மக்கள் மீண்டும் அரசியல் அநாதைகளைப் போலாகினர். இவ்வளவுக்கும் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்திற்கும், வே. பிரபாகரனுக்கும் கொடுத்தளவு முக்கியத்துவத்தையும் மதிப்பையும் வேறொருவருக்கும் தமிழ் மக்களில் பெரும்பான்மையானோர் கொடுக்கவில்லை. இந்த இரண்டு தலைவர்களுக்கும் பல வாய்ப்புக்களும் கிட்டியிருந்தன. முதலாவது வாய்ப்பும் தகுதியும் மக்கள் ஆதரவாகும். ஆனால், இறுதி முடிவு மக்கள் அரசியல் ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டதாகவே அமைந்தது.

இப்போது செல்வநாயகத்தின் பெயர் மீண்டும் அடிபடுகிறது. அவரே கையை விரித்த பிறகு, பீரங்கிகளாலும், படையணிகளாலும், கரும்புலிகளாலும், போர் அனுபவத்தாலும், மக்கள் ஆதரவுப் பலத்தாலும், கட்டுப்பாட்டு நிலப்பகுதி நிர்வாக பலத்தாலும் கூட பெற முடியாத அரசியல் பெறுபேறுகளை மீண்டும் பத்திரிகை அறிக்கைகளின் மூலம் பெறமுடியும் என்ற நம்பிக்கை முளைவிடத் தொடங்கியுள்ளது. இது தமிழ் பேசும் மக்கள் அனைவரும் சிந்திக்க வேண்டிய காலகட்டம் என்பதால் காய்தல் உவர்தல் இன்றி இந்தக் கருத்து முன்வைக்கப்படுகிறது. செல்லாக் காசாகி விட்ட சங்கதிகளுக்குப் புத்துயிர் ஊட்டுவதன் நோக்கமென்ன? முன்னரையும் விட, சிங்களப் பேரினவாதம் இப்போது பல மடங்கு பலத்தோடிருக்கிறது.

தமிழ் பேசும் மக்கள் காயத்தோடும், வலிகளின் துயரத்தோடும் எதிர்காலத்தைப் பற்றிய திட்டமிட முடியாத நிலவரத்தோடும் இருக்கிறார்கள். இந்த நிலையில் மீண்டும் பழைய வழிமுறைகளுக்காகவே அரசியலை முன்னெடுப்பது என்பது சிங்கள அதிகார வர்க்கத்துக்கே வாய்ப்பையல்லவா கொடுக்கப் போகிறது?

சிங்கள அதிகார வர்க்கத்துக்கு வாய்ப்பைக் கொடுக்கும் அரசியல் தேர்வையே தமிழ் மக்கள் கைக்கொள்ளப் போகிறார்கள்?

கடந்த கால அரசியல் முன்னெடுப்புக்கள் மற்றும் செயல்முறைகளைப் பரிசீலித்து, புதியதொரு வழிமுறையைக் காண வேண்டியது இன்று தமிழ் பேசும் சமூகத்தின் முக்கிய பொறுப்பாகிறது.

வரலாற்றுத் துயரங்களில் இருந்து விடுதலை பெறவேண்டும் என்றால், மனத்துணிவோடு இதற்குத் தயாராக வேண்டும்.



இதற்கு முதலில் தமிழ், முஸ்லிம் இரண்டு தரப்புக்களையும் பலப்படுத்துவது அவசியம். சிறுபான்மை மக்கள், தமிழ் பேசும் மக்கள் என்ற வகையில் இந்த இரண்டு தரப்புக்களையும் ஒருங்கிணைப்பது அவசியமாகிறது. இந்த ஒருங்கிணைவின் மூலமே ஒரு திட்டமான அரசியல் பலத்தை எட்ட முடியும்.

இதைத் தொடர்ந்து, இன்றைய நிலையில் எதிர்கால அரசியலுக்கான சர்வதேச, பிராந்திய நிலைமைகள் பற்றிய ஆய்வும் அவதானிப்புமுள்ள ஓர் அரசியல் பார்வையும் சிந்தனை முறையும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். அதாவது, அரசியல் சிந்தனை மையம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

இந்த அரசியல் சிந்தனை மையம் எதிர்கால அரசியல் செயற்பாட்டுக்கான வழிமுறைகளையும், செயல்திட்டத்தையும் காணும்; அதை வழிப்படுத்தும்.

இது நிச்சயம் அரசியலை அதன் பொறிமுறை சார் தொழில்பாட்டுடன் கொண்டுசெல்லமுனையும். அப்படி முனையும்போதுதான் புதிய அரசியல் முன்னெடுப்பு என்பது சாத்தியமாகும். அந்த அரசியலே தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கு யதார்த்தபூர்வமான முறையில் தீர்வுகாண உதவும்.

இது விஞ்ஞானம். அதாவது, அனுபவங்களின் வழியான பாடங்களிலிருந்து பெறப்பட்ட சிந்தனையின் பெறுபேறு. எனவேதான் இதை விஞ்ஞானம் என்கிறோம். அதாவது, அரசியல் விஞ்ஞானம். இங்கே எமது துயரம் என்னவென்றால், சிந்தனைக்கு இடமளிக்காத, விவாதங்கள் - விமர்சனங்களுக்கு மதிப்பளிக்காத ஒற்றைப் பரிமாண அரசியல் முறையே தொடரப்படுகிறது. இது எப்போதும் முன்னகரும் அரசியல் நடவடிக்கைக்குத் தடையாகும். தோற்றுப்போன அரசியலில் காணப்பட்ட அதே வழிமுறைகளுடன் ஒரு வெற்றிகரமான அரசியல் பயணத்தை தொடர முடியாது.

பேரினவாதச் சிந்தனையுடைய ஓர் அரசைக் கையாள்வதும் அதைத் தோற்கடிப்பதும் சிறுபான்மைச் சமூகத்தவர்களின் நுண்ணறிவிலும் சாமர்த்தியத்திலுமே தங்கி இருக்கிறது. *



இல்லாததை

திரிபுபடுத்துவீர்களா?

இருப்பதை

தெரியப்படுத்துவீர்களா?

நீங்கள் என்ன செய்வீர்கள்?



info@slcj.lk

தொ.பே: 0115-353-635 பக்ஸ்: 0115-335-500 www.slcj.lk

SRI LANKA COLLEGE OF JOURNALISM

We shape the future

# விலை குறைப்புகளில் தி.மு.க தீவிரம் ஜெயலலிதா தாக்குதலின் எதிரொலி

தமிழகத்தில் தேர்தல் ஜுரம் வந்தாலும் வந்ததுதான், விலை குறைப்புகளும் இலவச அறிவிப்புகளும் இடைவிடாமல் மக்கள் மீது மழைபோல் பொழியத் தொடங்கி விட்டன. இலவச டி.வி வழங்குவதாகக் கடந்த தேர்தலில் விடப்பட்ட அறிவிப்பு ஏற்கனவே பல மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டு விட்டது. மீதமுள்ள இடங்களில் அசுர வேகத்தில் டி.வி வழங்கப்பட்டு வருகிறது. குடிசைகளைக் கல்வீடாக்கும் திட்டத்தில் வீடுகளை விரைந்து கட்டிமுடிக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு இலவச நீர் இறைக்கும் இயந்திரம், சிமெந்து விலை குறைப்பு என்பனவும் புதிதாக அறிவிக்கப்பட்டுள்ளன. வாக்கு வங்கிக்கு சேதாரம் ஏற்படாத வகையில் எதையெல்லாம் செய்யமுடியுமோ அதையெல்லாம் தேர்தல் அறிவிப்பு வரமுன் செயற்படுத்திவிட வேண்டும் என தி.மு.க தலைமை கங்கணம் கட்டிக் கொண்டு செய்து வருகிறது. எல்லாவற்றுக்கும் ஜெயலலிதா நடத்திய மூன்று



கூட்டங்கள்தான் காரணம். தவிர இளங்கோவன் போன்ற காங்கிரஸார் கொடுக்கும் தலையிடியும் இதற்கு மற்றொரு காரணம் எனலாம்.

சமீபத்தில் டில்லியில் நடந்த காங்கிரஸ் தலைவர் தெரிவுக் கூட்டத்தில் சோனியா காந்தி வேறு காங்கிரஸ் வலிமை பற்றிக் கூறி தி.மு.க வயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறார். சில மாநிலங்களில் காங்கிரஸ் மற்றக் கட்சிகளுடன் கூட்டணி வைத்திருப்பதால் அங்கு காங்கிரஸ் வலிமையுடன் இல்லை என்ற முடிவுக்கு வரத்தேவையில்லை என்று சோனியா காந்தி கூறியிருக்கிறார். அதன் பிறகு பேசிய ராகுல் காந்தியோ அந்த மாநிலங்கள் எவையென்பதை ஜெயலலிதா குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறார், அதில் தமிழகமும் அடக்கம். ஆக, தி.மு.கவுடன் கூட்டணி அமைத்தாலுமே 100 இடங்களுக்குக் கிட்டவாக காங்கிரஸ் கட்சி கோருமென்பது நிச்சயம். இந்த ஆக்கினையிலிருந்து விடுபட பா.ம.கவை சேர்க்கலாம் என்றாலோ காங்கிரஸைவிட பா.ம.க இன்னும் ஒரு படி மேலே போய், தெற்கிலும் மாவட்டத்துக்கு ஒரு தொகுதி கேட்போம் என முழங்கியிருக்கிறது. இந்தப் போக்கில் பங்கிட்டுக் கொண்டுபோனால் 50 தொகுதிகள் கூட தி.மு.கவுக்கு மிஞ்சாது என்கின்றனராம் தி.மு.கவினர். தி.மு.க மீது மக்கள் அதிருப்தியில் உள்ளது போல் ஜெயலலிதாவும் இளங்கோவன் உள்ளிட்ட காங்கிரஸாரும் காட்டி வருவதால் தி.மு.க அரசின் இமேஜை உயர்த்த வேண்டிய கட்டாயம் கலைஞருக்கு ஏற்பட்டுள்ளது. இதன் ஏதிரொலியே திடீர் விலைக் குறைப்பு நடவடிக்கைகளாகும். திருச்சியில் அ.தி.மு.க கூட்டத்தில் ஜெயலலிதா விவசாயிகளின் பிரச்சினை பற்றிச் சுட்டிக்காட்ட, அடுத்த நாளே கலைஞர் விவசாயிகளுக்கு இலவச நீரிறைக்கும் இயந்திரம் வழங்கினார். இதுபோல காவிரி, பெரியாறு, பாவலாறு ஆகிய நீர்வளப் பிரச்சினைகளையும் ஜெயலலிதா கடுமையாக சுட்டிக்காட்டிவருவதால் அதற்கும் ஏதாவது செய்தாக வேண்டியுள்ளது. தமிழகத்தில் மணல் வகைதொகையின்றி அள்ளப்பட்டு கேரளவுக்குக் கடத்தப்படுவது போன்ற ஏனைய முக்கிய பிரச்சினைகளும் உள்ளன. எனினும் காவிரி மணல் அள்ளுதல் போன்ற பிரச்சினைகள் மக்களை நேரடியாகப் பாதிப்பவை அல்ல. மாநில மக்கள் சகலரையும் ஒருங்கே பாதிக்கும் பிரச்சினைகளும் அல்ல. ஆனால், விலைவாசி, மின்வெட்டு முதலான பிரச்சினைகள் பொதுவானதும் மக்களின் அன்றாட வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டவையும் ஆகும். இதனால் இவற்றை ஜெயலலிதா எழுப்பும் போது மக்கள் ஓங்கிக் கைதட்டவே செய்வார்கள் என்பது நிச்சயம். இவற்றை நிவர்த்திசெய்யாவிட்டால் தோல்வி என்பது தவிர்க்க முடியாததாகிவிடும். ஜெயலலிதாவுடைய கோவை, திருச்சி, மதுரை கூட்டங்களில் மக்கள் பெருந்தொகையில் கூடியதற்கு, மக்களின் பிரச்சினைகளை அவர் கோடிகாட்டியதே காரணமாகும். முதல்வர் கருணாநிதியைப் பொறுத்தவரை, அவர் இன்னமும் தினசரிப் பத்திரிகைகளைப் படிக்கும் பழக்கத்தைக் கொண்டுள்ளார். எனவே மக்களுக்கு இருக்கும் பிரச்சினைகளை பத்திரிகைகள் எழுப்பும் போதே அதை எதிர்க் கட்சியினர் சுட்டிக்காட்டி அது பத்திரிகைகளில் வெளிவரும் போதே அது குறித்து உடனடி நடவடிக்கை எடுக்கும் ஒருவராகவே உள்ளார். அந்த வகையில் அவர் தேறிவிடுவார் என்றே தோன்றுகிறது. மேலும் வழங்கக்கூடிய சலுகைகள் யாவும் தேர்தல் விதிகள் அமுலுக்கு வரமுன்பே செய்யப்பட வேண்டும். ஆகவே, இலவசங்கள் யாவையும் தேர்தல் விதிகள் அமுல்படுத்தப்படமுன் கொடுத்து நல்ல பெயர்வாங்கிவிட வேண்டும் என்பதில் கலைஞர் குறியாக உள்ளார். அவ்வகையில் பார்க்கும்போது ஜெயலலிதாவை விடவும் அவதானமாக நடந்துகொள்பவராக கலைஞர் இருப்பது குறிப்பிடத்தக்கது. ஆனாலும் ஏனைய தி.மு.கவினர் இது பற்றி அலட்டிக் கொள்ளவில்லை என்பதே கவலைக்குரிய விடயமாகும். ஐந்து முறை முதல்வராக

**எஸ்.சுரேந்திரஜித்**


இருந்துள்ள கலைஞர் ஆறாவது முறையும் முதல்வராவார் என ஸ்டாலின் தெரிவித்துள்ளார். அது நடந்தால் முழு இந்தியாவிலுமே அவ்வாறு சாதனை நிலைநாட்டிய இரண்டாவது முதல்வராக அவர் இருப்பார். ஆறுமுறை தொடர்ந்து முதல்வராக இருந்த சாதனைக்குரியவர் மூத்த இடதுசாரித் தலைவரான ஜோதிபாரசுவே, முடிந்தவரை சலுகைகளையும் அள்ளி வீசி ஆட்சிக் கதிரையைத் தக்கவைக்கும் கலைஞரின் தந்திரமும் எதிர்க் கட்சிகளின் தாக்குதலில் இருந்து தப்பவில்லை.



இலவசமாகக் கொடுத்து மக்களை சோம்பேறி ஆக்குகின்றார் என்பதே அந்தக் குற்றச்சாட்டு ஆகும். முன்பு பா.ம.கவே இந்தக்குற்றச்சாட்டை முன்னெடுக்கும் முக்கிய கட்சியாக இருந்தது. இன்றோ தி.மு.கவுடன் அணிசேரும் எண்ணத்தில் பா.ம.க சற்றே அடக்கி வாசித்து வருகிறது.

பா.மா.கவை வளைத்துப் பிடித்தது போலவே, திருமாவளவனையும் தனது பிடிக்குள் வைத்திருக்கவே கலைஞர் விரும்புகிறார். சமீபத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கும் காங்கிரஸுக்கும் இடையே வெடித்துக் கிளம்பிய சண்டை மேலும் பெரிதுபடாமல் திருமாவளவன் காத்துக் கொண்டுள்ளார். ஆக, விடுதலைச் சிறுத்தைகள் தி.மு.க அணியில் இருக்கும் என்பதும் தெளிவாகிவிட்டது.

இதேவேளை அ.தி.மு.கவிலிருந்து விலகிச்சென்ற நடிகர் ராதாரவி மீண்டும் அ.தி.மு.கவில் சேர்ந்தும் அதுகுறித்த புகைப்படத்தை நோயல் கார்டன் வெளியிட்டதும் பரபரப்பாக பேசப்படும் விடயங்களாக உள்ளன. அதாவது, எதிரிகளையும் அரவணைத்துச் செல்ல 'ஜெ' தயாராக உள்ளார் என்பதும் இதன் மூலம் தெளிவாகியிருக்கிறது. எந்தப் பிசாசையும் சேர்த்துக் கொள்ளலாம்; கருணாநிதியின் ஆட்சியை ஒழித்துக் கட்டவேண்டும் என்பதே ஒரே நோக்கமாகும். ராதாரவியை ஏற்றுக் கொண்டதன் மூலம், விஜயகாந்த் கட்சியையும் ஏற்கத் தயார் என்பதையே ஜெயலலிதா இதன்மூலம் கோடி காட்டியுள்ளார். இத்தனைக்கும் ராதாரவி அ.தி.மு.கவிலிருந்து வெளியேறியதும் காங்கிரஸில் சேரவே முயன்றார். ராகுல் காந்தியையும் சென்ற வாரம் டில்லியில் சந்தித்திருந்தார். அவர் கேட்ட பதவி கிடைக்காததால் தான் அ.தி.மு.கவில் சேர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. காங்கிரஸ் உதறிவிட்ட குப்பைகளை உள்வாங்கிக் கொள்ளும் குப்பைக் கூடையாக அ.தி.மு.க மாறியிருக்கிறது என, காங்கிரஸ் தலைவர் ஒருவர் கிண்டலாகக் கூறியிருக்கிறார். 'ஜெ' இதைப் பற்றியெல்லாம் கவலைப்படுபவர் அல்லர். அவரைப் பொறுத்தவரை, முதல்வர் ஆசனத்தில் அமரும் வரை எந்த எதிரிகளையும் சேர்த்துக்கொள்வது; அமர்ந்த மறுவிநாடியே தனது வலதுகரமாகத் திகழ்ந்தவர்களையும் உதறி எறிவது என்பதுதான் கொள்கையாகும். அவரது நடவடிக்கைகளுக்கு விளக்கம் தர எவராலும் முடியாது. உதாரணமாக, கோவை மாவட்ட அ.தி.மு.க தலைவர் செ.ம.வேலுச்சாமியின் பதவி அண்மையில் 'ஜெ'வால் பறிக்கப்பட்டது. ஜெயலலிதா அண்மையில் நடத்திய மூன்று பெரிய கூட்டங்களில், முதலாவது கூட்டத்தை கோவையில் முன்னின்று நடத்தி முடித்தவர் இந்த செ.ம.வேலுச்சாமி. கடந்த லோக்சபா தேர்தலில் கோவையில் வெல்வதற்கு இவரது தலைமையே காரணம் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வளவு வெற்றிகளை ஜெயலலிதாவுக்குக் குவித்துக் கொடுத்த வேலுச்சாமிக்கு இந்தத் தண்டனை ஏன் என்பது யாருக்குமே புரியவில்லை. அம்மாவின் அரசியலே இதுதான். உழைக்கும் தொண்டனுக்கு இடமில்லை; ஜால்ரா போடுபவனுக்கே பதவியும் உபசாரமும் என்பது ஜெயலலிதாவின் அரசியலாகும். இது கல்வியறிவு வளராத 20 ஆண்டுகளுக்கு முன்பு எனில், யாருக்கும் தெரிய வாய்ப்பில்லை. இன்றோ, பத்திரிகைகள் வேலுச்சாமியே நினைக்காத அளவுக்கு ஜெயலலிதாவுக்கு வேலுச்சாமி செய்த உதவிகளை விலாவாரியாக எழுதித் தள்ளியுள்ளன. இதை வாசிக்கும் எந்த அ.தி.மு.க தொண்டனுக்கும் அ.தி.மு.க



தலைவி மீது நிச்சயமாக வெறுப்பு ஏற்படவே செய்யும். ஆக, கருணாநிதியின் அமைச்சர்கள் காட்டும் ஏகபோகத்தனமாயினும் சரி, ஜெயலலிதா தனது கட்சி விசுவாசிகளை தூக்கி எறிவதாயினும் சரி, பத்திரிகைகள் வாயிலாக மக்களைச் சென்றடையவே செய்கின்றன. ஜனநாயகத்தின் 4ஆவது தூண் எனப்படும் பத்திரிகைகளின் கடமையும் அதுவே. அவ்வகையில் எதிர்வரும் 2011 லோக்சபா தேர்தல் முடிவைத் தீர்மானிப்பதில் பத்திரிகைகள் பிரதான பாத்திரம் வகிக்கும் என்பது உண்மையே ஆகும். உலகின் மிகச் சிறந்த ஜனநாயகத்தில் இந்த 4ஆவது தூண் தன் கடமையை சரிவரச் செய்வது அவசியம் ஆகும். *

யுத்தம் நடைபெற்ற நாட்களில் வன்னியில் எவ்வளவோ சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. தாங்கள் எதிர்கொண்ட அவலங்களை, தங்களுக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவங்களை பலர் 'உயிர் வலிக்கும் கணங்கள்' என்ற பகுதியில் எழுதி வருகிறார்கள். அதே போன்று வன்னியில் இடம்பெற்ற சம்பவங்களைப் பலர் கதை வடிவிலும் எழுதி வருகிறார்கள். இந்தத் தொடரில் அளம்பில் ரமேஷ் எழுதிய 'அநாதைகள் பிறப்பதில்லை' என்ற உண்மைக்கதையின் இறுதிப் பாகம் வெளிவருகிறது.

# அநாதைகள் பிறப்பதில்லை...

## 02

இவர்கள் குடியிருந்த வீடு மேனகாவின் பெரியப்பாவின் வீடுதான். வாடகைக்கு விடுவதற்காக அவர் தம் வீட்டை காணியோடு சேர்த்துக் கட்டியிருந்தார். அந்த வீடு இவர்களை அணைத்துக் கொண்டது. காற்றில் கற்பூரம் கரைவது போல் நாட்கள் காணாமல் போக, மேனகாவும் லவன், விஷ்ணுவும் சனி, ஞாயிறுகளில் சந்திக்க வாய்ப்புக்கள் அமைந்தன. மூவரும் என்னதான் பணம், பதவி என்ற போர்வைக்குள் இருந்தாலும்... சாதாரண மனித உணர்வுகளுக்கு உட்பட்டவர்களே!

வீட்டிலே குடியேறிய லவன், மேனகாவின் மனதிலும் வாடகை கொடுக்காமலே குடியேறினான். இருந்தும், லவனுக்கு இந்த உறவு பற்றி அப்போது தெரியவில்லை. லவன் மேனகாவின் இதயத்தில் வசிக்க, விஷ்ணுவின் மனதை மேனகா ஆக்கிரமித்தாள். இந்தக் காதல் மூன்று பேரினதும் உள் மனங்களுக்குள்ளேயே வசித்த போது... விஷ்ணு தன் காதலை அவளிடம் தெரிவித்தான். அவளோ, அதிர்ச்சியோடு லவனை விரும்புவதாக இவனிடம் ஒப்புவித்து உதவி கேட்டாள். தன் காதலைக் குழிதோண்டிப் புதைத்தவன், மேனகாவின் காதலை தன்னுடைய நண்பனிடம் தெரிவிக்க தூதுவனாகினான். அவனின் தூது லவனின் காதல் செடி துளிர்க்க ஆகாரமாகியது. தனது காதல் கருகிப் போனாலும், தனக்கு நேசமானவள் சந்தோஷமாய் இருக்க வேண்டுமென இறைவனிடம் பிரார்த்தனை செய்து கொண்டான்.

இப்படியிருக்கும் வேளை... மருந்துத் தேவை வன்னிக்கு அதிகமாகவே தேவைப்பட, ஒரு பணிவிடயமாகவும் அத்தோடு தன் வீட்டாரையும் பார்த்துவிட்டு வருவோமென... யாழ்நகர் பயணமானான் விஷ்ணு. தன் நண்பனையும் மேனகாவையும் இறுதியாகச் சந்தித்துவிட்டுப் போவதை அவன் அப்போது அறிந்திருக்கவில்லை.

விஷ்ணு யாழ்ப்பாணம் போக, வன்னியை போர்மேகம் சூழ்ந்து கொண்டது. அக்கினிக் குஞ்சுகள் ஆங்காங்கே மனித உயிர்களை விழுங்கிக்கொண்டே வந்தன. சுடலைகள் நிறைந்து... ஊர்கள் சவங்களைப் புதைக்குமிடங்களாகின. இந்த உக்கிரமான நேரத்தில்தான் காயப்படும், இறக்கும் மக்களுக்காக தன்னையே அர்ப்பணித்தான் லவன். மேனகாவை சந்திக்கக்கூட அவனுக்கு நேரம் கிடைப்பதில்லை. பம்பரமாக நாள்முழுதும் சுழன்று பணிசெய்து கொண்டிருந்தான். சில வைத்தியர்கள் போல... இந்தப் புனிதமான பணிக்கே இழுக்காக இல்லாமல் மிடுக்காகச் சேவை புரிந்தான். விஷ்ணுவோடு தொலைபேசியில் மாத்திரம் உரையாட முடிந்தது. தமது வன்னி நிலைவரங்களை லவன் பகிர்ந்து கொள்வான் விஷ்ணுவோடு. கூடவே மேனகாவைப் பற்றியும், தன் காதலைப் பற்றியும் இத்தனைக்கும் நடுவிலும் சொல்லிவிடுவான்.

குண்டுகளால் குதறப்பட்டுக் கிடந்த மக்கள் கூட்டத்தை, தன் கரங்களால் குணமாக்கிக்கொண்டிருந்தான் லவன். மாஞ்சோலை மருத்துவமனை பரபரப்பாக இயங்கிக்கொண்டிருந்த நேரம். யாருமே எதிர்பார்க்கவில்லை. அந்த துயரச்சம்பவம் நடந்து முடிந்து விட்டது. சிலாவத்தை கடற்பரப்பிலிருந்து ஏவப்பட்ட எறிகணைகள், மருத்துவமனை வளாகத்தையே புரட்டிப் போட்டன. நோயாளிகளோடு சேர்ந்து இந்த மக்கள் சேவகனும் மரணப்படுக்கையிலே மாய்ந்தான். எறிகணைகள் வைத்தியசாலையை சிதைத்துக் கூறு போட இரு கட்டடங்கள் நோயாளிகளோடு சேர்த்து கற்குவியல்களாகிப் போயின. அப்போதுதான், அளம்பில் கிராமத்தைச் சேர்ந்த கபிலன் எனும் உயர்தர வகுப்பு மாணவன் துப்பாக்கிச் சன்னம் பட்டு உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தான். அவனுக்கு ஆறுதல் வார்த்தைகளையும், தன்னால் முடிந்த சிகிச்சைகளையும் லவன் செய்து கொண்டிருந்தான். அந்தக் கணத்தில்தான், இந்த அவலம் நிகழ்ந்து முடிந்தது.

குண்டுகள் வளாகத்தை ஆக்கிரமிக்க அவன் நின்ற அறையில் நோயாளிகள் ''ஓ'' வெனக் கதறியபடி எழுந்து ஓடத் தொடங்கினார்கள். இவனுக்கு புரிந்து விட்டது. தமது இறுதிக் கணங்கள் வந்துவிட்டன என்று எழ முடியாமல் தடுமாறிக் கொண்டிருந்த கபிலனை தன்னோடு சேர்த்து அணைத்தபடி ''தம்பி! நீ எழும்பாதே!! நான் உன்னோடு இருக்கிறேன்... பயப்படாமல் அண்ணாவோடு இரு...'' என்றபடி அவனோடு கூடவே இருந்தான். அப்போது ஓர் எறிகணை கட்டடக் கூரையை உடைத்துக்கொண்டு இவர்கள் இருந்த அறைக்குள்ளேயே வந்து வெடித்தது. அவ்வளவுதான்! இந்த மருத்துவனோடு கபிலன் மற்றும் அந்த மாஞ்சோலை வைத்தியசாலை வளாகத்திலிருந்த தொண்ணூறு வீதமான மக்கள் இறந்து போயினர். அவன் செய்த சமூகப் பணிக்குக் கிடைத்த பரிசுதான் இது.

மேனகா இச்சம்பவத்தைக் கேட்டு, அழவில்லை! தன் வாழ்க்கைத் தொடர் முடிந்ததாகவே எண்ணினாள். மனதிலே... கணவனாக நினைத்து குடும்பம் நடத்திய லவன், இன்று மடிந்ததும், இவள் மனசு கல்லாகியது. விடயத்தை விஷ்ணுவுக்கு போனிலே சொன்ன இருநாட்களில், அவளது பெரியப்பா குடும்பம் தொலைந்து போனது. தனித்தாள்; தவித்தாள்; யாருமேயின்றி துடித்தாள். தொடர்புகள் அறுந்துவிட, போரும் சுருங்கிவிட காலம் ஓடி... மேனகா கொழும்பில்!

* * * *

மறுநாள்... மேனகா வீட்டில் குழந்தை லவணிதாவோடு விஷ்ணு.

''மேனகா! இந்தக் குழந்தை...''

அத்தோடு நிறுத்திவிட்டு, தன்னைக் கடிந்து கொண்டான். ''லவணிம்மா... வாம்மா...'' வென மேனகா வீட்டிலிருக்கும் அம்மா, குழந்தையை தூக்கிக் கொண்டு வெளியே செல்ல ''விஷ்ணு! இவள்... என்னைப் போலவொரு அநாதை... வன்னியில் பிறந்தவுடனேயே தாயை தகப்பனைப் பறிகொடுத்த



அளம்பில் ரமேஷ்

குழந்தை. எனக்கும் துணையென்று யாருமில்லையே! அதுதான் இவளை என் குழந்தையாக்கிக் கொண்டேன். அப்போ... இந்த அம்மா யாருன்னு நினைப்பீங்க. அவங்களும் நம்ம இனம்தான். அதாவது, அனாதை... எல்லா உறவுகளையும் இழந்து தனியே... அகதி முகாமில் இவங்க இருந்தபோது... நான் என்னோடு வாறீங்களா என்றேன்... வந்துட்டாங்க. என் சொந்த அம்மா மாதிரி... இப்போதான், நான் இதுவரை இழந்த அத்தனை உறவுகளும் கிடைத்தமாதிரி ஓர் உணர்வு விஷ்ணு...'' என்றவளின் விழிகளில் நீர்த்துளிகள் பூக்கத் தொடங்கின.

''மேனகா! நீ...ங்...க அநாதையென்று யார் சொன்னது? உங்க மூன்று பேருக்கும் உறவாய் நானிருக்கேன். அப்போ என் நண்பனுக்காக என் காதலை விட்டுவிட்டு வந்தேன். ஏன்னா... நீ லவ் பண்ணியவன் உனக்கு கிடைப்பதுதான் சரி. ஆனால்... இப்போ கேட்கிறேன். உன்னை நினைச்சே இன்றைக்கு வரை வாழும் என்னை... நீ ஏத்துக்கொள்வியா... என் காதலைச் சொல்ல எனக்கு வேற வழி தெரியலை மேனகா...'' அவன் மேற்கொண்டு பேசாமல் சுவரை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''என்ன விஷ்ணு நீங்க! லவனை நினைச்சு... அவரோடையே குடும்பம் நடத்தின மாதிரி கனவோட வாழ்ந்தவ நான். கண்ட கனவுகள் அத்தனையும் கானலாகி காணாமல் போயிடிச்சே! வேண்டாம் விஷ்ணு. வேண்டாம்! உங்களோட தகுதிக்கு இந்த அநாதை வேண்டாம். அதை விட... நான் உங்க நண்பரோட காதலி. எனக்கு இந்த ரெண்டு உறவுகளுமே போதும். நீங்க வேற யாரையாவது....''

''போதும் மேனகா! அநாதை... அநாதை என்று உன்னை நீயே சொல்லுறது போதும்! அநாதைங்க பிறக்கிறதில்லை. அவங்க சூழலாலும் காலத்தாலும்தான் உருவாக்கப்படுறாங்க... நீ என் நண்பனோட காதலியாக இருந்தாலும்... அவன் ஆத்மா மேல அடிச்சு சொல்றேன். உன்னைத் தவிர எனக்கு இனி... துணையாக யாருமே வரமுடியாது...'' அவனையறியாமலே பேசிவிட்டான்.

மேனகாவினால் தொடர்ந்து அவனோடு வாதிட முடியவில்லை. ''இதோ பார் மேனகா! என் நண்பன் இருக்கும்போதே... உன்னை நான் கல்யாணம் பண்ணும்படி கேட்கலை. தனியா தவிக்கும் உன்னைத்தான் கேட்கிறேன். நீ எப்படிப் பிடிவாதம் பிடிச்சாலும் என் முடிவு மாறாது. நீ மனம் திரும்புற வரை... நான் காத்திருப்பேன்...'' தனது இறுதியான மனக்கிடக்கையையும் கொட்டிவிட்டு வெளியேறினான் விஷ்ணு.

அவள், அவன் போவதையே கண்ணீரோடு பார்த்துக்கொண்டிருந்தாள். இந்த மேனகாவின் மனம் திரும்புதலுக்காய் காத்திருக்கும் ஒரு விஷ்ணுவைப் போல... ஆயிரம் விஷ்ணுக்கள் வன்னியில் காத்திருக்கிறார்கள். அத்தோடு ஒரு லவணிதாவுக்கு உறவுகள் கிடைத்துள்ளனர். ஆனால், பல லவணிதாக்களுக்கு இன்னும் கிடைக்கவில்லையே!!!

(முற்றும்)

## சொற்சிலம்பம் போட்டி இல. 443

சொற்சிலம்பம் 443 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய இறுதித்தினம் 2010 ஆம் ஆண்டு நவம்பர் 27 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் டிசம்பர் 05 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 441 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன. தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 443




**இடமிருந்து வலம்**

1. ஈரானின் பழைய பெயர்.
4. புராதன - தொடக்க காலம்.
6. வருவதற்கு.
7. உறுதியும் கடினத் தன்மையும் கொண்ட.
8. கோள்.
10. வழக்குத் தொடுப்பவர்.
11. (கண்கள் கண்ணீரால்) ஈரமாதல்.
12. சிறு குன்று.
13. (உடை போன்றவற்றை) அகற்றிவிடுக.
15. கடவுள்.
16. வேள்வி.
18. நெருப்பு.

**மேலிருந்து கீழ்**

1. மேலும் செலுத்தப்பட வேண்டியிருப்பது.
2. இரட்டைக் காப்பியங்களில் ஒன்று.
3. கை.
4. பலர் கூடியிருக்கும் இடத்திலிருந்து எழும் சத்தம்.
5. சத்தத்துடன் வேகமாக.
9. தகராறு - கலாட்டா.
12. பொறுக்க முடியாத அளவுக்கு அதிகமான.
13. விநாயகர்.
14. பிரணவ மந்திரம்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி' 85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு 14.




### பரிசு பெறுவோர்

1. **கு.மயூதரன்,**
புண்வாழ்வு மையம்,
தெல்லிப்பளை,
யாழ்ப்பாணம்.
2. **வே.கார்த்திகேசு,**
விபுலாநந்தர் வீதி,
வாழைச்சேனை.
3. **எஸ்.வரதராஜன்,**
25/3, மாரியம்மன்
கோவில் வீதி, கல்லடி,
மட்டக்களப்பு.

### பாராட்டுப் பெறுவோர்

. திருமதி சர்மிளா துஷ்யந்தன்,
செல்வநாயகபுரம்.
. எஸ்.பி.விஷ்வநாதன்,
மடுல்சீமை.
. கே.எப்.சுபானி, ஏறாவூர் - 06.
. யூ.செல்லத்தம்பி,
கல்முனை - 03.
. திருமதி எஸ்.ரெஜினோல்ட்,
பண்டாரவளை.
. செல்வி. வி.கீதவாணி,
கரவெட்டி.
. எம்.பாலகிருஷ்ணன்,
வெள்ளவத்தை.
. செல்வி.பி.அபிநயா,
கொழும்பு.
. கி.அக்ஷணன்,
திருகோணமலை.
. ஆர்.குழந்தைவேலு,
கோண்டாவில்.
. வே.சத்தியமூர்த்தி,
வல்வெட்டித்துறை.
. பா.வசந்தன்,
கொழும்பு - 13.
. ஏ.பி.எம்.இர்ஷாட்,
பாலமுனை - 04.
. செல்வன்.ஆர்.வியாகரன்,
வவுனியா.




பாலகிருஸ்ணன்,
திருகோணமலை.

**கேள்வி: அரசியலில் குடும்ப ஆதிக்கம் இருப்பதுபோல் சினிமா துறையிலும் குடும்ப ஆதிக்கம் உண்டா?**

பதில்: ஆம். ஹொலிவுட், பொலிவுட் சினிமாக்களில் குடும்பங்களின் ஆதிக்கம் ஆழமாகவும் அகலமாகவும் வேரூன்றியுள்ளது. ஹொலிவுட் சினிமாவில் லயனல் பாரிமோர் ஊமைப் படங்களில் நடிக்கத் தொடங்கினார். இப்போது அவருடைய நான்காவது தலைமுறையும் நடிக்கத் தொடங்கியிருக்கிறது. பாரிமோர் குடும்பத்தினர் 683 சினிமாக்களில் நடித்துள்ளனர். அதேபோல கொப்போலா குடும்பத்தினரும் 583 ஆங்கிலப் படங்களில் நடித்துள்ளனர். இதுபோல் ஹஸ்டன் குடும்பத்தைச் சேர்ந்த மூன்று தலைமுறையினர் அகடமி விருது பெற்றுள்ளனர். இதற்கு அடுத்த குடும்பம் அர்குவெட். இக்குடும்பத்தைச் சேர்ந்த பலர் இன்றும் நடிக்கின்றனர்.

இந்த நிலை போலிவுட்டிலும் காணப்படுகிறது. பிரித்விராஜ் கபூர், ராஜ்கபூர் ஆகியோரைத் தொடர்ந்து ஈஷி கபூரும் பிரபல்யமான கதாநாயகர்களாக நீடித்தனர். இப்போது நாலாவது தலைமுறையைச் சேர்ந்த ரன்பீர் கபூரும் ஹிந்தி சினிமா ஹீரோவாகி இருக்கிறார். இவர்களது குடும்பத்தினர் மட்டும் 92 படங்களில் நடித்துள்ளனர். அசோக் குமாரின் கங்குலி குடும்பத்தினரும் ஏராளமான படங்களில் நடித்திருக்கின்றனர்.

அக்ஷஸ்,
மட்டுவில்.

**கேள்வி: பித்தா, ராமர் பாலத்தைக் கட்டியவர் யார்?**

பதில்: தமிழகத்தை இலங்கையோடு இணைக்கும் ராமர் பாலம் மனிதரால் கட்டப்பட்டதாக இருக்கலாம் என்று இந்திய மத்திய அரசுத்துறை வெளியிட்டுள்ள புத்தகம் ஒன்றில் காணப்படுகிறது. ஏற்கனவே நம்பிக்கொண்டிருந்தது போல் குரங்குகளால் கட்டப்படவில்லை. இந்தப் பாலம் 17 லட்சத்து 50 ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தது என இந்திய தொல்பொருள் ஆய்வுத்துறைக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. பாலத்தின் அமைப்பு, அது மனிதர்களால் கட்டப்பட்டதாக இருக்கலாம் என்பதை உணர்த்துவதாக இருக்கிறது. 30 கிலோ மீட்டர் நீளமான மணல் திட்டுக்களால் ஆனது இந்தப் பாலம்.

ஏ.பி.எம்,
மட்டக்களப்பு.

**கேள்வி: இன்று உலகிலுள்ள பிரபலமான உளவு நிறுவனங்கள் எவை என்று சொல்ல முடியுமா?**

பதில்: அமெரிக்கா, ரஷ்யா, இஸ்ரேல், பாகிஸ்தான், இங்கிலாந்து, இந்தியா ஆகிய நாடுகளின் உளவு நிறுவனங்கள் முறையே பின்வருமாறு: சீ.ஐ.ஏ., கே.ஜீ.பி., மொஸ்ஸாட்., ஐ.எஸ்.ஐ., எம்.ஐ. 5., ரோ.

நாதன்,
வவுனியா.

**கேள்வி: ஜேம்ஸ் போன்ட் நாவல்களைப் பற்றி?**

பதில்: இவற்றை இயான் பிளமிங் என்பவர் எழுதினார். இவர் எம்.ஐ உளவு அமைப்பின் உளவாளிகளில் ஒருவர். அவர் தான் உளவாளியாகப் பணியாற்றிய காலத்தில் திரட்டிய தகவல்களையும் அனுபவங்களையும் கற்பனையுடன் கலந்து எழுதிய கதைகள் தான் ஜேம்ஸ் போன்ட் நாவல்களாகவும் பின்னர் படங்களாகவும் வெளியிடப்பட்டன.

வசந்தன்,
புதுக்குடியிருப்பு.


**கேள்வி: மனிதன் முதன்முதலில் கண்டுபிடித்த உலோகம் எது?**

பதில்: தாமிரம்.

ரவி,
ஏறாவூர்.

**கேள்வி: மகாபாரதத்தின் இலட்சியம் என்ன பித்தரே?**

பதில்: நிச்சயமாக கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் இடையே இடம்பெற்ற யுத்தம் பற்றி மட்டும் அது பேசவில்லை. அது வாழ்க்கையைப் பற்றிப் பேசுகிறது. வாழ்க்கை ஆழமானது. அதை எப்படியெல்லாம் சமாளிக்க வேண்டும், குழப்பங்களை எப்படி முறியடிக்க வேண்டும் என்று போதனை புரிகிறது. இந்தக் குழப்பமான உலகில் சண்டை சச்சரவு இல்லாமல் தெளிவாக முடிவெடுக்கக் கற்றுத் தருகிறது.




அஸ்வின்,
கொழும்பு.

**கேள்வி: எனது முன்னாள் காதலியும் தற்போது பிறரது மனைவியாகி, ஒரே வீட்டில் பிரிந்து வாழும் நிலையில் இருக்கின்றவருக்கு என்னால் உதவி செய்ய முடியுமா? அவளுக்குத் தற்போது இரத்தப் புற்று நோயும் இருப்பதாகக் கேள்விப் பட்டேன்.**

பதில்: முன்னைய காதலை முற்றிலும் மறந்து, அழியப் போகும் உடலுக்கு ஆன்ம பலம் வழங்க முடிந்தால், அத்தோடு கடவுளின் பார்வையில் நீங்கள் அவளைச் சகோதரியாகவும் நினைத்தால் உதவி செய்வதில் தவறில்லை.

மயூரன்,
மானிப்பாய்.

**கேள்வி: இந்த ஆட்சியில் உயர்ந்த உத்தியோகம் ஒன்றைப் பெற என்ன செய்ய வேண்டும் பித்தா?**

பதில்: ஆளும் கட்சியினரின் உயர்ந்த தலை ஒன்றுக்கோ பலவுக்கோ பூரண கும்ப மரியாதையுடன் ஆரத்தி எடுங்கள். அப்போது அவர்கள் உயர் பதவியொன்றைத் தாரை வார்ப்பார்கள்.

கோபி,
கிண்ணியா.

கேள்வி: ரோமியோ-ஜூலியட், சலீம்-அனார்கலி, அம்பிகாபதி- அமராவதி ஆகியோரின் சரித்திரங்கள் சொல்லும் கதை என்ன?

பதில்: இந்தச் சரித்திரங்கள் காதலின் துக்ககரமான அஸ்மனத்தைத் தான் சுட்டிக் காட்டுகின்றன.

டிலான்,
மாவடி.

**கேள்வி: பொன்சேகாவுக்குச் சிறைத் தண்டனை கொடுக்கப்பட்டதை ஆளும் கட்சியிலுள்ள அமைச்சர்கள் விரும்புகிறார்களா?**

பதில்: அப்படிச் சொல்ல முடியாது. பதவிக்குப் பயந்து பலர் அதை ஆதரித்தாலும் உள்ளுக்குள் அவர்கள் கடும் வெறுப்போடு தான் இருக்கிறார்கள். இவ்விடயம் பற்றிப் பேசா மடந்தைகளாக இருந்த அவர்களை ஒரு தடவை ஜனாதிபதி எச்சரித்த பிறகு தான் ஒவ்வொருவராக அதனை அங்கீகரித்ததாக நம்பகமான ஒரு கதை இருக்கிறது. ஆட்சிக்கு அச்சுறுத்தல் வந்தால் அடுத்த பக்கத்துக்குத் தாவுவதற்கும் பலர் இருக்கிறார்கள் என்று கேள்வி.

# யாழ் நகரில் SPOT ADMISSION மூலம் IELTS இன்றி UK இல் உயர் கல்வி வாய்ப்பினை வழங்கும் FLEX INSTITUTE

- உங்களுடைய படிப்புதான் உங்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்தும்
- உங்களுடைய படிப்பு தான் உங்கள் முன்னேற்றத்தைக் கொடுக்கும்
- உங்களுடைய படிப்புதான் உங்களை சமுதாயத்தில் சிறந்தவராக ஆக்கும்.

ஆக படிப்பு என்பது ஒருவரது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான அரிய சந்தர்ப்பம்.




flex Institute
*Step Towards a Bright Future*

அண்மையில் FLEX INSTITUTE நிர்வாக இயக்குனர் திரு அவர்கள் WESTEND COLLEGE LONDON இல் Dr. Naeem-CEO அவர்களை நேரில் சந்தித்து உரையாடியதின் நிமித்தம் 'SPOT ADMISSION" மூலம் எம் மாணவர்கள் உயர் கல்வி கற்பதற்காக UK செல்வதற்கான சகல ஏற்பாடுகளையும் வெற்றிகரமாக செய்து நாடு திரும்பியுள்ளார்.

வெள்ளவத்தையில் கடந்த ஐந்து வருடகாலம் FLEX GRAPHIC விளம்பர நிறுவனத்தையும் FLEX INSTITUTE கல்வி நிலையத்தோடு FLEX TRAVELS என்ற வெளிநாட்டுப் பயண முகவர் நிலையத்தையும் வெற்றிகரமாக நடாத்திவரும் FLEX INSTITUTE கல்வி நிலையம் மக்கள் மத்தியில் நன் மதிப்பையும் நம்பிக்கையையும் வென்றுள்ளது. அவர்கள் யாழ்நகரிலும் உயர்கல்விகற்கும் மாணவர்களுக்கு தமது சேவையை நடாத்ததிட்டமிட்டுள்ளார்கள். அதன் காரணமாக வெளிநாட்டில் அமைந்துள்ள WESTEND COLLEGE LONDON நிறுவனத்துடன் இணைந்து அக் கல்வி நிறுவனத்தின் அதிகாரிகளோடு யாழ் நகரில் வெளிநாட்டில் உயர் கல்வி கற்க விரும்பும் மாணவர்களின் நன்மைகருதி 20th NOVEMBER 2010 அன்று GREEN GRASS HOTEL & RESTAURANT No. 33, Aseervatham Lane, Hospital Road, Jaffna. விலாசத்தில் காலை 10.00 முதல் மாலை 4.00 வரை SPOT ADMISSION ஒன்றினை நடத்தவுள்ளார்கள் VISA கிடைக்கும் முன்போ அல்லது VISA கிடைத்த பின்போ எவ்விதமான கட்டணமும் அறவிடப்படமாட்டாது முற்றிலும் இலவசமாக செய்து கொடுக்கப்படும் மாணவர்கள் விசா அனுமதிக்கா தமது சொந்தக்கணக்கில் அல்லது பெற்றோரின் கணக்கில் ஆகக் குறைந்தது 28 நாட்கள் நிதியிருப்பு (28 DAYS Bank Balance) இருப்பின் போதுமானது. Free Air Port Pickup (from UK to Hostel) Internet Broad Band வசதியுடன் முற் பணமின்றி Accommodation என்பன ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

வெளிநாட்டில் உயர்கல்வி கற்க விரும்பும் மாணவர்கள்

1. சுயவிபரக்கோவை CV,
2. கடவுச்சீட்டின் தகவல் பிரதி,
3. கல்வித்தகைமை (o/L /A/L Degree),கல்விச்சான்றிதழ்கள் போன்ற ஆவணங்களை சமர்ப்பித்தல் அவசியம் (நேரில் வருமுன் 0777 761 346 தொடர்பு கொண்டு அறியத்தரவும்) Flex Institute 04. IBC வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06.

தொலைபேசி: 0777 761 346 Web: www.flexinstitute.lk Email:- flexinstitute@sltnet.lk

## Flex Institute வழங்கும் தனித்துவமான கணினிக் கற்கை நெறிகள்

வெள்ளவத்தை இலக்கம் 04, IBC வீதியில் அமைந்துள்ள Flex Institute அண்மைக்காலமாக Kids Computer, MS Office, Packages Graphic Designing, Web designing, Accounting என சகல வயதினருக்கும் பயன்படும் கணிணிக்கற்கை நெறிகளை ஆரம்பித்து நடாத்திவருவது குறிப்பிடத்தக்கது.

முற்றுமுழுதாக 4 வயதுமுதல் 14 வயது வரையிலான குழந்தைகட்கு கணினிப்பயிற்சியை உன்னதமான வழிகாட்டல்களுடன் வழங்கி வருகின்ற Kids Computer School, Flex இன் வளர்ச்சிப் பாதையில் மற்றுமொரு படிக்கல்லாகும். சிறார்களின் கணினி அறிவை வளர்க்கும் முகமாக இளம் பராயத்திலேயே அவர்கள் ஆற்றல்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கின்றது Kids Computer School. தனித்துவமான வசதிகள், பாடநெறிகள், கவனிப்பு, வழிகாட்டல்கள், வசதியான பயிற்சிக் கட்டணங்கள், அன்புடன் பயிற்றுவிக்கும் அனுபவம் வாய்ந்த பெண் விரிவுரையாளர்கள் என்பவற்றை தன்னகத்தே கொண்ட மிகக் குறுகிய காலத்தினுள் குழந்தைகளால் கவரப்பட்ட Kids Computer School இதுவென்றால் மிகையல்ல.

பலதரப்பட்ட துறையிலும் பயன்படும் Accounting Packages (Tally, OB, Acc, Pac, M.Y.O.B) MS Office (MS Word, MS Excel, MS, Access. Power Point). Internet & Email. Web Designing (HTML. Dream, Weaver, Flash, Photoshop) ஆகிய கணினிக்கற்கை பயிற்சி வகுப்புக்கள் அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் நடாத்தப்படுகின்றன. ஒவ்வொரு மாணவரது பயிற்சியிலும் தனியான கவனம்.

செலுத்தப்பட்டு கற்கை நெறிகள் மேற்கொள்ளப்படுகின்றன. முற்று முழுதாக Flex விளம்பர நிறுவனத்தினால் பாடசாலையை விட்டு விலகியோர், இளையோர், வயது வந்தோர் யாவருக்கும் Graphic Designing, கலையை பயிற்றுவிக்கும் முகமாக ஆரம்பிக்கப்பட்ட மேற்படி உப நிறுவனம் அதன் வளர்ச்சிப் படிகளில் பிரமிக்கக் கூடிய சாதனைகளை நிலைநாட்டி வருகிறது.

இங்கு இளைஞர்யுவதிகள் தமது பல்வேறு நோக்கங்களுக்காக இக் கலையை பயில்வதில் ஆர்வம் மிக்கவர்களாகக் காணப்படுகின்றனர். Flex Institute. இல் வேறெந்த கணினிக் கல்வி நிறுவனங்களில் காணப்படாத விசேட அம்சங்கள் மாணவர்களை கவர்க்காரணமாக அமைகின்றது. புதிய

flex Institute
*Step Towards a Bright Future*

புதிய சிந்தனைகளுடன் கூடிய வடிவமைப்புப் பயிற்சிகள். அனுபவம் மிக்க விரிவுரையாளர்கள் பெண் மாணவிகளுக்கு விசேட பெண் விரிவுரையாளர்கள். வசதியான கட்டணங்கள் பாதுகாப்பான, வசதியான கம்பியூட்டர் கலைக் கூடம் வசதியான பயிற்சி நேர அட்டவனை என்பன மேற்கொள்ளப்படுகின்றன. மேலதிக விரங்களுக்கும் அனுமதிகளுக்கும் Flex Institute,இல: 04. IBC வீதி வெள்ளவத்தை, கொழும்பு 06. என்ற முகவரியுடனோ தொலைபேசி இலக்கம்: 0777-761346 உடன் தொடர்பு கொள்ளவும்.

FLEX Graphic

## West End College London

Enlightening the Future



# யாழ் நகரில் IELTS இன்றி SPOT ADMISSIONS மூலம் UK இல் உயர் கல்வி

| | | |
|---|---|---|
| இடம் : | Green Grass Hotel & Restaurant | 33, Aseervatham Lane, Hospital Road, Jaffna. |
| | COLOMBO | 4, IBC Road, Wellawatte, Colombo 6. |
| திகதி : | 20th November 2010 | |
| நேரம் : | காலை 10.00 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை | |

- Tier 4 'A' grade college in central London (UK)
- Strong tutorial and study support
- State-of- the-art learning facilities
- Competitive course fees
- Guaranteed progression *to Coventry University London Campus

* Terms and conditions apply

Coventry University London Campus

- Undergraduate and postgraduate qualifications in: Business Management, Marketing, Financial Management, Human Resource Management, Legal Studies, Administrative Management, Travel Tourism & Hospitality Management and IT.

**For appointment please contact : 0777-761346**

VISA பெற்றுக்கொள்ளும் முன்னர் அல்லது அதன் பின்னர் எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

எமது சேவை முற்றிலும் இலவசம்


flex Institute
*Step Towards a Bright Future*

4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777-761346 E-mail: flexinstitute@sltnet.lk
www.flexinstitute.lk
(A Subsidiary of Flex Graphic)

**West End College London**
140- 148 Borough High Street
London, Se1 1LB, United Kingdom
Tel: +44 (0) 207 403 9300
Email: enquiries@w-e-c-l.co.uk

**www.w-e-c-l.co.uk**

FLEX Graphic



# உடலில் இருக்கிறது ஓராயிரம் இன்பம்...!

பிரபல தமிழ்நாட்டு செக்ஸ் மருத்துவ நிபுணரான டாக்டர் பத்மினி பிரசாத் ஆண்களிடம் நிலவும் பழங்கால செக்ஸ் நம்பிக்கையையும் அதற்கு மாறான செக்ஸ் மருத்துவ இயல் உண்மைகளையும் விளக்குகிறார்..!

பழைய நம்பிக்கை-1: திருமணமான பெண் முதன் முதலில் உடலுறவு கொள்ளும்போது மெல்லிய ஹைமன் எனப்படும் கன்னிச்சவ்வு கிழிந்து வலியும் ரத்தமும் ஏற்பட்டால்தான் அப்பெண் கன்னித்தன்மை மாறாத பெண் என்று பெரும்பாலான ஆண்கள் நினைப்பது!

உண்மை: திருமணமான பெரும்பாலான பெண்களுக்கு முதன்முதலில் உடலுறவு கொள்ளும்போது மெல்லிய ஹைமன் எனப்படும் கன்னிச்சவ்வு கிழிந்து வலியும் ரத்தமும் ஏற்படுவதில்லை. பெண்களுக்கு ஹைமன் எனப்படும் கன்னிச்சவ்வு சாதாரணமாக மெல்லியதாகவோ அல்லது தடிமனாகவோ இருக்கலாம். ஹைமனில் இருக்கும் துவாரம் சிறியதாகவோ அல்லது பெரியதாகவோ, திறந்தோ அல்லது மூடிய நிலையிலோ இருக்கலாம். உடற்பயிற்சி மேற்கொள்ளும் பெண்களுக்கு உடலுறவுக்கு முன்பே ஹைமன் சவ்வு கிழிந்திருக்கலாம். உடற்பயிற்சி மேற்கொள்ளாத பெண்களில்கூட சிலருக்கு முதலிரவு உடல்உறவுக்குப் பின்னும் ஹைமன் கிழியாமல் இருக்கலாம்!

பழைய நம்பிக்கை-2: பெரிய பருமனான மார்பகங்கள் உள்ள பெண்களுக்கு ஆசை அதிகமாக இருக்கும் என்று பெரும்பாலான ஆண்கள் நினைப்பது!

உண்மை: செக்ஸுக்கு சிறிய மார்பகம் பெரிய மார்பகம் என்ற பாகுபாடு இல்லை. வம்சம், சுகாதாரம், உடல்எடை, ஊட்டச்சத்துணவு போன்ற காரணிகளால் பெண்களுக்கு மார்பகங்கள் பெரிதாகவோ அல்லது சிறியதாகவோ அமையும்.

பழைய நம்பிக்கை-3: செக்ஸ் அறிவு இருக்கும் பெண்களுக்கு ஏற்கனவே செக்ஸில் முன் அனுபவம் இருக்கும் என்று பெரும்பாலான ஆண்கள் நினைப்பது..!

உண்மை: தற்காலப் பெண்கள் படிப்பறிவு மிகுந்து ஆண்களைப்போல் சுதந்திரமாக வெளியில் சென்று தகவல் சேகரிக்கும் நுண்ணறிவுடன் திகழ்வதால், செக்ஸ் அனுபவம் இல்லாமலே செக்ஸ் குறித்த அறிவைப் பெண்களால் பெறமுடியும்!

**பெண்களிடம் நிலவும் பழங்கால செக்ஸ் நம்பிக்கைகளும் அதற்கு மாறான செக்ஸ் மருத்துவ இயல் உண்மைகளும்.!**

பழைய நம்பிக்கை-1: முதல் இரவில் முழுமையான செக்ஸ் இன்பம் தரமுடியாத ஆண்களை ஆண்மை இல்லாதவர்கள் என்று பெரும்பாலான பெண்கள் நினைப்பது..!

உண்மை: முதலிரவில் 80 சதவீத ஆண்களால் முழுமையான உடலுறவு கொள்ளமுடியாது. அதனால் அவர்கள் ஆண்மை இல்லாதவர்கள் என்று முடிவுக்கு வந்துவிடக்கூடாது.

பழைய நம்பிக்கை-2: உடல்உறவில் உச்சகட்ட இன்பம் கிடைக்கவில்லை எனில் அது ஆண்களிடம் உள்ளகுறை என்று பெரும்பாலான பெண்கள் நினைப்பது!

உண்மை: உடல் உறவில் ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் முழுமனதோடு ஆண்களுடன் இணைந்து ஒத்துழைத்தால் அன்றி முழுமையான உச்சகட்ட இன்பத்தை பெறமுடியாது. ஆண் பெண் இருவரும் சமஅளவில் உடலும் உள்ளமும் இணைந்து உடலுறவில் ஈடுபடும்போதுதான் பெண்களுக்கு இன்பம் அதிகரிக்கின்றது என்பதை பெண்கள் கருத்தில் கொள்ளவேண்டும்.

பழையநம்பிக்கை-3: வயதாகி விட்டதாலும் மாதவிடாய் நின்று போனதாலும் மற்றும் ஆண்களுக்கு வயதாகிவிட்ட நிலையிலும் தங்களுக்கு உடலுறவு அவசியமில்லை என்று பெரும்பாலான பெண்கள் நினைப்பது..!

உண்மை: 60 சதவீதம் முதல் 80 சதவீதம் ஆண்கள் இளமையில் மட்டுமே உடல்உறவு கொள்வதற்குக் காரணம் பெண்களின் ஒத்துழைப்பு கிடைக்காததுதான்! பெண்களுக்கு மாதவிடாய் நின்றுபோன பின்பும் பாதி வாழ்க்கை இருக்கிறது. அந்நிலையில் உடல்உறவு தேவையில்லை என பெரும்பாலான பெண்கள் நினைப்பது தவறு. வயதான காலத்திலும் வளமான உறவை பெண்கள் நினைத்தால் அனுபவிக்கலாம். இது அவரவர் மனநிலையைப் பொறுத்தது.

பழைய நம்பிக்கை-4: கணவர் தான் மனைவியை உறவுக்கு அழைக்க வேண்டும் என்று நினைப்பது!

உண்மை: பரஸ்பரமான அன்பின் மிகுதியால் மனைவியும் கணவரை உறவுக்கு அழைக்கலாம்! ஆண்கள் தான் முதலில் அழைக்கவேண்டும் என்று பெரும்பாலான பெண்கள் நினைப்பது தவறு! இருப்பினும் திருமணமான புதிதில் பெண்கள் வலியவந்து கணவரை அழைக்கும்போது சில ஆண்கள் தவறான அர்த்தம் ஏற்படுத்திக்கொண்டு வாழ்க்கையையே சிக்கலாக்கிவிடுவார்கள்.

# ருசியான புளியோதரை

## தேவையானப் பொருட்கள்:

காய்ந்த மிளகாய் - 10, கடுகு - சிறிதளவு
கடலைப் பருப்பு - 2 மேசைக்கரண்டி
தனியா - 2 மேசைக்கரண்டி
எள் - 2 டீ ஸ்பூன் வறுத்துப்பொடிக்கவும்
முந்திரிப் பருப்பு - 15, புளி - 100 கிராம்
காய்ந்த மிளகாய் - 8, நிலக்கடலை - 50 கிராம்
உளுத்தம் பருப்பு - 1 மேசைக்கரண்டி
கடலைப் பருப்பு 1 மேசைக்கரண்டி
வெந்தயம் - 1 மேசைக்கரண்டி
எள் - 2 மேசைக்கரண்டி
பெருங்காயம் - சிறிதளவு
கறிவேப்பிலை - சிறிதளவு
உப்பு - தேவையான அளவு
மஞ்சள் தூள் - 1 மேசைக்கரண்டி
பச்சரிசி சாதம் - 4 கண்டு
நல்லெண்ணை - 4 மேசைக்கரண்டி

செய்முறை:


நல்லெண்ணை விட்டு, கடுகு, காய்ந்த மிளகாய், உளுத்தம் பருப்பு, கடலைப்பருப்பு, பெருங்காயம், கறிவேப்பிலை போட்டுதாளிக்கவும்

அதனுடன் நிலக்கடலை, வெந்தயம், வெள்ளை எள், மஞ்சள் பருப்புபோட்டுவதக்கவும். புளியை கெட்டியாகக் கரைத்துக்கொள்ளவும். அதனை இதில் ஊற்றவும். உப்பு, மஞ்சள் தூள் சேர்த்து வதக்கவும். அதனுடன் வடித்த சாதத்தைப்போடவும். சாதம்போட்டவுடன் நன்கு கிளறவும்.

சுவையான சாதம் 'ரெடி'. இதனை இரவில் செய்து காலையில் சாப்பிட்டால் அதன் சுவை இன்னும் அதிகமாக இருக்கும்.



# பெண்களுக்கு கால் வலி ஏன் வருகிறது?



பழங்காலத்தில் பெண்கள் அடுக்களையில் கீழே உட்கார்ந்து சமைப்பார்கள். ஆகையால் பழங்காலத்து பெண்களுக்கு இப்போதைய பெண்களுக்கு உள்ளதைப் போல் இடுப்பு வலியோ, கால் வலியோ கிடையாது.

அந்தக் காலத்தில் அண்டா அண்டாவாக் கூட்டு குடும்பத்தில் பெண்கள் சமைப்பார்கள், எல்லோரும் திடகாத்திரமாகத் தான் இருந்தார்கள். இந்தக் காலத்துப் பெண்கள் கொஞ்ச நாளிலேயே மூட்டு வலி, கால் வலி, இடுப்பு வலி என்கிறார்களே என்னவா இருக்கும்?

பழங்காலத்தில் பெண்கள் அடுக்களையில் கீழே உட்கார்ந்து சமைப்பார்கள்.

ஆகையால் பழங்காலத்து பெண்களுக்கு இந்தக் காலத்துப் பெண்களுக்கு உள்ளதைப்போல் இடுப்பு வலியோ கால் வலியோ கிடையாது.

ஆனால் இப்போது இருகின்ற நவீன உலகில் நின்று கொண்டு தான் சமைக்கிறோம்.

அந்தக் காலத்தில் ஆட்டுக்கல், அம்மி, கிணற்றில் நீர் இறைப்பது போன்ற வேலைகளை செய்வதால், உடற்பயிற்சி என்பது அவசியமாக இருக்கவில்லை. அவர்கள் செய்யும் வேலையே அவர்களுக்கு பூரண உடற்பயிற்சியை அளித்தது.

இந்தக் காலத்தில் துவைக்க - அரைக்க - பாத்திரம் கழுவ என்று எல்லாத்துக்கும் இயந்திரங்கள் வந்துவிட்டன. இப்படி இயந்திரங்கள் இருந்தும் சிலருக்கு தோய்ந்த உடுப்புகளை அதிலிருந்து எடுத்துக் காயப்போடக் கூட சோம்பேறித் தனமாக இருக்கிறது.

சமையலறையிலே இரண்டு மணி நேரமானாலும் நின்று கொண்டு சமைக்கிறோம்.

சிலர் மாத்திரமே சமையலறையில் நாற்காலியைப் வைத்து, சிலவேளைகளில் ஆவது உட்கார்ந்து கொள்வார்கள்.

ஆனால் வேலைக்குப் போகும் பெண்கள், அவசர அவசரமாகச் சமைப்பதால் அவர்களுக்கு இருப்பதற்கு நேரம் இருக்காது.

வேலைக்குச் செல்லும் பெண்களைவிட வீட்டில் உள்ள பெண்களுக்குத் தான் வேலை அதிகம்.

சமையலறையில் நின்றுகொண்டே காய், கறிகளை வெட்டிக்கொள்ளாமல், நாற்காலியில் இருந்து எல்லாவற்றையும் வெட்டிய பின்னர் சமைக்க ஆரம்பிக்கலாம். இஞ்சிப் பூண்டை வெட்டும்போது, அதிக நேரம் எடுக்கும். அந்த நேரத்திலும் உட்கார்ந்து கொள்ளலாம்.

நின்றுகொண்டு சமைக்கும்போது, தாளிக்கும்போது, தண்ணீர் கொதிக்கும் போது, காய் கறி வேகும்போது அப்படியே சட்டியை உற்றுப் பார்த்துகொண்டு இருக்காமல் அந்த நேரத்தில் சின்னச் சின்ன உடற்பயிற்சிகளைச்செய்து நம்மை ஒய்வு படுத்திக்கொள்ளலாம். ஒவ்வொரு உடற்பயிற்சியையும் 5 தடவைகள் செய்யலாம்.

1. இரண்டு கைகளையும் பக்கவாட்டில் நீட்டி முன்னும் பின்னுமாக சுழற்றலாம். இதனால் தோள்பட்டை வலி, கையிலுள்ள சதைக் கொழுப்புக் குறையும்.

2. தோப்புக் கரணம்போடுவதுபோல இடுப்பில் கை வைத்துக் கொண்டு பாதி அளவிற்கு உட்கார்ந்து, பின்னர் எழுந்திருக்கலாம். இது மூட்டு வலிக்கு நல்ல உடற்பயிற்சி.

3. இடுப்பில் கை வைத்துக்கொண்டு நேராக நின்று கொண்டு இடது வலது புறங்களில் சுழற்றலாம். இது இடுப்பு வலிக்கு நல்ல உடற்பயிற்சி.

4. தலையை மட்டும் மேலும் கீழும், இடது வலது புறங்களில் சுழற்றலாம், இது கழுத்துக்கு நல்ல உடற்பயிற்சி.

5. உடற்பயிற்சிசெய்ய நேரம் கிடைக்காதவர்கள் அப்படியே ஒரே மூச்சாக வேலை செய்யாமல் இப்படி சின்ன சின்ன உடற்பயிற்சிகளைச் செய்துகொண்டே வீட்டு வேலையைச் செய்யலாம்.

6. துணி தோய்க்கும்போது நல்ல சோப்புத் தண்ணீரில் ஊறவைத்துவிட்டு கீழே போட்டு நான்கு மிதி மிதித்தால் அழுக்கும் போகும் கால் வலிக்கும் ஒரு நல்ல உடற்பயிற்சியாகின்றது.

7. குழந்தைகளை குளிக்க வைக்கும்போது கூட இடுப்பு வலிக்க குனிந்து குளிக்க வைக்காமல், கீழே ஒரு சின்ன ஸ்டூல் போட்டு குளிக்கவைக்கலாம்.

8.கணினிக்கு முன் அரைமணி நேரத்துக்கு மேல் உட்காராதீர்கள். கொஞ்சம் ஒய்வு எடுத்துக்கொள்ளுங்கள். கதிரையில் உட்கார்ந்து கொண்டே செய்யும் உடற்பயிற்சிகளை செய்யலாம்.

9. வாகனங்களில் செல்லும்போது கூட ஐந்து நிமிடம் கண்களை மூடி கண்ணுக்கும் ஒய்வுகொடுக்கலாம்.

10. இரவு தூங்கப் போகும்போதும், காலையில் எழுந்திருக்கும்போதும், எழுந்து உட்கார்ந்துகொண்டு நேராக இரண்டு காலின் பெருவிரலை தொடவேண்டும். இப்படிச் செய்வதாலும் முதுகு வலி சரியாகும்.

வேலைக்குப்போக வேண்டும் என்ற அவசரத்தில் பெண்கள் காலையில் சாப்பிடும் டீ, டிபனைக் கூட மறந்துவிடுகிறார்கள்.

இப்போது நிறைய பெண்களுக்கு சின்ன வயதிலேயே முதுகுவலி, கால் வலி, இடுப்புவலி என்று வந்து விடுகிறது.


தகுந்த உடற்பயிற்சியின் மூலம் இது போன்ற வலிகளைத் தவிர்த்துக் கொள்ளலாம். முடிந்தவர்கள், நான்கு தடவைகள் மாடிப்படி ஏறி இறங்கலாம்.

# உலக மக்களின் உள்ளங்களைக் கவர்ந்த ரைரானிக் கப்பலின் சோகக் கதை


கப்பல் கப்டன் எட்வேட் சிமித்

19ஆம் நூற்றாண்டில் உலகிலேயே மிகப்பெரும் உல்லாசப் பயணிகள் கப்பலாகக் கருதப்பட்ட ''ரைரானிக்'' (Titanic) 2,227 பயணிகளுடன் தனது கன்னிப்பயணத்தை இங்கிலாந்திலுள்ள ''சவுதம்டன்'' துறைமுகத்திலிருந்து அமெரிக்காவின் நியூயோர்க் துறைமுகத்தை நோக்கி 1912 ஏப்ரல் 10 இல் ஆரம்பித்தது.


எவரும் எதிர்பாராத விதமாக இக்கப்பல் 14 ஆம் திகதி இரவு 11.38 மணியளவில் பனிப்பாறையில் மோதிக் கொண்டது. அதனால் கப்பல் பலத்த சேதமடைந்த நிலையில் ஏப்ரல் 15 ஆம் திகதி அதிகாலை 2.20 மணிக்குக் கடலில் முற்றாக மூழ்கியது. இந்த நிலையில் கப்பல் நியூயோர்க் துறைமுகத்தைச் சென்றடைய 963 மைல்கள்



தூரமே எஞ்சியிருந்தன. ரைரானிக் மூழ்கமுடியாத கப்பலாகப் பலராலும் கருதப்பட்டது.

46,328 தொன் எடைகொண்ட இக்கப்பல் அயர்லாந்தில் 1911 ஆம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டது. 882 அடி நீளமான இக்கப்பல் 92 அடி அகலமானது. இதில் 3,547 பேர் பயணிக்க கூடிய வசதியிருந்தது. 860 பணியாளர்கள் இருந்தனர்.

உலகிலேயே மிகுந்த அனுபவம் பெற்ற பொறியியலாளர்களால் கட்டப்பட்ட இக்கப்பலுக்கு அக்காலத்தில் இருந்த சிறந்த தொழில்நுட்பத்திலான பொருட்களே பயன்படுத்தப்பட்டன. ஒரு மணித்தியாலத்தில் 24-26 மைல் வேகத்தில் ஓடக்கூடிய இக்கப்பலில் 1,500 வாட்ஸ் சக்தியுள்ள புதிய இரு ரேடியோ ஒலிபரப்புச் சாதனங்களும், இரண்டு ரேடியோ இயக்குநர்களும் இருந்திருக்கிறார்கள். இருந்தும் இவ்விபத்தில் 1,517 பயணிகள் மரணமடைந்தார்கள்.



ஏலத்தில் போன கடிதமும் திறப்புக் கோவையும்

98 வருடத்திற்கு முன் நடந்த இவ் விபத்தில் சிக்கி சமுத்திரத்தில் மூழ்கிய ''ரைரானிக்'' நியோபவுண்லாந்து (கனடா) கரையிலிருந்து 300 மைல்கள் தூரத்தில் 2.5 மைல் ஆழத்தில் இருப்பதாக சமுத்திர ஆராய்ச்சியாளர் ரொபோட் பலாட் தலைமையில் இயங்கிய அமெரிக்க விஞ்ஞானிகள் குழு 1985 ஆம் ஆண்டு கண்டுபிடித்திருந்தது.

பல நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி இக்குழு ஏழு தடவைகளுக்கு மேல் 2.5 மைல் கடல் ஆழத்தில் சென்று கப்பலிலிருந்த பல பொருட்களை மீட்டு, கரைக்குக் கொண்டுவந்திருக்கிறது. இப்படி நவீன முறையைப் பயன்படுத்தி மீட்கப்பட்ட 5,500 பொருட்கள் அடங்கிய மாபெரும் கண்காட்சி இம்மாதம் 5 ஆம் திகதி லண்டனில் ஆரம்பமாகியது. 2011 மே 01 வரைக்கும் இக்கண்காட்சி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்கண்காட்சியில் கப்பலில் உணவு உட்கொள்ளப் பயன்படுத்திய கோப்பைகள் கரண்டிகள் மற்றும் சப்பாத்துக்கள், சென்ற் போத்தல்கள், பொத்தான்கள், தலைசீவும் சீப்புக்கள், இசைக் கருவிகள் போன்ற பல பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

அத்தோடு பயணிகள் எழுதிய கடிதங்கள், முத்திரைகள், போஸ்ட் காட்டுகளும் இவற்றுள் அடங்குகின்றன. கப்பலில் பயணிகளின் அறை உட்பாகங்களைப் பிரதிபலிக்கும் காட்சிகளும் சித்திரித்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

கப்பல் இங்கிலாந்திலிருந்து ஏப்ரல் 10 இல் புறப்பட்டு, ஏப்ரல் 15 அதிகாலையில் மூழ்கியிருக்கிறது. இந்த 5 நாட்களிலும் கப்பலில் நடந்த சம்பவங்களை சில பயணிகள் கடிதத்தில் எழுதிவைத்திருக்கிறார்கள். சில பயணிகள் தங்கள் நெருங்கிய உறவுகளோடு தொலைபேசியில் கதைத்திருக்கிறார்கள் அடோல்வ் சாபில்ட் என்பவர் தனது மனைவிக்கு 3 பக்கத்தில் விவரமாகக் கடிதமொன்றை எழுதியிருக்கிறார். இக்கடிதம் உட்பட மீட்கப்பட்ட 350 வகையான பொருட்கள் கடந்த ஏப்ரல் 18 இல் ஏலத்தில் விற்பனையாகியிருக்கின்றன. இக்கடிதத்தை இனம் தெரியாத பிரிட்டிஷ் நூதனசாலை 55,000 ஸ்ரேலிங் பவுண்ஸ் கொடுத்து ஏலத்தில் எடுத்திருக்கிறது. முதல் வகுப்பில் பயணித்த இவ் உல்லாசப் பயணிகள் கப்பலில் மிகவும் சிறந்த உணவு வழங்கப்படுவதாகவும், சூப், பொற்றற்ரோ சிப்ஸ், மன்ஹற்றன் அப்பிள் மற்றும் சிறந்த சீஸ் என்பன வழங்கப்படுவதாகவும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாக கடிதத்தை ஏலத்தில் எடுத்தவர் தெரிவித்திருக்கிறார். அத்துடன் கப்பலில் சிறிய அதிர்வு இருப்பதாகவும் மற்றப்படி கப்பலில் இருப்பதாகவே தெரியவில்லை என்றும் அவர் எழுதியிருக்கிறார்.

ஏலத்தில் பொருட்களை விற்றவர் வேறு சில விடயங்களையும் வெளியிட்டிருக்கிறார். அதாவது, ஏப்ரல் 10 மதியமே ''ரைரானிக்'' இங்கிலாந்திலிருந்து புறப்பட்டிக்கிறது. அச்சமயம் ''நியூயோர்க்'' என்ற கப்பலோடு மயிரிழையில் மோதலிலிருந்து தப்பியிருக்கிறது. அப்போது இரு கப்பல்களுக்கும் இரண்டு அடி வித்தியாசமே இருந்தது. இத்தகவல்கள் பிரிட்டிஷ் பத்திரிகைகளிலும் வெளிவந்ததாக அறியப்படுகிறது.

ரைரானிக்கின் முதல் வகுப்பில் 370 பயணிகள் மட்டுமே பயணித்திருக்கிறார்கள்.

கண்காட்சியில் தற்போது இடம்பெற்றுள்ள திறப்புக்கோர்வை விபத்திற்கு ஒரு காரணமென்றும் சொல்லப்படுகிறது. இத்திறப்புக் கோர்வையும் 54,000 பிரிட்டிஷ் பவுண்ஸ்ஸிற்கு ஏலம் போயிருக்கிறது.

இக்கப்பலில் இரண்டாவது அதிகாரியாகக் கடமையாற்றிய 37 வயது பிளயர் என்பவரே கப்பல் அயர்லாந்திலிருந்து சவுதம்டன் துறைமுகம் வரும் வரைக்கும் கடமையில் இருந்திருக்கிறார். இவர்தான் கப்பலின் நியூயோர்க் பயணத்திற்கும் கடமையாற்ற இருந்தார். ஆனால், கடைசி நிமிடத்தில் இவருக்குப் பயண அனுபவம் குறைவு என்பதைக் காரணம் காட்டி இவரைக் கப்பலிலிருந்து இறக்கி விட்டிருக்கிறார்கள். இவருக்குப் பதிலாக ஹென்ரி வில்லி என்ற மூத்த இரண்டாவது அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார். ரைற்றானிக்கின் சகோதரிக் கப்பலான ''ஒலிம்பிக்'' இலிருந்து இவர் வரவழைக்கப்பட்டுள்ளார். பிளயர் என்பவர் அவசரத்தில் தன்னிடமிருந்த திறப்புக்கோர்வையை ஹென்றி வில்லியிடம் பாரம்கொடுக்காமல் கப்பலில் இருந்து இறங்கிவிட்டார்.


97 ஆவது வயதில் கால்மா... மில்வினாடீன்

தூரவரும் கப்பல்களைப் பார்ப்பதற்கான ''பைணர்க்குலர்'' கருவி வைக்கப்பட்டிருந்த பெட்டியின் திறப்பும் இத்தக்கோர்வையிலேயே இருந்தது. பிளயர் தான் இக்கப்பலில் நியூயோர்க் செல்வதற்குச் சந்தர்ப்பம் கிடைக்காததையிட்டுக் கவலை தெரிவித்து தனது மைத்துனிக்குப் போஸ்ட்காட் மூலம் அறிவித்திருக்கிறார்.

இவ் விபத்தில் பிளயர்தான் மிகுந்த அதிஷ்டசாலியாகக் கருதப்பட்டார். இந்த விபத்தில் ஹென்றி வில்லியும் மரணமானார்.

98 வருடங்களுக்கு முன் நடைபெற்ற இவ்விபத்தில் உயிர்தப்பி வாழ்பவர் என்று எவரும் இன்று உயிருடன் இல்லை. இவ்விபத்தில் தப்பிப்பிழைத்து உயிர்வாழ்ந்த கடைசி நபர் 97 வயதுடைய மில்வீனாடீன் என்ற பெண்மணி. இவர் 02.02.1912 இல் பிறந்தவர். சம்பவம் நடந்த போது இவர் கப்பலில் பயணித்த மிகவும் வயதில் குறைந்தவராக இருந்தார். பிரிட்டிஸ் பிரஜையான இவரும் 30.05.2009 இல் மரணமானார். பார்மரோ ஜோய்ஸ் வெஸ்ட் என்ற பெண்மணி சம்பவத்தின் போது 11 மாதக் குழந்தையாக இருந்துள்ளார். விபத்தில் தப்பிப் பிழைத்த இவரும் அக்டோபர் 2007 இல் மரணமானார்.

தற்போது லண்டனில் நடைபெற்றுவரும் இக்கண்காட்சியை டேவிட் கைஸ்மன் என்பவர் மிகவும் பாராட்டியுள்ளார். இவரின் தாயான எடித்பிரவுன் என்பவருக்கு அப்போது 15 வயது மட்டுமே. தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த இவர் தனது தாய், தகப்பனுடன் இங்கிலாந்திற்குச் சென்று, பல படுக்கை உறைகள் மற்றும் கொட்டல்களில் பாவிப்பதற்குரிய வெள்ளிகளிலான பொருட்களை வாங்கப் பயணம் செய்திருக்கிறார்கள். அவர்களின் நோக்கம் அமெரிக்காவில் கொட்டல் ஒன்றைத் திறப்பதுதான். அதோடு ''கிலாற்ஸ்ரோன்'' என்ற சிறந்ததர பாக் ஒன்றில் அமெரிக்க டொலர் 50,000 எடுத்து சென்றிருக்கிறார்கள். எல்லாம் இன்று கடலுக்கடியில் கிடக்கின்றன.

எடித் பிரவுன் 100 வயது வரையும் உயிர் வாழ்ந்திருக்கிறார். என்ன கதை கேட்டாலும் கப்பல் விபத்தின் போது பயணிகள் உயிர் தப்புவதற்காக கதறி அழுததை மறக்கவே முடியாது என்கிறார். இக்கண்காட்சியில் (Gladstone) பாக் ஒன்றும் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

ஒரு திறப்புக்கோர்வை 54,000 பவுன்ஸ், எழுதிய தபால் 55,000 பவுன்ஸ். இவற்றை உற்றுநோக்கும் போது 98 வருடங்களுக்கு முன்பு நடைபெற்ற இவ்விபத்து பிரிட்டிஷ்மக்களின் உள்ளங்களை எவ்வாறு கவர்ந்துள்ளது என்பது தெரிகிறது. 2.5 மைல் ஆழத்தில் டைட்டானிக் கப்பலிலிருந்து பொருட்களை மீட்கும் நடவடிக்கை அமெரிக்க தொழில்நுட்பவியலாளர்களை பாராட்டத்தான் வேண்டும். அதேநேரத்தில் இந்தத்தொழில்நுட்ப அறிவு 1912 ஆம் ஆண்டு இருந்திருந்தால் எத்தனையோ உயிர்களைக் காப்பாற்றியும் இருக்கலாம். ✱

தொகுப்பு: பாலா

சிறுகதை

# அப்பா

"அண்ணன்... எனக்கு ஏதாவது வந்திருக்கா...?" "ஓம் தம்பி! இந்தாங்க." என்றவாறு, அவனது அணித்தலைவர் கொடுத்த கடிதத்தை வாங்கி ஆவலுடன் உற்றுப் பார்த்தான் வர்ஷிகன். அப்பாவின் கையெழுத்துக்கள் அழகாக மின்னிக் கொண்டிருந்தன.கடிதத்தைப் பிரித்துப் பார்க்கும் ஆவலினால் சுவரிலே சாய்ந்து கொண்டான். பதினோறாம் அணியில் அவன் இருந்தாலும், ஐந்தாம் அணியின் தாழ்வாரம் தான் அவனது உறைவிடமானது. ஏனெனில், அவன் ஆரம்பத்தில் இங்கு வரும் போது, எவருமே தெரிந்த முகமாக இருக்கவில்லை.
அந் நேரம் தான், ஐந்தாம் அணியில் அவனது பள்ளித் தோழன் நிவாசன் ஏற்கனவே வந்திருந்தான். எவரையும் காணோமே என, கலங்கிய வர்ஷிகனின் விழிகளுக்கு நிவாசன் ஆறுதலானான். அதன் பின்னர், ஐந்தாம் அணியே அவனுக்கு அடைக்கலமாகிப் போனது.

ஏதேதோ பழைய நினைவுகள், கடிதத்தைப் பார்ப்பதற்கிடையில் வர...அவற்றை தற்காலிகமாக நிறுத்தி விட்டு, கடித உறையை கிழித்து இரண்டாக மடிப்பிடப்பட்டிருந்த மடலை பிரித்தான்.

*அன்புள்ள மகனுக்கு!*

*அப்பா எழுதுவது, நாங்கள் அனைவரும் இங்கு நலமோடு இருக்கிறோம். நீ எப்படி இருக்கிறாயப்பா?*

*தம்பி! நீ கடைசியாக அனுப்பியிருந்த கடிதம் கிடைத்தது. சந்தோஷம். உன் மடலைப் பார்த்தால், கவலையாகத் தான் இருக்கிறது. இருந்தாலும், என்ன செய்ய முடியும். பருந்தின் கையில் கோழிக் குஞ்சை கொடுத்த பிறகு, அதுவாக கீழே போட்டால் தான் உண்டு. அதற்காக உன்னை இப்படியே விட்டு விடவும் மாட்டோம்.*

*உன் அம்மா, உன்னிடமிருந்து கடிதங்கள் வந்தால் உடனே அழத் தொடங்கி விடுவாள். என் பிள்ளை போய்ட்டானே என்று, வருவோர் போவோரிடமெல்லாம் சொல்லி கவலைப் பட்டுக் கொண்டிருப்பாள். நான்தான் ஏதாவது நம்பிக்கையூட்டுவது போல, அதட்டி அவளை சமாதானம் செய்வேன். என்னதான் ஆறுதல் சொன்னாலும், பெற்ற தாயல்லவா அவள்! அவளின் வேதனையை யாராலுமே முழுமையாக புரிந்து கொள்ள முடியாது. அம்மா இப்போது விரதமும் இருக்கிறாள். உன் விடுதலையைக் கண்டதும், வற்றாப்பளை கண்ணகியம்மனுக்கு தானே... அலகு குத்தி பால்ச் செம்பு எடுப்பதாக நேர்த்தி வைத்துள்ளாள். ஏதோ நம் கடவுள் உன்னை, எங்களோடு விரைவில் கொண்டு வந்து சேர்த்து வைப்பார்.*

*மேலும் தம்பி! முகாம் வாழ்க்கை பற்றி கேட்டிருந்தாயல்லவா? அதை ஏன் சொல்வான்! இப்போது எங்கட முகாமில் ஓரளவு சனத்தை மீள் குடியேற்றத்திற்கு ஏற்றி விட்டார்கள். எங்கட பாடுதான் என்னவோ தெரியாது. குடிக்கிற தண்ணிக்கு குழாய்க் கிணறுதான் தஞ்சம். இரவில நீண்ட நேரம் காத்து நிற்க வேணும். தம்பியும் அம்மாவும் இரவு பத்து மணிக்கே வாளிகளோட லைனில நிற்கப் போவார்கள். வாளிகளை அடுக்கி விட்டு, ஆட்கள் இல்லாட்டி...சனம் வாளிகளைக் கொண்டு போயிடுங்கள். இருக்கிறதை இழந்தால், திரும்பவும் வாங்க எங்களிடம் எதுவுமேயில்லை. அதனால பன்ரெண்டு மணிபோல நான் தண்ணியடிக்கிறதுக்கு போவன். இந்தக் குழாயில தண்ணியும் வரவே வராது. சரியான கஷ்டம். இருந்தும், குடிக்க வேணும் என்கிறதால கஷ்டத்தையும் தாங்கிக் கொண்டு அடிப்போம்.*

*அத்தோடு, குளிக்கிறதென்றால்... பின்னால ஓடுற ஆத்தில தான். அதையும் அரைவாசியாப் பிரிச்சு, ஒரு கொஞ்ச இடத்துக்குள்ள தான் குளிக்கலாம். அதுக்குள்ள வேறு, அங்க போகாதே.. இங்க போகாதே என்று காவல்க் காரர்கள் வேறு உயிரை வாங்குவாங்கள்.*

*இதுமட்டமில்லை தம்பி. சரியான மலசலகூடங்கள் இல்லாததால், ஆத்தங்கரையிலதான் சனம் மலம் கழிக்கிதுகள். அந்த நேரம் மழையும் பெய்ய , அதெல்லாம் ஆத்தோட மிதந்து வரும். எல்லாத்தையும் பார்த்துக் கொண்டுதான் குளிக்க வேணும். கிட்ட வந்தால், தண்ணியால எத்திவிட்டு குளிப்போம். என்ன தம்பி செய்யிறது. இளம் பெடியள், பெட்டையள், கிழடுகள் என்று...எல்லாம் அதிலதான் குளிக்கிறம். வீடுகளில எப்பிடியெல்லாம் வாழ்ந்தம். இப்ப உப்பிடி அவதிப்பட வேண்டிக் கிடக்குது. நீ எங்களை நினைச்சுக் கவலைப் படாதே தம்பி. உனக்கு இதுகள் தெரிய வேணும் என்றதுக்காகத் தான் இதை எழுதினேன்.*

*உனக்கு பதினெட்டு வயசு வந்ததிலிருந்து துன்பம் தானே!போராட்டம் என்கிற பெயரில், கட்டாயப் படுத்தினாங்கள். வேற வழியில்லாமல் போனாய். உன்ர கனவுகள், படிப்புகள் எல்லாம் மண்ணாப் போச்சுது.பிறகு, இந்த குண்டுகள், ஷெல்லுகள் எல்லாத்திலையும் துப்பி எங்களிடம் வந்து சேர்ந்தாய். இப்ப திரும்பவும் புனர்வாழ்வு..மூளைச் சலவை அது இதுவென்று . தம்பி! தப்பிச்சம் என்று இங்க வர, திரும்பவும் புனர்வாழ்வு தர்றோம் என்று வச்சிருக்கிறாங்கள். எங்களுக்கு பிரச்சினை வரக் கூடாது என்கிறதுக்காக, நீ போய் இருக்கிறாய். என்ன கண்டறியாத புனர்வாழ்வு. சமூகத்தில காட்டுமிராண்டிகளாயா...எங்கட பிள்ளைகள் இருந்தவங்கள். எங்களுக்கென்று பழக்க வழக்கங்கள், பண்பாடுகள் இல்லாமலா வன்னியில் நாங்கள் வாழ்ந்தம் ? எப்படியெல்லாமோ வாழ்ந்த நாங்கள், முகாமுக்கு வந்துதான் இப்பிடி சீரழியிறம். என்ன செய்யுறது ? சரி தம்பி.*

*உங்களை விடுறதாக கதையில்லையோ? நியூசிலயும் ஒண்டும் சொல்லுற மாதிரியில்லை. உங்களைப் பற்றி ஏதாவது சொல்லுவாங்கள் என்று தான், நான் ரேடியோவும் கையுமாய் இருக்கிறன். உங்கலை சமூகத்திற்கு ஏற்றவர்களாய் மாற்றிக் கொண்டு வருகிறோம் என்கிறார்கள். ஆனால், அந்த மாற்றம் எந்தளவுக்கு நடக்குதென்று எங்களுக்கு தெரியேல்லை. சிரட்டை தேய்க்கிறதும், மோதிரம் செய்யிறதும் தான் புனர்வாழ்வா? தம்பி! நீ அங்க போய் சரியாக ஒரு வருசமும்...அஞ்சு மாதமும். இதுவரை ஒரு முடிவுமில்லை. எங்கட கஷ்டம் துன்பம் அவங்களுக்கு எங்க தெரியப் போகுது? அந்த கடவுளுக்குத் தான் எங்கட பிரச்சினை வெளிச்சம்.*



இரா.ராணிஸ்ரீ

*நீ, படிப்பை விட்டுடாத தம்பி. தடுப்பில இருக்கிறாய் என்பதற்காக கவலைப்படாதே. அந்த அமெரிக்காவையே கலக்கிய நெல்ஷன் மண்டேலா கூட, சிறையில இருந்தவர் தான். ஏன், பெரியார் மகாத்மா காந்தியும் கைதியாக இருந்து சரித்திரம் படைத்தவர் தான். உன்னாலயும் முடியும் தம்பி. உன் திறமைக்கு இந்த உலகம் ஓர்நாள் தலை வணங்கும்.*

*தம்பி! நீ தேவையென்று எழுதியிருந்த புத்தகங்களை இந்தத் தடவை சந்திப்புக்கு வரும் போது, நான் வாங்கிக் கொண்டு வருகிறேன். முகாமில உழைப்பும் இல்லைத் தானே. அதனால அம்மாவின் சங்கிலியை விற்றுவிட்டேன். நீ வேதனைப்படாதே. நகை நட்டுக்கள் இப்போ தேவையில்லை. இப்போதைக்கு இருக்கிற உயிர்களைக் காப்பாற்றுவோம். உனக்கும் புத்தகங்கள், உடுப்புகள் தேவைதானே.*

*தம்பி! உனக்கு வேறு ஏதாவது பொருட்கள் தேவையா? தேவையென்றால், மறு கடிதத்தில் எழுதிவிடு. என் மகன் வேதனைகளைக் கண்டு கலங்குபவனாக இருக்கக் கூடாது. துன்பத்திலும் துணிந்து ஜெயிப்பவனாக இருக்க வேண்டும். சந்தோசத்தை எப்படி இரசிக்கிறோமோ, அப்படியே துன்பத்தையும் சகித்து ஏற்றுக் கொள்ளப் பழக வேண்டும். சாதிக்கப் போகிற உனக்கு, இவையெல்லாம் அனுபவப் பாடங்கள் தான். சிறைவாழ்வை நினைத்தோ..அல்லது எங்களின் பிரிவை நினைத்தோ, நீ சோர்ந்து விடக் கூடாது. உறவென்று வந்துவிட்டால், பிரிவென்பது கண்டிப்பாய் இருக்கும். நம்முடைய பிரிவு...சிறு இடைவெளியே தவிர, நிரந்தரம் கிடையாது.*

*சரி தம்பி. உன் வாழ்க்கை அத்தியாயத்தில் இதுவொரு பக்கம் மட்டுமே. உன்னுடைய ஒவ்வொரு வெற்றிப் பயணத்திற்கும் இந்த அப்பாவின் துணை என்றுமே உண்டு. நீ படித்து முன்னேறினால் தான் இனி எமது வாழ்வில் சந்தோஷம். உன் தம்பி வருணன், நல்லா படிக்கிறான். இந்த தவணைப் பரீட்சையில் இரண்டாம் பிள்ளை. ஏதோ என்னால் இயன்றவரை உன் அம்மாவையும், தம்பியையும் நன்றாக கவனிக்கிறேன்.*

*நீ எப்போது வெளியில் வருகிறாயோ, அன்றுதான் எங்களுக்குச் சந்தோசம். இங்கிருந்தே உன் திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் தம்பி. உன் திறமைகள் மீது எங்களுக்க நம்பிக்கையுண்டு. எனவே, உன்னால் நம் மண்ணும் நமது நாடும்...பெருமையடைய வாழ்த்துவதோடு, எப்போதுமே நானும் உன் அம்மாவும் மூச்சுக்காற்றுப் போல உன்னோடு கூடவே இருப்போம். நீ சாதனையாளனாய் மிளிர்கின்ற நாளுக்காய் காத்திருக்கிறோம்.*

*அன்புடன்...*

*உன் அப்பா.*

கடிதத்தை வாசித்து முடித்ததும், அவனையறியாமல் விழிகள் நீர்த் துளிகளை உதிர்த்தன. இருந்தும், மனதினுள் ஏதோ ஒருவிதமான சக்தி எரிந்து கொண்டிருந்தது. அவை தனது அப்பா வரைந்த வார்த்தைகளே என்பது, வர்ஷிகனுக்குப் புரிந்தது. எமது இத்தனை வேதனைகளுக்கும் தனது கல்வியினாலே தடையிட வேண்டும் என எண்ணியபடி... நேரம் ஆகிவிட்டதால், கடிதத்தை வைத்துவிட்டு சாப்பாடு எடுப்பதற்காக புறப்பட்டான். மனக் கண்ணிலே அவனது பெற்றவர்கள் கதை பேசிக் கொண்டிருந்தார்கள். இந்த வர்ஷிகனின் முடிவுதான், அங்கிருக்கும் பலருடைய முடிவாக இருக்கலாம். *

# உலகின் 5ஆவது உயரமான கோபுரம் இலங்கையில்



இலங்கையில் அமைந்துவரும் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்துக்கும் நிதியுதவி அளித்து, ஒப்பந்ததாரராக ஒப்பந்தம் பெற்றுவரும் சீன அரசு இன்னொரு பாரிய திட்டத்தையும் ஏற்றுக்கொண்டுள்ளது

உலகின் ஐந்தாவது உயரமான கோபுரம் இலங்கையில் அமைக்கப்படவுள்ளது. இத்திட்டத்திற்கான புதிய ஒப்பந்தத்தை சீன அரச நிறுவனமே ஏற்றுள்ளது. இந்தத் திட்டத்திற்கு 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

அரசின் இந்த அடுத்த மெகா திட்டமான இந்தக் கோபுரத்துக்கு 'தாமரைக் கோபுரம்' எனப் பெயரிடப்படவுள்ளது. 350 மீற்றர் உயரத்தில் கட்டப்படவுள்ள இதன் ஒட்டுமொத்த வடிவம் மற்றும் தோற்றம் ஆகியன 20 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்த ஒரு தாமரை போல இருக்கப்போகின்றது.

இக்கோபுரத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது மாடிகள் ஊடக ஒளிபரப்புக்கும், தொலைத்தொடர்பு முறைக்கும் பயன்படுத்தப்படவுள்ளது.

# 70 வயது பாட்டியை காதலித்து மணந்தார் 20 வயது இளைஞன்



டொரோத்தி பிரிட்டனைச் சேர்ந்த 70 வயதுப் பாட்டி, இவருக்கு 21 வயதில் ஒரு பேத்தியும் உண்டு. ஆனால், தற்போது வெண்ணிற உடையில் திருமணக்கோலத்தில் ஜொலித்தார் பாட்டி. 20 வயதாகும் இளைஞருக்கும் இவருக்கும் திருமணம் நடந்துள்ளது.

பாட்டி திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்ததால் மணமகனுக்கு பெரிய சந்தோசமாம். 2006இல் நண்பர்களுடன் விடுமுறைக்காக டுனிசியாவிற்குச் சென்றபோது ஒரு ஹோட்டலில் வேலைசெய்து கொண்டிருந்தவர் தான் ரபா என்ற இந்த இளைஞர்.

50 வருட இடைவெளியை சிறிதும் பொருட்படுத்தாமல் ரபா தன் பின்னால் அலைவதைக் கண்டு பாட்டிக்கு எரிச்சலே உண்டாகியதாம். எவ்வளவோ முறை பாட்டி சொல்லியும் கேட்காமல் துரத்தித் துரத்திப் பின்னால் அலைந்து மனதை வென்றுள்ளதாக பாட்டி கூறுகிறார். ரபாவுடன் இணைந்து சுற்றிய தருணங்களை விவரிக்கிறார் பாட்டி.

# தன்னை நாயெனக் கருதும் பசுக்கன்று



பிரிட்டனில், பசுக்கன்று ஒன்று தன்னை நாய் எனக் கருதி நாயைப் போல் நடந்துகொள்கிறது. நாயைப்போன்று அது குரைக்கவும் செய்கிறது.

4 மாத வயதான இந்தப் பசுக்கன்றை அது பிறந்தவுடன் பண்ணையாளர் பென் பொவர்மன் என்பவர் தனது வீட்டிற்கு கொண்டுவந்து அதை இரு நாய்களுடன் வளர்க்க ஆரம்பித்தார்.

ஹென்றி எனப் பெயரிடப்பட்ட இப்பசுக்கன்று, மந்தைக் கூட்டத்திலிருந்து விலகி, வீட்டில் தன்னுடன் வளர்க்கப்பட்ட நாய்களுடன் விளையாடுவதற்கே விரும்புகின்றது.

பென் பொவர்மனின் வீட்டின் அருகிலுள்ள குடிசையில் இப்பசுக்கன்று உறங்குவதுடன் ஒவ்வொரு காலைவேளையும் சமையலறையின் ஜன்னல் வழியே தனது தலையைவிட்டு உணவுப்பொருட்களை களவாடி உண்கிறதாம்.


தற்போது அக்கன்று குடும்பத்தின் ஓர் அங்கமாக இருப்பதுடன் தன்னை நாயென நினைத்துக்கொண்டு வீட்டிலுள்ள நாய்களுடன் விளையாடுகின்றது.



''இந்த வருட மாடல், கொசுவலையிலேயே 'சாரீஸ்' வந்திருக்குங்க!
''இதற்குப் பெயர் என்ன?''
''சிக்குன்குனியா சாரீஸ்.''



கர்நாடக நடிகர் சங்கம், எதிர்வரும் ஜனவரியில் தென்னிந்திய மற்றும் பாலிவுட் நடிகர் சங்கங்களை இணைத்து, பெங்களூரில் ட்வென்ட்டி:20 கிரிக்கெட் போட்டியை நடத்த இருக்கிறது. பாலிவுட் அணிக்கு சல்மான் கானையும், கோலிவுட் அணிக்கு விஜய்யையும் கப்டனாக நியமிக்கப் பேச்சுவார்த்தை நடக்கிறதாம்.



பாலிவுட்டில் இப்போது ரீ-மேக் சீஸன். குறிப்பாக தமிழ், தெலுங்குப் படங்களைப் போட்டி போட்டு வாங்குகிறார்கள். அபிஷேக் பச்சன் 'கில்லி' படத்தின் ரீ-மேக்கில் நடிக்க, அஜய் தேவ்கன் 'சிங்கம்' படத்தின் ரீ-மேக்கில் நடிக்க இருக்கிறார்.



''நானும் என் மாமியாரும் சந்தோஷமா பேசுகின்ற நாட்கள் எல்லாம் இரண்டுபேருக்கும் தூக்கமே வராது.''
''அப்புறம்?''
''அப்புறம் என்ன, இரண்டுபேரும் எழுந்து வந்து ஒரு மணி நேரமாவது சண்டை போடுவோம். பின்னர்தான் இரண்டு பேருக்குமே தூக்கம் வரும்!''

# கண்ணீர்

மிகுந்த தயக்கத்தோடும் பயத்தோடும் மாலையும் கழுத்துமாக பவித்ராவோடு வாசலில் வந்து நின்றான் சிவகுமார்.

ஒரு நிமிடம் அதிர்ச்சியிலிருந்து மீண்ட அவனது அம்மா பாக்யம், புன்சிரிப்போடு மகனையும் மருமகளையும் வீட்டிற்குள் அழைத்துப் போனாள்.

தன்னைப் படிக்க வைத்து ஆளாக்கிய விதவைத் தாயை தவிக்க விட்டு விட்டு,விருப்பப்படி திருமணம் செய்து கொண்டமைக்காக தன்னை விரட்டியடிப்பாள் என்று எதிர்பார்த்திருந்த சிவகுமாருக்கு,அம்மாவின் செய்கை வியப்பாக இருந்தது.

''எனக்குத் தெரியாம நீ பதிவுத் திருமணம் செய்தது வியப்பாக இருந்தாலும்,நீ கட்டியிருப்பது ஒரு இளம் விதவை என்று நினைக்கும் போது ரொம்ப சந்தோசமா இருக்குடா சிவா. ஒரு விதவையின் வலி என்ன என்று சின்ன வயசிலேயே உனது அப்பாவைப் பறிகொடுத்துட்டு தவிக்கும் எனக்கு நல்லாவே தெரியும்டா.'' அம்மாவின் வார்த்தையைக் கேட்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தான் சிவகுமார்.

# கைகள்


கந்தசாமியைப் பார்க்க வந்தார் ராஜு. இருவரும் நண்பர்கள். காலை நேரம்.பேரக் குழந்தைகளை பள்ளியில் விடப் போயிருப்பதாகச் சொன்னாள் கமலா, கந்தசாமியின் மனைவி.


பதினொரு மணிக்கு வந்தார் ராஜு.அவர் ரேஷன் கடைக்குப் போயிருக்கார் என்றாள் கமலா.மதியம் கரெண்ட் பில் கட்டப் போய்விட்டார். சாயந்தரம், குழந்தைகளைப் பள்ளியிலிருந்து அழைத்துக் கொண்டு அப்படியே மார்க்கெட்டில் காய்கறி வாங்கிக் கொண்டுதான் வருவார் என்றாள் கமலா.


ராஜுவுக்கோ சங்கடமாய் போயிற்று. கந்தசாமி... எவ்வளவு பெரிய ஆபீஸர். ஓய்வுபெற்று ஒரு மாதம்தான் ஆகிறது. அதற்குள் இப்படிப் போட்டு வேலை வாங்குறாரே இந்த அம்மாள்...கமலாவிடம் கேட்டே-விட்டார்.

அவர் ஆம்பளை. ரிடையர் ஆயிட்டார். ஆனால் நான்? பொம்பளையாச்சே!கடைசி மூச்சு வரைக்கும் குடும்ப நிர்வாகத்தை நடத்தனும். பொம்பளைக்கு ஏதுங்க ரிடையர்மெண்ட்!?

கமலா கேட்க,நிஜத்தின் கைகள் ராஜுவின் கன்னத்தில் பளீரென அறைந்தன.






**அஸ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

நண்பர்களை ஆதரவோடு அரவணைத்துச் சென்று உதவும் மேஷ ராசி அன்பர்களே!

உங்கள் செயல்களில் சிறுசிறு தடங்கல்கள் ஏற்படக்கூடும். பணவரவுகள் தாமதமாகலாம். எதிர்பார்க்கும் செயல்கள் தள்ளிப் போகலாம். கையெழுத்திடுவதிலும் பயணங்களிலும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். முடிந்தால் இவற்றை தவிர்க்கலாம். உத்தியோகஸ்தர்களில் சிலருக்கு பதவிமாற்றம் ஏற்படலாம். எதிர்பாராத முறையில் இடமாற்றமும் உண்டு. பணபரிமாற்றங்கள் சாதகமாக இருக்கும். குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் இருந்தாலும், நன்றாக நடைபெறும். கடன் தொல்லைகள் இருந்தாலும் பாதிப்புகள் ஏற்படாது. பெண்களுக்கு சேமிப்பு செலவழியும். கடன்கள் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும். பங்குச்சந்தை வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிடைப்பது அரிது.

அதிர்ஷ்ட எண்கள்: 1,3,5. அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு. அதிர்ஷ்டக்கிழமை: வெள்ளி.





**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

கலைத்திறமையோடு காரியங்களை செய்து மற்றவர்களை வியக்க வைக்கும் ரிஷப ராசி அன்பர்களே!

செய்யும் செயல்களில் முன்னேற்றமான பலன்களைக் காண்பீர்கள். ஆனாலும் அவ்வப்போது தடங்கல்களும், தாமதங்களும் சலிப்படையச் செய்யும். எதிர்பார்க்கும் பணவரவுகள் தள்ளிப்போகலாம். கொடுக்கவேண்டிய கடன்கள் அவசரப்படுத்தலாம். கவனமாகவும், நிதானமாகவும் இருப்பது அவசியம். குடும்பத்தில் தம்பதிகளுக்குள் ஒற்றுமை அதிகரிக்கும். கடன் தொல்லைகளால் பாதிப்பு ஏற்படாது. பெண்களின் திறமையால் பிரச்சினைகள் சமாளிக்கப்பட்டு குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும். பங்குச்சந்தை வியாபாரத்தில் லாபம் எதிர்பார்க்கும் அளவு ஏற்படும். நண்பர்களின் ஆலோசனைகளும் அன்றாட நிலவரங்களும் பயனுள்ளதாக இருக்கும்.

அதிர்ஷ்ட எண்கள்: 3,5,9. அதிர்ஷ்ட நிறம்: பச்சை. அதிர்ஷ்டக் கிழமை: வெள்ளி.




**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

நீதி நெறிகளுக்கு கட்டுப்பட்டு வாழ்க்கையும், நெருங்கியவர்களுக்கு உதவும் நெஞ்சமும் பெற்ற மிதுன ராசி அன்பர்களே!

தீவிர முயற்சியின் பேரிலேயே நீங்கள் எடுக்கும் செயல்களில் முன்னேற்றம் காண்பீர்கள். நெருங்கிய நண்பர்களின் ஆதரவுடன் முக்கிய பணிகளை வெற்றிகரமாக முடித்துக் கொள்வீர்கள். சிறு சிறு பிரச்சினைகள் தோன்றினாலும், உங்கள் பொறுமையால் அதை சரி செய்வீர்கள். பழைய வாகனங்களை மாற்றி, புதிய வாகனங்கள் வாங்கலாம். குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படலாம். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். சுப நிகழ்ச்சிகள் தள்ளிப்போகலாம். மகன் அல்லது மகளுக்கு புதிய வேலை கிடைத்து மகிழ்ச்சி ஏற்படும். பெண்கள் தேவையற்ற வார்த்தைகளால் மனக்கசப்பு அடைய நேரிடும். பங்குச்சந்தையில் வியாபாரம் எதிர்பார்க்கும் அளவு இல்லாமல் போகலாம்.

அதிர்ஷ்ட எண்கள்: 5,6,9. அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு. அதிர்ஷ்டக்கிழமை: வெள்ளி.




**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயில்யம்**

முன்னேற வேண்டும் என்ற எண்ணமும், எதையும் முன்னால் நின்று சாதிக்கும் குணமும் கொண்ட கடக ராசி அன்பர்களே!

நினைத்தபடி எடுத்த காரியங்களில் வெற்றி பெற முயற்சிகளை மேற்கொள்வீர்கள். தடைகளாலும், தாமதங்களாலும், மனச்சோர்வு ஏற்படலாம். விலகிச் சென்ற உறவுகளையும் விரும்பிச் சென்று அரவணைத்துக் கொள்ளும் மனம் உருவாகும். எதிர்பார்த்த முக்கிய தகவல் கிடைத்து மகிழ்வடைவீர்கள். குடும்பத்தில் எதிர்பாராத சிறுசிறு பிரச்சினைகளை சமாளிக்க வேண்டியிருக்கும். செலவுகளைப் பற்றிய சிந்தனை கலக்கம் அளிக்கும். பெண்கள் மற்றவர்களுக்கு வாக்குறுதி கொடுப்பதையோ, ஜாமீன் கொடுப்பதையோ தவிர்க்க வேண்டும். பங்குச்சந்தை வியாபாரம் திருப்தி தருவதாக இருக்காது. சுயதொழில் நன்றாக நடைபெற்றாலும் சிறுசிறு குறைபாடுகள் அவ்வப்போது ஏற்படக்கூடும். குறைகளைச் சரிசெய்து ஆதாயம் பெறக் காலதாமதம் ஏற்படலாம்.

அதிர்ஷ்ட எண்கள்: 3,6,7. அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு. அதிர்ஷ்டக்கிழமை: செவ்வாய்.




**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

சிறப்பான சிந்தனையும், தன்னைச் சேர்ந்தவர்களுக்கு உதவும் மனமும் மிக்க சிம்ம ராசி அன்பர்களே!

பல செயல்களில் முன்னேற்றமான பலன்களை அடைய முயன்றாலும் சிலவற்றில் மட்டுமே நற் பலன்களைப் பெறுவீர்கள். திட்டமிட்ட செயல்களில், நண்பர்களின் உதவி கொண்டு முன்னேற்றத்தைப் பெற பாடுபடுவீர்கள். பணவசதிகள் அளவாக இருக்கும். குடும்பம் அதிக பிரச்சினைகள் இல்லாமல் நடந்து வரும். தம்பதிகளுக்குள் ஒற்றுமை அதிகரிக்கும். தாய் வழி உறவுகளில் நடைபெறும் மங்கல விழாவில் கலந்து கொள்ளும்போது பெண்களுக்குள் சிறு மனத்தாங்கல் ஏற்படக்கூடும். பங்குச்சந்தையில் சுமாரான லாபம் ஏற்படலாம். பெரிய நிறுவனங்களின் அன்றாட நிலவரங்களைக் கவனிப்பது அவசியம். கூட்டுத்தொழில் வியாபாரம் சுமாராக நடைபெற்றாலும், வழக்கமான வருமானம் குறையாது.

அதிர்ஷ்ட எண்கள்: 1,5,9. அதிர்ஷ்ட நிறம்: வெளிர்மஞ்சள். அதிர்ஷ்டக்கிழமை: வியாழன்.




**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

எல்லாச் செயல்களிலும் முன்னெச்சரிக்கையோடு இருந்து வெற்றிகளை பெறும் கன்னி ராசி அன்பர்களே!

எதிர்பாராத நபர்களின் வருகையால் சில நல்ல காரியங்களை திறமையாக செய்து முடிப்பீர்கள். அதன் மூலம் எதிர்பார்க்கும் முன்னேற்றம் அடைவீர்கள். பண வரவுகள் திட்டமிட்டபடி சரியான நேரத்தில் வந்து சேரும். செய்து தருவதாக நண்பரிடம் வாக்களித்த ஒரு செயலை செய்ய முடியாத சூழ்நிலை உருவாகலாம். எதிர்பார்த்த முக்கியமான தகவல் தபால் மூலம் கிடைக்கலாம். குடும்ப அங்கத்தினர்களிடம் ஒற்றுமை காணப்படும். கடன்கள் இருந்தாலும் தொல்லை ஏற்படாது. பெண்கள் தங்கள் திறமையால் குடும்பத்தில் செலவுகளை சமாளிப்பர். சேமிப்பை பெருக்குவீர்கள். பங்குச் சந்தையில் சுமாரான லாபம் கிடைக்கக்கூடும்.

அதிர்ஷ்ட எண்கள்: 5,6,9. அதிர்ஷ்ட நிறம்: வெளிர்நீலம். அதிர்ஷ்டக்கிழமை: சனி.




**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

சிறிய செயலையும் கலை நுணுக்கத்தோடு அழகாக செய்து பாராட்டு பெறும் துலாம் ராசி அன்பர்களே!

உங்களது முயற்சிகள் பலவற்றில் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். நண்பர்களும், உறவினர்களும் உங்கள் செயல்களில் பக்கபலமாக இருப்பார்கள். வரவேண்டிய இடங்களிலிருந்து திட்ட மிட்டபடி பணம் வந்து சேரும். விருந்து மற்றும் மங்கல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்படும். குடும்பம் சீராக நடைபெறும். கடன்கள் தொல்லை அளிக்காது. வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொடுத்து மனைவியையும் குழந்தைகளையும் மகிழ்விப்பீர்கள். பங்குச்சந்தை வியாபாரத்தில் ஓரளவு நல்ல லாபம் ஏற்படலாம். நண்பர்களின் ஆலோசனை பலன் தரும்.

அதிர்ஷ்ட எண்கள்: 2,8,9. அதிர்ஷ்ட நிறம்: கருநீலம். அதிர்ஷ்டக்கிழமை: சனி.




**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

கவலைகளை மறந்து களிப்பான முகத்தோடு காட்சி தரும் விருச்ஷிக ராசி அன்பர்களே!

நல்ல சிந்தனையோடு தடைகளைக் கடந்து முயற்சியோடு செயல்களில் வெற்றி பெற முற்படுவீர்கள். என்றாலும், நீங்கள் எதிர்பார்த்துச் சென்ற நபர்களை சந்திக்க முடியாமல் போகலாம். பணவரவுகளில் காரணமில்லாத தாமதங்களைச் சந்திக்க நேரலாம். நீங்கள் நீண்ட காலமாக சந்திக்காத நண்பரைச் செல்லும் வழியில் சந்தித்து மகிழலாம். பிரபலமான ஒருவரின் அறிமுகம் ஏற்பட்டு அவரால் ஒரு முக்கிய காரியம் நடைபெறலாம். உத்தியோக பொறுப்புகளில் கவனமும், நிதானமும் அவசியம். குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் இருந்தாலும் பாதிப்பு இருக்காது. பிரிந்த குடும்ப நண்பர் தங்களைத் தேடிவர வாய்ப்புண்டு. பெண்களின் முயற்சியால் குடும்பத்தில் ஒரு சுபகாரியம் நடைபெற வாய்ப்புண்டு. பங்குச்சந்தை வியாபாரம் சுமாரான லாபம் கொண்டு வரும்.

அதிர்ஷ்ட எண்கள்: 3,6,9. அதிர்ஷ்ட நிறம்: வெளிர்மஞ்சள். அதிர்ஷ்டக்கிழமை: வியாழன்.




**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

பிறர் மனதைப் புரிந்து செயலாற்றும் திறனும், உயர்ந்த சிந்தனை ஆற்றலும் கொண்ட தனுசு ராசி அன்பர்களே!

இந்த வாரம் எதிர்பார்க்கும் பிரபல நபரை சந்திப்பதால் முக்கியமான செயல்களில் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். நண்பர்களும், பிரபலமான நபர் ஒருவரும் உங்கள் செயலுக்கு உறுதுணையாக இருப்பார்கள். முக்கியமானவர்களால் காரிய வெற்றியும், பொருளாதார முன்னேற்றமும் ஏற்படக்கூடும். திட்டமிட்ட பணவரவுகளால் மகிழ்ச்சியும், சந்தோஷமும் அடைவீர்கள். குடும்பத்தில் ஏற்படும் சிறுசிறு பிரச்சினைகள் பெண்களால் சமாளிக்கப்படும். திட்டமிட்ட சுபநிகழ்ச்சியில், எதிர்பார்த்த நெருங்கிய உறவினரைச் சந்தித்து அவசியமான காரியம் ஒன்றை முடிவுக்குக் கொண்டு வருவீர்கள். பெண்கள் புதிய ஆடை அணிகலன்கள் வாங்க வாய்ப்புண்டு. பங்குச்சந்தை வியாபாரம் சுமாராக நடைபெறும்.

அதிர்ஷ்ட எண்கள்: 1,5,6. அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு. அதிர்ஷ்டக்கிழமை: ஞாயிறு.




**உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

பழகியவர்களிடம் பாசத்தைக் காட்டினாலும், செயல்களில் கருத்தாக இருக்கும் மகர ராசி அன்பர்களே!

நெருங்கிய உறவினரின் உதவியால் சில பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். எடுத்த காரியங்களில் தீவிரமாகப் பணியாற்றி வெற்றிகளை அடைவீர்கள். நீண்ட காலமாகத் தள்ளி போட்டவைகளை தற்போது செய்து முடிக்க முற்படுவீர்கள். எதிர்பார்த்தபடி பணவரவுகள் வந்து சேரும். குடும்பத்தில் அவ்வப்போது சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டு சமாளிக்கப்படும். சுபநிகழ்ச்சிகள் திட்டமிட்டவாறு நடைபெறும். அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய வரிகளை சரியான காலத்தில் செலுத்தாவிட்டால் பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும். பெண்கள் தாய்வழி சொந்தங்களால் ஆதாயம் அடைவீர்கள். பங்குச்சந்தை வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிடைக்காது.

அதிர்ஷ்ட எண்கள்: 6,7,9 அதிர்ஷ்ட நிறம்: நீலம். அதிர்ஷ்டக் கிழமை: வெள்ளி.




**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

செயல்களை நன்கு ஆராய்ந்து திறமையுடன் செய்து முடிக்கும் ஆற்றல் பெற்ற கும்ப ராசி அன்பர்களே!

பல இடையூறுகளைக் கடந்து திட்டமிட்ட செயல்களை தீவிர முயற்சியுடன் செய்து முன்னேறுவீர்கள். சிறு சிறு இடையூறுகள் தலைகாட்டக் கூடும். உங்கள் முயற்சியால் அவைகளைப் பலவீனமடையச் செய்து வெற்றி பெறுவீர்கள். வரவேண்டிய பணவரவுகள் சில பின் தங்கினாலும் கொடுக்கவேண்டிய சமயத்துக்குக் கிடைத்துவிடும். குடும்பத்தில் தொல்லைகள் இருக்காது என்றாலும், அவ்வப்போது சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டு சமாளிக்கப்படும். எதிர்பாராத விருந்தாளிகள் வருகையும், அதனால் மகிழ்ச்சியும் உண்டாகலாம். பெண்கள் ஆபரணங்களையும், முக்கிய ஆவணங்களையும் பாதுகாப்பாக வைத்திருப்பது அவசியமாகும். பங்குச்சந்தை வியாபாரம் சுமாரான லாபத்தைக் கொண்டுவரும்.

அதிர்ஷ்ட எண்கள்: 2,5,9. அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை. அதிர்ஷ்டக்கிழமை: புதன்.




**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

கற்பனைச் செறிவோடு கருத்துமிக்க செயல்களில் ஈடுபட்டு வெற்றி பெறும் மீன ராசி அன்பர்களே!

எதையும் சிந்தித்து செய்து சிறப்பான முன்னேற்றம் அடைவீர்கள். சிறுசிறு தடைகளை உங்கள் தீவிர முயற்சியால் தகர்த்து வெற்றி பெறுவீர்கள். ஆவணங்களைப் பாதுகாப்பதில் கவனம் தேவை. கூட்டுத்தொழிலில் வியாபாரம் நன்றாக நடைபெற்றாலும் எதிர்பார்க்கும் லாபம் கிடைக்காமல் போகலாம். பணம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் தலை தூக்கலாம். பழைய கடன்களைத் தீர்க்கப் புதிய கடன்கள் வாங்க நேரலாம். சுபநிகழ்ச்சிகள் தள்ளிப்போக கூடும். பெண்கள் குடும்ப ஒற்றுமைக்காக கடுமையாக பாடுபடுவீர்கள். இருந்தாலும் தேவையற்ற சொற்களை கேட்க நேரலாம். பங்குச்சந்தை வியாபாரம் சுமாராக நடைபெறும்.

அதிர்ஷ்ட எண்கள்: 2,5,9. அதிர்ஷ்ட நிறம்: வெண்மை. அதிர்ஷ்டக்கிழமை: திங்கள்.

# வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றானா?

"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்'' என்று நீண்ட காலமாகச் சொல்லப்பட்டுவரும் ஒரு சங்கதி என்பதை எல்லோரும் அறிவார்கள். இருந்தும் வாசிப்பதால் மட்டும் ஒரு மனிதன் பூரணத்துவம் அடைந்துவிட முடியாது. நல்ல நூல்களை தேடிப் படிப்பதன் மூலம் அவன் பெற்றுக்கொண்ட அறிவு மற்றவர்களுக்கு பயன்படும்போதுதான் அவன் கல்வியினால் பெற்ற பயனை அடைந்தவன் ஆகின்றான்.

பொய்யாமொழிப் புலவர் திருவள்ளுவர் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவு உடமை ஆகிய நான்கு அதிகாரங்களிலே மனிதன் எவ்வாறு அறிவை பெற்றுக்கொள்ளுகின்றான்; அவன் பெற்ற அறிவால் அவன் எவ்வாறு பயன் அடைகிறான்; அவன் பெற்ற அறிவு மற்றவர்களுக்கு எவ்வாறு பயன்படுகிறது என்று பல குறள்கள் மூலம் எடுத்துக்காட்டியுள்ளார்.

''தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு''

தோண்டத் தோண்ட மணல் இடையே அமைந்துள்ள ஊற்று ஊறும் அதுபோல மாந்தர்க்கு நூல்களைக் கற்க கற்க அறிவு ஊறி மேம்படும்.

''தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்றுஅறிந் தார்''

ஒருவர் கற்ற கல்வியால் தாம் அடையும் இன்பமானது அவர் மற்றவர்க்கு சொல்லும்போது கேட்போரும் இன்புறுதலைக் காணவும் கேட்கவும் மேதைகள் விரும்புவர் என்கிறார் வள்ளுவர்.

வாசிப்புச் செயற்பாடு சமூக இயல்போடும் கல்விக் கவிநிலையோடும் இணைந்த இயக்கமாகின்றது. ''சிதைந்து செல்லும் குடும்பங்களை நூல்களால் ஒன்றிணைப்போம் (United Through Books) என்ற தலைப்பிட்ட சுவரொட்டிகள் ஒரு சமயம் பிரித்தானிய புத்தக வாரமொன்றிலே காட்சிப்படுத்தப்பட்டன.'' சமூகத்தின் அடிப்படை அலகாகவும், அடியாதாரமாகவும், கல்வியின் ஆரம்ப நிலையமாகவும் இருக்கும் குடும்பத்தை வாசித்தலாலும் நூல்களாலும் சிதைவுறாது தடுக்கலாம் என்ற முன்மொழிவு சமூகம் - கல்வி - வாசிப்பு ஆகியவற்றிடையே உள்ள நேர்த்தொடர்புகளை மீள வலியுறுத்துகின்றது. உயர் நிலையான வாசிப்பானது குடும்ப நிலையிலும் சமூக நிலையிலும், பொருண்மிய நிலையிலும் மேலெழுச்சிகளை (Articulation) ஏற்படுத்தவல்லது. இன்றைய நிலையில் வளர்முக சமூகங்கள் ஆள்நிலை வாசிப்பை நோக்கி நகர்ந்து செல்லவேண்டிய தவிர்க்க முடியாத நிலை தோற்றம் பெற்றுள்ளது என்கிறார் பேராசிரியர் சபா ஜெயராசா.

புதிய எண்ணக்கருக்கள் மேலெழுந்து நிற்கின்ற இக்கால கட்டத்தில் அதன் முரணியல்புகளை ஆதரித்தும் எதிர்த்தும் எழுத்தாக்கங்களும் நூலாக்கங்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவற்றை அடியொட்டி எதிர்வாசிப்பும் நேர்வாசிப்பும் வழர்ந்தவண்ணமுள்ளன.

விவசாயம், கைத்தொழில், பொருளாதாரத்தின் முக்கிய அலகுகளாக இருந்த காலம் மாறி, இன்று அறிவுப் பொருளாதாரம் வளர்ச்சி கண்டுநிற்கின்றது. அறிவுப் பொருளாதாரத்தின் வளர்ச்சியில் அறிவு முதலீடாகவும், அதேவேளை விற்பனை பண்டமாகவும் மாறுகின்றது. அறிவின் வழியாக எழும் கண்டுபிடிப்புகளும் புத்தாக்கங்களும் ஆழ்ந்த வாசிப்புடன் தொடர்புடையவை. ஆழ்ந்த வாசிப்பு அறிவுப் பொருளாதார ஆக்கத்திலே அடிப்படையாக வேண்டப்படும் செயற்பாடாகிறது. அறிவைத்திரட்டிக்கொள்ளல் என்பது கடினத் தன்மைகளையும், சிக்கல்களையும் தொடர்ச்சியாகச் சந்திக்கவேண்டிய நெடுவழிப் பயணமாகும். வாசிப்பைப் பொறுத்தவரை அது ஒரு சவால்நிலை அல்லது அறைகூவல் நிலை. அறிவின் முன்னெழு பாய்ச்சலுடன் ஒன்றிணைய வேண்டுமாயின் மேற்குறித்துள்ள அறைகூவலுக்கு முகம்கொடுத்தல் வேண்டும். மேலும் அறிவாற்றலை முன்னெடுத்துச் செல்லும் சமூகங்கள் சிக்கல் மற்றும் கடின வழிகளை இங்கிதமாக ஏற்றுவருவதால் அறிவின் வழியான பொருண்மிய ஆக்கங்களை அனுபவித்து வருகின்றன.

அரசுகளும் ஆட்சி முறைகளும் இன்று உலகளாவிய முறையிலே கட்டமைப்பு செய்யப்பட்டு வருவதை அவதானிக்கும்போது அன்று திருவள்ளுவர் கூறிய இறைமாட்சியின் பண்புகளை எண்ணிப்பார்க்க வேண்டிய கட்டாயம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

''தூங்காமை, கல்வி, துணிவுடைமை இம் மூன்றும்
நீங்கா நிலன்ஆள்பவற்கு''

மண்ணை ஆளும் மன்னவரிடம் என்றும் நீங்காது இருக்க வேண்டிய காலம் தாழ்த்தாது உடனுக்குடன் செயலாற்றும் திறன், அவை அறிதற்கு ஏற்ற சிறந்த கல்வி, அறிவு, தன் முடிவுகளை நடைமுறைப்படுத்தும் துணிச்சல் என்பன இருக்க வேண்டும். அறிவே முக்கியத்துவம் பெறுகின்றது.

வாசிப்பில் ஈடுபடும் ஒருவன் புறவிசையங்கள் அனைத்தையும் தன் வாசிப்பின் அசுரபசிக்கு இரையாக்குகின்றான். இதன் பேறாய் புறவிசயங்கள் அனைத்தும் அவனது மூளையில் களஞ்சியப் படுத்தப்படுகின்றன. அவனவன் களஞ்சியப்படுத்தலுக்கு ஏற்றவாறு அறிவாளிகள் உருவாகுவர். வாசிக்கும் ஒருவன் வாசிக்கப்படுகின்ற ஒருவனாக மாறுகின்றபோது வாசித்தலும் வாசிக்கப்படுதலும் ஒத்துநிகழும் ஒன்று. இதை இனம்பிரித்துப்பார்த்தல் அவனவன் ஆற்றலுக்குரியது. இவ்வாறு ஒருவன் வாசிக்கப்படுபவனாக மாறும்போது அவனது வெளிப்போன பார்வை அவனை நோக்கி திரும்புகிறது. இவ் திரும்புதலானது ஒருவனை தனது அகத்தையும் இருப்பையும் பற்றி ஆய்வு செய்யும் ஆழத்திற்கு இறக்கிவிடுகிறது.

தன்னை ஆய்வு செய்யும் ஆழத்திற்கு இறங்கும் ஒருவன் காலம், இடம், பொருள் என்று கட்டமைத்தவையும் தவறிப்போக தன் இருப்பு மட்டுமே எஞ்சி இருப்பதை உணர்கிறான். வாசகர்கள் புதிய வாசிப்பு மரபின் உச்சங்களை வேண்டிநிற்க வேண்டும். இதுவே சமகால கலை இலக்கிய மரபில் வேண்டப்படும் புதுவெளியும் ஆகும். இந்த வெளியில் வாசகர்கள் இயல்பாக பயணம் செய்ய வேண்டுமானால் தம்மை தயார்படுத்த வேண்டும். வாசிப்பின் பல்வேறு தள நிலை சாத்தியப்பாடுகளில் அதிக கவனம் குவிக்க வேண்டும். புதிய வாசிப்பு மனம் புதிய படைப்புகளை முழுமையாக விசாரணைக்கு உட்படுத்தும் உள்ளீடுகளை உற்பத்தி செய்யும். இத்தகைய தொந்தரவுகள் வலிகள் இல்லாத வாசிப்புக் கலையின் அழகியலை, அதன் அரசியலை உள்வாங்க மறுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




சம காலத்தில் மனிதன் சமூக, அரசியல், பொருளாதார பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியவனாகின்றான். முக்கியப்படும் பிரச்சினைகள் மீதான கவனக்குவிப்பை இவை சார்ந்த நூல்கள் முக்கியப்படுத்தியுள்ளன. பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்குப் புத்தகங்கள் வாயிலான தேடலும், வாசிப்பு மூலமான அறிவும் முக்கியம் பெறுகின்றன. புத்தகம் ஒரு நேரத்தில் ஒருவரை மட்டுமே பிரவேசிக்கும் ஒற்றை வழியாய் இருக்கிறது. வரிகளின் சாலையில் நடக்க நடக்க எண்ணிக்கையற்ற ஜனத்திரளை - நகரங்களை - காட்சிகளை - துயரத்தை - கொண்டாட்டத்தை - வியப்பை - கொடூரத்தை - அனுதாபத்தை - பக்குவத்தை உண்டாக்குவதை உணரமுடிகிறது. வாசிப்பு ஒருவனைப் பூரணப்படுத்துகின்றதோ இல்லையோ அவனை மனிதனாக்க முயற்சிக்கின்றது. ✱

### கோளமயமாக்கல் கல்வியில்

(சென்றவாரத் தொடர்ச்சி)

கார்ல் மார்க்சின் விசை கொண்ட சிந்தனைகளின் கோட்பாடு மீண்டும் அவசியமாகி விட்டது. கியூபா நாட்டில் மேற்கொள்ளப்படும் கல்வி கொள்கைகள் வளர்ந்து வரும் நாடுகளின் கல்வி வளர்ச்சிக்கு பெரும் பயன் அளிக்கும் என்பது சில வறிய நாடுகளின் கருத்தாக அமைந்துள்ளது,

# கோளமயமாக்கல் கல்வியில் ஏற்படுத்திய தாக்கம்

பெரியார் டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா வினால் இலங்கையில் கொண்டு வரப்பட்ட 'இலவசக்கல்வி' மேல்தட்டு மக்களினதும், மத்திய தர வர்க்கத்தினதும் அபிலாசைகளை நிறைவேற்றி உள்ளதே தவிர, கீழ் தட்டு மக்களின் கல்வி மேம்பாட்டை நோக்கி நகரவில்லை. இதற்கு கல்வி சார் அதிகாரிகளின் மனபோக்கும் ஒரு விதத்தில் காரணமாக இருந்துள்ளது என்பது மறுப்பதற்கு இல்லை.

சில தோட்டப்பகுதி பாடசாலைகள் அன்று ஆரம்பிக்கப்பட்ட நிலையிலேயே இன்றும் எதுவித வளமும் அற்று இருப்பதை அவதானிக்க முடிகிறது. அதேவேளை தோட்ட தொழிலாளர்களின் வாழ்க்கை பொருளாதார ரீதியில் மிகவும் பின்தள்ளப்பட்டு இருப்பதால் தங்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாமல் கூலிவேலைக்கு அனுப்பி சம்பாதித்து குடும்பத்தை நடத்த வேண்டிய பரிதாப நிலை தோன்றி உள்ளது.

பேனை பிடித்து எழுத வேண்டிய பிஞ்சு கரங்கள் பாத்திரம் தேய்த்து வயிற்றை கழுவும் வேதனை நிரம்பிய வாழ்க்கைக்கு தள்ளப்பட்டுள்ளனர். முதலாளித்துவ சமுதாய அமைப்பில் இத்தகைய ஏற்றத்தாழ்வுகள் இருந்தவண்ணமே உள்ளன.

அதே வேளை கோளமயமாக்கல் இன்னும் ஒரு படி உயர்ந்து நின்று வறிய நாடுகளை வாட்டி வதைக்கின்றன. இந்நிலையில் கல்வி வழங்கலும் விரிவும் உழைக்கும் வர்க்கத்தின் உயர் மட்ட திறன்களை சுரண்டும் நடவடிக்கையாக அமைதலைச் சுட்டிக்காட்ட வேண்டி உள்ளது.

கோளமயமாக்கலுக்கும் கல்விக்கும் உள்ளதொடர்பு பால் நிலையிலும் நோக்க வேண்டி உள்ளது. பெண்களின் நிலமையை பொறுத்த வரை தொழிற் சந்தை இருமை நிலை காணப்படுவதாக ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். வர்க்க நிலைக்கு உட்பட்ட சுரண்டலுடன், பால்நிலைப்பட்ட சுரண்டலும் இணைந்து செல்வதை காண முடியும். மனித வளத்தை மீள் உற்பத்தி செய்யும் சிக்கன நடவடிக்கையில் பெண்களே ஈடுபடுத்த படுகின்றனர்.

கோளமயமாக்கலால் வறுமை கோட்டின் கீழ் வாழும் பெண்களே அதிக தாக்கத்திற்கு உள்ளாகின்றனர். வறிய பெண்கள் கல்வி செயன்முறையில் இருந்து இலகுவாக வெளி வீசப்பட்டு விடுகின்றனர். இன்றைய கால கட்டத்தில் கல்வி வழங்குனரும், கல்வி பெறுனரும், சந்தை தேவையின் அடிப்படையாகவே தமது செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர். கட்டமைப்பு இலகுவாக்கல் என்ற பொருளாதார நடவடிக்கைகள் கல்விக்கென அரசு வழங்கும் நிதியை குறைக்கும் நிலையை உருவாக்கி உள்ளன. இதன் காரணமாக வறுமை கோட்டின் கீழ் வாழ்வோர் மற்றும் பிரதி கூலம் அனுபவித்தோர் கல்வி நிராகரிப்புக்கு உள்ளாகும் நிலை பெருக்கம் அடைய தொடங்கி உள்ளது. பொருளாதார நிலையில் அனுகூலம் பெற்றவர்களே கல்வி நிலையிலும் மேம்பாடு கொள்ளல் வலுவூட்டப் பட்டு வருகிறது. கோளமயமாக்கல் இன்றைய நிலையில் தமக்கு அனுகூலங்களை ஏற்படுத்தும் கல்வி விசையாகவும் விரிவடைந்து உள்ளது. 'இது எல்லோருக்கும் சமமான கல்வி' என்ற செயற்பாட்டுக்கு எதிரான போக்கை கொண்டு இருப்பது ஆரோக்கியமான செயற்பாடாக இல்லை என ஆய்வாளர்கள் ஏற்று கொண்டுள்ளார்கள்.

மாயப்பேரலைகளை உருவாக்கி, மாணவ சமுதாயத்தை திசை திருப்பும் சுரண்டும் வர்க்கத்துக்கு ஆதரவாக செயற்பட்டு ஏழை மாணவர்களின் கல்வியை கேள்விக்குறியாக்கி ஒரு வித குழப்ப நிலையை உலக மயமாக்கல் ஏற்படுத்தி உள்ளது என்பதே உண்மை.

(முற்றும்)

# இனந்தெரியாத சாபத்துக்கு ஆளான கென்னடி குடும்பம்



முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எப்.கென்னடி மனைவி குழந்தைகளுடன்...



ஜோன் ஜூனியர் தனது மனைவியுடன்...

ஒரு காலத்தில் உலகின் மிகப் பிரபல்யம் வாய்ந்த குடும்பமாக கென்னடி குடும்பம் திகழ்ந்து வந்தது. ஜோன் எப். கென்னடி அமெரிக்காவின் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றது முதல் அக்குடும்பம் மேலும் பிரபல்யம் அடையத் தொடங்கியது.

ஜனாதிபதிப் பதவியில் ஜோன் எப்.கென்னடி அமர்ந்திருந்தது சரியாக ஆயிரம் நாட்கள் மட்டுமே. அதன்பின் வெறியன் ஒருவனின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி அவர் மரணமானார்.

இந்தக் கொலையைத் தொடர்ந்து கென்னடியின் குடும்பத்தை ஆட்டுவித்த சாபம் பற்றிய வாதப் பிரதிவாதங்கள் உருவாகின. இக்குடும்பத்தின் மூதாதையர் ஒருவர் செய்த பாவகாரியம் அன்று தொடக்கம் கென்னடி பரம்பரையை உலுக்கி வருவதாகக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

இந்தச் சாபம் உண்மையாகட்டும் அல்லது பொய்யாகட்டும், கென்னடி குடும்பம் நீண்ட நாள் நிலைக்கவில்லை என்பது மட்டும் உண்மை.

கென்னடி குடும்பத்தின் கடைசி வாரிசு உதித்தபோது கென்னடி பதவியேற்று 16 நாட்களே ஆகியிருந்தன. மகன் பிறந்த செய்தி வெள்ளை மாளிகையின் ஓவல் மண்டபத்தில் கென்னடி இருந்தபோதே தெரிவிக்கப்பட்டது. ஜோன் எப்.கென்னடிக்கும் ஜெக்குலின் கென்னடிக்கும் பிறந்த இரண்டாவது மகனுக்கு ஜோன் எப்.கென்னடி என்றே பெயர் சூட்டப்பட்டது. எனினும், இந்தச் சிறுவன் பல பெயர்களால் அழைக்கப்பட்டான். ஜே.ஜே.ஜூனியர், ஜோன் ஜூனியர், ஜோன் எப்.கென்னடி ஜூனியர் ஆகிய பல பெயர்கள் அவனுக்கு உண்டு. ஜோன் ஜூனியரின் ஆரம்பப் பருவம் வெள்ளை மாளிகையில் தொடங்கியது. மிகவும் துடிப்பான இந்தச் சிறுவனின் புகைப்படங்கள் பல்வேறு பிரபல அமெரிக்கப் பத்திரிகைகளின் முகப்பட்டைகளை அலங்கரித்து வந்தன. பத்திரிகை நிருபர்களும், புகைப்படக் கலைஞர்களும் எப்போதும் கென்னடி குடும்பத்தை மொய்த்தவாறே இருந்தனர். வெள்ளை மாளிகையிலிருந்த வேறெந்த ஜனாதிபதியினது குடும்பத்தையும் விட கென்னடி குடும்பம் பத்திரிகையாளர்களின் கழுகுக் கண்களால் நோட்டமிடப்பட்டு வந்தது.

அந்தளவுக்கு கென்னடி குடும்பம் பொதுமக்களின் அன்புக்குப் பாத்திரமாயிருந்தது. ஜோன் ஜூனியர் சிறுவயது முதலே அச்சமின்றி கட கடவெனப் பேசும் திறமையைப் பெற்றிருந்தார். அவரது மழலைப் பேச்சை ரசிக்கவே கூட்டம் காத்துக்கிடந்தது. அனைவருக்கும் செல்லப்பிள்ளையாக விளங்கிவந்தார் ஜூனியர்.

ஜனாதிபதி கென்னடி படுகொலை செய்யப்பட்டபோது ஜோன் ஜூனியருக்கு வயது மூன்று. தந்தையின் இறுதிக் கிரியைகள் நடைபெற்ற சமயம் அவரது சடலத்தின் அருகில் நின்றுகொண்டு கம்பீரமாகக் கையை உயர்த்தி அவன் இறுதி மரியாதையைச் செலுத்திய காட்சி உலகெங்குமுள்ள கோடிக்கணக்கான மக்களின் இதயங்களைப் பிளந்தது. உலகில் சகல பிரபல பத்திரிகைகளிலும் இந்த மழலையின் ஆத்மார்த்த பிரியாவிடைப் புகைப்படம் முகப்பட்டைகளில் பிரசுரிக்கப்பட்டது.

தந்தையின் மரணத்துக்குப் பின் ஜூனியர் கென்னடி நியூயோர்க்குக்கு இடம்பெயரவேண்டிவந்தது. அங்கு பிரவுன்ஸ் பல்கலைக் கழகத்தில் அவர் சரித்திரத்துறையில் பட்டம்பெற்றார். அதன் பின் இந்தியாவுக்கு வந்து டில்லிப் பல்கலைக்கழகத்திலும் பட்டம் பெற்றார். அந்தச் சமயத்தில் அன்னை தெரேசாவைச் சந்தித்த ஜூனியர் அந்த அம்மையாரின் பரிசுத்த தொண்டால் பெரிதும் ஈர்க்கப்பட்டார். தெரேசா அம்மையாருக்கு தன் மனதில் உரிய இடமொன்றை அவர் நிரந்தரமாக ஒதுக்கினார்.

திரைப்படக் கதாநாயகன் போன்ற அழகிய கம்பீரமான தோற்றம் கொண்ட ஜோன் ஜூனியர் சட்டத்தரணியானார். அவரது அழகிய தோற்றமும் நளினமான நடையுடை பாவனையும் ஏராளமான யுவதிகளை அவர் பால் சுண்டியிழுத்தது. இறுதியில் கெரோலிஸ் பெசட் எனும் அழகியின் வலையில் ஜூனியர் சிக்கிக் கொண்டார்.

1996இல் நடந்த இந்தத் திருப்பம் திருமணத்தில் முடிந்தது. ஜோன் ஜூனியருக்கு தனிப்பட்ட வாழ்க்கையொன்று இல்லையோ என்று சந்தேகப்படும் அளவுக்கு அவர் பொது வாழ்க்கையில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டிருந்தார். சாதாரண மக்களுடன் பொழுதைப் போக்குவதை அவர் பெரிதும் விரும்பினார்.

சிறுவயதிலிருந்தே ஜூனியருக்கு விமானங்கள் மீது அலாதிப்பற்று இருந்து வந்தது. விமானங்களுக்கு அருகில் தந்தையுடன் நின்று கொண்டிருக்கும்போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் அடிக்கடி பத்திரிகைகளில் பிரசுரமாகி வந்துள்ளன. சிறு வயது ஆசை வளர்ந்து வளர்ந்து இளைஞனான பின்பு விமானத்தை இயக்கிப் பழகுவதில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள வைத்தது.

விமானியாகவேண்டுமென்ற உத்வேகத்தில் ஜூனியர் முழுமூச்சாகச் செயற்படத் தொடங்கினார். விமானம் ஓட்டுவதை ஒரு சிறந்த கலையாக வரித்துக்கொண்ட ஜூனியர் வெகுவிரைவில் தேர்ச்சி பெற்ற விமானியானார்.

துர்ப்பாக்கிய நாளான 1999ஆம் ஆண்டு ஜூலை 16ஆம் திகதி இரவு தனது சகோதரர் முறையான ஒருவரின் விருந்தில் கலந்துகொள்வதற்காக விமானத்தைக் கிளப்பிச் சென்றார். அவருடன் அவரது மனைவி கெரோலிஸ் மற்றும் அவரது சிநேகிதி லொரேன் ஆகிய இருவரும் இருந்தனர்.

'மார்த்தாஸ் வைன் யார்ட்ஸ்' எனும் பிரசித்திபெற்ற இடத்திலேயே விருந்து ஏற்பாடாகியிருந்தது. இந்த இடம் ஜூனியருக்கு தனது சொந்த வீட்டைப்போல நன்று பரிச்சயமான ஒன்றாகும்.

துரதிஷ்டவசமாக அன்றிரவு விமானம் புறப்பட்ட பின் காலநிலை மிகவும் மோசமானது. பயிற்சிமிக்க விமானியான போதும் ஜூனியருக்கு விமானத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போய்விட்டது. பயங்கர மூடுபனி நிலைமையை மேலும் மோசமாக்கியது. இறுதியாக விமானம் கடற்கரையில் விழுந்து நொருங்கி புகழ்பூத்த கென்னடி குடும்பத்தின் கடைசி ஆண் வாரிசைக் காவுகொண்டது.

விமானம் நொருங்கி வீழ்ந்ததைக் கேள்விப்பட்டவர்கள் அவ்விடத்துக்கு விரைந்தனர். எனினும், வெறும் முப்பத்தெட்டே வயதான இந்த சுந்தர புருஷனின் உடலையே அவர்களால் காணமுடிந்தது.

முன்பின் அறிமுகமில்லாதவர்களுடன் கூட இனிமையாகப் பேசி அவர்களைக் கவர்ந்திழுக்கும் கென்னடி ஜூனியரின் இழப்பு அமெரிக்கர்களை மட்டுமல்ல உலகெங்குமுள்ள கோடிக்கணக்கான மக்களை ஆழ்ந்த துயரத்துக்கு ஆளாக்கியது.

பிரபல்யமான கென்னடி குடும்பத்தின் இளைய மகனான ஜூனியரின் அகால இழப்பு இலகுவில் ஜீரணித்துக்கொள்ள முடியாதவொன்றாக மாறியதுடன் அக்குடும்பத்தின் கடைசி ஆண் வாரிசும் மறைந்தது. ஜனாதிபதி ஜோன் எப்.கென்னடியின் அகால மரணத்ின்போது கூடியிருந்தவர்கள் விவாதித்த அந்தச் சாபம் மீண்டும் ஓர் உயிரைக் காவுகொண்டபோது புத்துயிர் பெற்றது போலவே தோன்றியது.

விஞ்ஞானத்திலும் தொழில்நுட்பத்துறையிலும் உலகின் முன்னணி நாடாக விளங்குகிறது அமெரிக்கா. மூட நம்பிக்கைகளுக்கு அங்கு இடமில்லை. விஞ்ஞான ரீதியில் விளக்கம் இல்லாவிட்டால் எந்தக் கருத்தும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

அவ்வளவும் உண்மையென எடுத்துக்கொண்டாலும் சொல்லி வைத்தால் போல கென்னடி குடும்பத்தில் ஒவ்வொரு ஆண் வாரிசும் அகால மரணமடைந்ததை விஞ்ஞானத்தால் விளக்கமுடியுமா? அல்லது சாபமே இதற்குக் காரணமென ஒப்புவிக்கத்தான் முடியுமா?

**- சுடர் மனியன்**


## மிக், மக் வெல்டிங் தொழில்நுட்ப சான்றிதழ் கற்கைநெறி

இக் கற்கைநெறி பாடசாலை படிப்பை முடித்தவர்கள், வெல்டிங் தொழில்துறையில் பயிற்சி பெறுபவர்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருப்பவர்கள் மற்றும் வெல்டிங் தொழில்துறையில் விருப்பமுள்ளவர்கள் அனைவருக்கும் பொருத்தமானதாகும்.

இடம்: UTE தொழில்நுட்ப பயிற்சி நிலையம், வத்தளை.

திறமையான மிக் வெல்டிங் தொழில்நுட்பவியலாளர் ஆவதற்கான முழுமையான பாடக்குறிப்பு மற்றும் பிரயோக தொழில்நுட்ப பயிற்சி இக்கற்கை நெறியில் அடங்கியுள்ளது.

ஆரம்ப வெல்டிங் தொழில்துறை அனுபவம் அவசியமில்லை.

மிகவும் பிந்திய வெல்டிங் தொழில்நுட்ப முறைகளில் மிகுந்த அனுபவமும் பயிற்சியும் பெற்ற பயிற்றுவிப்பாளர்களால் இக்கற்கைநெறி நடாத்தப்படும்.

கற்கைநெறியின் அடக்கம்

- வெல்டிங் தொழில்துறையில் கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு முறைகள்
- அடிப்படை வெல்டிங் முறைமைகளின் அறிமுகம்.
- வாயு மற்றும் உலோக வெல்டிங் முறைமைகள் சம்பந்தமான பாடக்குறிப்பு.
- அனைத்து பயிற்சியாளருக்கும் தனித்தனியான பிரயோகப் பயிற்சிகள்.
- திறமைகாண் பரீட்சை.

அனைத்துப் பயிற்சியாளருக்கும் தொழில்துறையில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும். கற்கைநெறிக்கான கட்டணம்: ரூபா 9000.00 (இக்கட்டணம் மதிய போசனம், கற்கைநெறிக்கான உபகரணங்கள் மற்றும் சான்றிதழ் போன்றவற்றை அடக்கும்)

மேலதிக தகவல்களுக்கு: 0772 753 146

யுனைட்டட் ட்ரக்டர் இக்வீப்மன்ட் (தனியார்) நிறுவனம்.
683, நீர்கொழும்பு வீதி, மாபோளை, வத்தளை, இலங்கை.
தொலைபேசி: +94112932109 / தொலைநகல்: +94112931550
வெப்தளம் : www.utequip.com

United Tractors CAT

# அன்றைய கவர்ச்சிக் கன்னி இன்று பிரான்ஸின் ஜனாதிபதி வேட்பாளர்



பிரிஜட் பாடோ 1960ஆம் ஆண்டுகளில் ஐரோப்பிய சினிமா உலகை கலக்கிய கவர்ச்சிக் கன்னி. தனது எடுப்பான அங்கங்களாலும் போதையேற்றும் விழிகளாலும் இலட்சக் கணக்கான ஆண்களை வயது வித்தியாசமன்றி சுண்டியிழுத்தவர்.

இப்போது 76 வயதாகும் பிரிஜட் பாடோவின் உடல் தளர்ந்து போனாலும் முகத்தில் அதே குறும்புச் சிரிப்பு இன்னும் தவழ்ந்து கொண்டுதான் இருக்கிறது.



சினிமாவை விட்டு விலகிய பின் விலங்குகள் பாதுகாப்பில் தீவிரமாக ஈடுபட்ட பிரிஜட், இப்போது சுற்றாடல் கூட்டமைப்புக் கட்சியின் வேட்பாளராக 2012இல் பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளார். அவரது கட்சி விலங்குகளின் நலன் அவற்றின் பராமரிப்பு பாதுகாப்பு போன்றவற்றில் தீவிர கவனம் செலுத்தி வருவதுடன் அவற்றின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும் முன்னின்று செயற்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடவுள்ளதைப் பற்றி பிரிஜட் பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கலஸ் சார்கோசிக்கு எழுத்து மூல அறிவித்தல் கொடுத்துள்ளார். அந்த அறிவித்தலில் பிரான்ஸ் நாட்டு மக்களைப் போலவே அங்குள்ள விலங்குகள் சார்பிலும் குரல் கொடுக்க ஒருவர் தேவை என்பதாலேயே இந்த முடிவை எடுத்துள்ளதாக பிரிஜட் சுட்டிக் காட்டியுள்ளார். சார்கோசி அக்கறை எடுக்காத அல்லது நிறைவேற்றாத விலங்குகளின் நலன் பற்றிய நடவடிக்கைகளை தான் முன்னெடுக்கப் போவதாக அவர் வலியுறுத்தியுள்ளார்.

சுற்றாடல் கூட்டமைப்புக் கட்சியின் தலைவர் அன்கொடின் பச்சர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சியின் சார்பாகப் போட்டியிடத் தகுதி வாய்ந்தவர் பிரஜட் மட்டுமே என்று கூறியுள்ளார்.

பிரான்ஸ் நாட்டில் தாராளமாக நடந்துவரும் ஓரினச் சேர்க்கையை பிரிஜட் வன்மையாகக் கண்டித்து வருகிறார்.

பிரிஜட் பாடோ 1934ஆம் ஆண்டு செப்டெம்பர் 28ஆம் திகதி பாரிஸில் பிறந்தார். அவர் வளர்ந்தது மத்திய வகுப்பைச் சேர்ந்த றோமன் கத்தோலிக்க குடும்பப் பின்னணியிலேயே.

பிரிஜட் பாடோ 1949ஆம் ஆண்டில் முதன்முதலாக பெஷன் உலகில் மாடல் அழகியாகக் காலடி எடுத்து வைத்தார். அதே வருடத்தில் Jardin des Modes எனும் பெஷன் பத்திரிகையின் முன் பக்கத்தை அலங்கரிக்கும் வாய்ப்பைப் பெற்றார். 1950ஆம் ஆண்டின் பிரபல பெஷன் பத்திரிகையான ELLE சஞ்சிகையின் முன்பக்கத்தையும் பிரிஜட் அலங்கரித்தார்.

**சுப்பர்**

இந்த படம் இளம் படத் தயாரிப்பாளரான ரோஜர் ஒடிம் என்பவரின் கவனத்தை ஈர்த்தது. அவர் அந்த படத்துடன் மாக் அலிகிரே எனும் சினிமா தயாரிப்பாளரை அணுகினார். பிரிஜட்டின் அழகால் ஈர்க்கப்பட்ட மாக் அலகிரே Les Lauriers Sont Coupes எனும் படத்தில் நடிப்பதற்கு அவருக்கு அழைப்பு விடுத்தார். ஏதோவொரு காரணத்துக்காக அப்படவாய்ப்பு இடையில் கைநழுவிப் போனாலும் பிரிஜட்டின் முகம் சினிமாவுலகில் அறிமுகமாகிவிட்டது. அதன்பின் ரோஜர் ஓடிமின் அயராத முயற்சியாலும் வழிகாட்டலாலும் பிரிஜட்டின் சினிமா வாழ்க்கை முன்னேற்றம் கண்டது. ஆரம்பத்தில் வெறும் நட்பாக இருந்த அவர்களது உறவு காலப் போக்கில் காதலாக மலர்ந்து திருமணத்தில் முடிவுபெற்றது.

1952ஆம் ஆண்டு இவர்களது திருமணம் நடந்தேறியது. 1953ஆம் ஆண்டு பிரபலமான கேன்ஸ் சினிமா உற்சவத்துக்கு பிரசன்னமாகியதைத் தொடர்ந்து பிரிஜட்டின் செல்வாக்கு அதிகரிக்கத் தொடங்கியது.

பிரிஜட் நடித்த பெரும்பாலான படங்கள் காதலையும் கவர்ச்சியையும் வைத்தே எடுக்கப்பட்டன. எனினும், அவரது கணவரும் திரைப்படத் தயாரிப்பாளருமான ரோஜர் ஓடம் தன் மனைவி தொடர்ந்தும் அத்தகைய படங்களில் நடிப்பதை விரும்பவில்லை. இத்தகைய குப்பைப் படங்களில் நடிக்குமளவுக்கு பிரிஜட் தாழ்ந்து போகக்கூடாது என்பது அவரது பிடிவாதம். தனது மனைவியின் முழுத்திறமையும் வெளிப்படும் விதத்தில் சிறந்த படங்களில் நடிக்க வேண்டுமென்பதே ரோஜரின் விருப்பமாக இருந்தது.

அதற்கமைய ஜீன் லூவி பிரியண்டியன்ஸ்ட் என்பவருடன் இணைந்து 1956ஆம் ஆண்டு God Create Woman என்ற படத்தை எடுத்தார். இதில் கதாநாயகியாக வேடமேற்ற பிரிஜட் கௌரவமான தோற்றத்தில் தோன்றினார். எதிர்பார்த்தவாறே அவரது புகழ் இத்திரைப்படத்தின் மூலம் சர்வதேச மட்டத்தை எட்டியது.

பிரிஜட் பாடோவின் இரண்டாவது திருமணம் ஜான்ஸ் ஷரீ என்பருடன் 1959இல் நடைபெற்றது. அவர்களுக்குப் பிறந்த நிக்கலஸ் ஜான்ஸ் ஷரீ, பிரிஜட் பாடோவின் ஒரேயொரு புதல்வராவார். இந்தத் திருமணமும் நெடுநாள் நிலைக்கவில்லை. 1962ஆம் ஆண்டு இருவரும் சட்டபூர்வமாக பிரிந்து கொண்டனர். அதன்பின் பிரிஜட்டின் புதல்வனும் அவரை விட்டுப் பிரிந்துவிட்டதால் பிரிஜட் தனிமையானார்.

பின்பு சினிமாவுலகில் தனக்குத் தெரிந்த தன்னுடன் நடித்த நடிகர்கள், இசையமைப்பாளர்கள் போன்ற பலருடன் பிரிஜட் தொடர்புவைத்துக்கொண்டார். அதற்கிடையில் ஜேர்மனியரான கெஸ்டர் பஜாஸ் மற்றும் பேர்னாட் டீ ஓர்மெல் ஆகியோரையும் மணந்தார்.

40 வயதானபோது பிரிஜட் சினிமா உலகைவிட்டு விலகுவதாக அறிவித்தார். அதுவரை அவர் 40 படங்களில் நடித்திருந்ததோடு ஏராளமான இசை அல்பங்களையும் வெளியிட்டிருந்தார்.

சினிமாவுலகை விட்டு விலகியது முதல் பிரிஜட் விலங்குகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பில் அக்கறை செலுத்தத் தொடங்கினார். அதற்கமைய 1986இல் பிரிஜட் பாடோ மன்றத்தைத் தொடங்கினார். அதற்கு முதலீடாக 3 மில்லியன் பிரான்ஸ் பிராங் பணத்தைச் செலுத்தினார். தனது விலைமதிப்பான நகைகள் மற்றும் உடைமைகளை விற்றே அவர் இப்பணத்தைத் திரட்டினார்.

1960ஆம் ஆண்டிலிருந்தே பிரிஜட் அரசியலில் நாட்டம் கொள்ளத் தொடங்கினார்.


1960, 1970ஆம் ஆண்டுகளில் ஐரோப்பிய திரையுலகைக் கலக்கிவந்த பிரிஜட் பாடோ சினிமா உலகைப் போலவே ஆடை வடிவமைப்புத் துறையிலும் கொடிகட்டிப் பறந்தார். கழுத்துப் பகுதியையும் புயங்களையும் பளிச்செனக் காட்டும் கவர்ச்சிகரமான உடைகளுக்கு இவரது பெயர் மிகப் பிரசித்தம். அவ்வாறு வடிவமைக்கப்பட்ட கவர்ச்சிகரமான கவுன் ஒன்று அவரின் பெயரிலேயே பிரசித்தமானது. அவரின் கவர்ச்சி மிக்க ஆடைகளுக்கு ஏராளமான பெண்கள் அடிமைகளாகவே இருந்தனர். அவ்வாறே அவரது தலைமையில் வடிவமைப்புகளும் பிரசித்தி பெற்றன. அத்துடன் இசையுலகின் ஜாம்பவான்களாக விளங்கிய ஜோன் லெனன், பொபி டிலன் ஆகியோரின் நன்மதிப்பையும் பிரிஜட் பாடோ சம்பாதித்திருந்தார்.

எவ்வாறாயினும், பெரிய நாடான பிரான்ஸின் ஜனாதிபதி பதவியென்பது பிரிஜட்டும் அவரது கட்சியினரும் நினைப்பதுபோல அத்தனை இலகுவானதல்ல. அரசியல் செல்வாக்கு, இராஜதந்திரம், உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகள் ஆகியவற்றில் நன்கு ஊறிய ஒருவருக்கே ஜனாதிபதிப் பதவி பொருத்தமாகும். சினிமா உலகிலும், இசை, நாட்டிய, ஆடை வடிவமைப்பு, மாடலிங் துறையில் பிரிஜட் தேர்ச்சி பெற்றிருந்தபோதிலும் அந்தத் தேர்ச்சி பிரமாண்டமான



நாடொன்றின் தலைமைப் பதவியை ஏற்கப்போதுமானதா என்பது கேள்விக்குறி. மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்பதற்கு இணங்க 2012ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் மக்கள் அவரை எவ்வளவு தூரம் ஆதரிக்கிறார்கள் அல்லது ஓரம் கட்டுகிறார்கள் என்பதைப் பொறுத்தே பிரிஜட்டின் அரசியல் பிரவேசம் பற்றி ஆரூடம் கூறமுடியும். ★

# ஒபாமா



We Can' என்ற ஒற்றை கோஷம் மூலம் அமெரிக்க ஜனாதிபதி பதவியை எட்டிப் பிடித்தவர் பராக் ஹுஸைன் ஒபாமா! மிகப் பெரிய பொருளாதாரப் பின்னடைவில் அமெரிக்கா சிக்கித் தவித்த வேளையில் பொறுப்பேற்றுக் கொண்ட முதல் கறுப்பின அதிபர். பூ மழை தூவி வசந்தங்கள் வாழ்த்த பதவிக்கு வந்தவர், அதன் பிறகு எதிர்கொண்டது அனைத்தும் கண்டனங்களும் ஆவேசக் கோபதாபங்களும்தான்!

✱ அமெரிக்காவின் ஹவாய் மாகாணத் தின் ஹோனோலுலுவில் 1961ஆம் ஆண்டு ஆகஸ்ட் 4ஆம் திகதி பிறந்தார். கென்யாவின் ஸ்வாஹிலி மொழியில் 'பராக்' என்றால் ஆசீர்வதிக்கப் பட்டவன் என்று பொருள்!

✱ ஒபாமாவின் அப்பா ஒபாமா சீனியர் ஆன் டன்ஹாமை இரண்டாவதாகத் திருமணம் செய்துகொண்டார். திருமணத்தின்போதே ஒபாமா மூன்று மாதக் குழந்தையாக ஆன் வயிற்றில் இருந்தார்!

✱ ஒபாமா, அவரது பெற்றோருக்கு ஒரே மகன்தான். ஆனால், தந்தை மற்றும் தாயின் மறுமணங்களால் இவருக்கு எட்டு சகோதர, சகோதரிகள் உண்டு!

✱ கூடைப் பந்தாட்டம் என்றால் உயிர். ஆறு அடிக்கு மேல் உயரம் கொண்டவர் என்பதால், மிக எளிதாக பந்தைப் பாக்கெட் செய்வார்!



✱ பிளாக் பொரஸ்ட் பெர்ரி ஐஸ் டீ ஒபாமாவின் பேவரைட். காபிக்கு தடா. இந்திய உணவுகள், குறிப்பாக காரமான உணவுகளை விரும்பி உண்பார்!

✱ இடது கைப் பழக்கம்கொண்ட ஒபாமா, தினமும் உடற்பயிற்சி செய்வார். கிறிஸ்மஸ் தினத்தன்று மட்டும்தான் உடற்பயிற்சிக்கு ஓய்வு!

✱ சிகாகோ சட்டப் பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து 12 ஆண்டுகள் 'சிறந்த பேராசிரியர்' ஆகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெருமைக்கு உரியவர்!

✱ இந்தோனேஷியாவில் இருக்கும்போது, இரண்டு முதலைகள், ஏகப்பட்ட கோழிகள், வாத்துகளை வளர்த்து வந்தார். இவர் வளர்த்த குரங்கின் பெயர் டாடா!

✱ சிகாகோ சட்டப் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றபோது அறிமுகமான மிஷேலைக் காதலித்துத் திருமணம் செய்துகொண்டார். மலியா, சஷா என்று இரண்டு குழந்தைகள்!

✱ நீண்ட நேர உரைகள் நிகழ்த்துவதில் வல்லவர். இவர் எழுதிய Dreams from My Father, மற்றும் The Audacity of Hope ஆகிய புத்தகங்களின் ஒடியோ பதிப்பு கிராமி விருது வென்றன!

✱ மகாத்மா காந்தி, மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர், சீசர் சாவேஸ் (விவசாயிகளின் நலனுக்காகப் போராடிய மெக்சிகோ அமெரிக்கன்) ஆகிய மூவரும் தான் தன் ரோல்மொடல் ஹீரோக்கள் என்று குறிப்பிடுவார்!

✱ ஆரம்பத்தில் ஜனநாயகக் கட்சியில் கிளிண்டனுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்தார். பின்னர், தன்னை படிப்படியாகக் கட்சியில் வளர்த்துக்கொண்டு கிளிண்டனின் மனைவி ஹிலாரியையே அதிபர் பதவிக்கான போட்டியில் பின்னுக்குத் தள்ளினார்!

✱ அதிபரின் வெள்ளை மாளிகை 'நோ ஸ்மோக்கிங் ஸோன்' என்பதால், அவ்வப்போது நிகோடின் கலந்த சூயிங்கம்களை மட்டுமே அசை போடுவார்!

✱ 'சிகாகோ என்னும் மாகாணத்தில் இருந்து வந்து இருக்கும், மிகவும் ஒல்லியான தேகம்கொண்ட, பேரைச் சொல்லும்போதே சிரிப்பை வரவழைக்கும் மனிதர்' - ஒபாமாவை இப்படிக் கிண்டல் அடித்தவர், கலிபோர்னியா மாகாண கவர்னர் அர்னோல்ட் ஷ்வாஸ்னெகர்!

✱ ''இங்கே கறுப்பு அமெரிக்கா, வெள்ளை அமெரிக்கா, ஆசிய அமெரிக்கா, கிறிஸ்தவ அமெரிக்கா என்றெல்லாம் எதுவும் இல்லை. இங்கே இருப்பது எல்லாம் யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆப் அமெரிக்கா தான்!'' என்று தாய்நாட்டை உயர்த்திப் பிடிக்கும் பேச்சுக்களால் கைதட்டல்களை அள்ளி வாக்குகளைக் கவர்ந்தார் ஒபாமா!

✱ 'அதிபர் தேர்தலில் ஒபாமா வெற்றி' என்று செய்தி வெளியானவுடன், இன்ப அதிர்ச்சி தாங்க முடியாத லட்சக்கணக்கான ஆபிரிக்க-அமெரிக்கர்கள் வீதிகளில் வாய்விட்டு அழுத காட்சிகள் அப்போது டி.ஆர்.பி ஹிட் சென்சேஷன்!

✱ ஒபாமா அதிபராகப் பதவியேற்ற போது, வாஷிங்டனின் 2.4 டிகிரி செல்சியஸ் குளிரையும் மீறி, 20 லட்சம் பேர் திரண்டார்கள். கிளிண்டன் இரண்டாவது முறை பதவியேற்றபோது, 50 ஆயிரம் பேர் நேரில் கூடியதே அதுவரையிலான சாதனை!

✱ ஆபிரகாம் லிங்கனுக்கு அடுத்து, அதிக உயரமான அமெரிக்க அதிபர். லிங்கன் 6 அடி 4 அங்குலம். ஒபாமா 6 அடி 2 அங்குலம்!

✱ ஒபாமா, கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவர். ஆனால், நியூஸ் வீக் பத்திரிகை நடத்திய கருத்துக்கணிப்பில் இவர் முஸ்லிம் மதத்தைச் சேர்ந்தவர் என 12 சதவிகித அமெரிக்கர்கள் கருத்துத் தெரிவித்து இருந்தனர்!

✱ இவரது கைக்கடிகாரம் மூலம், அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ. அவருக்கு ரகசியத் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளும் என்று ஒரு தகவல் உண்டு!

✱ 'ஒபாமாவுக்கு தீவிரவாதிகளுடன் தொடர்பு இருக்கிறது' என்று குற்றச் சாட்டுகள் எழுந்தபோது, 'உண்மையான அன்புக்காக சிறு வயதில் ஏங்கியவன் நான். போதைப் பொருள் பழக்கத்தில் இருந்து மீண்டவன்!' என்று இவர் தனது சிறு வயது நினைவுகளை மனம் திறந்து பகிர்ந்துகொண்டது அமெரிக்க இளைஞர்கள் மத்தியில் ஆதரவைத் திரட்டியது!

✱ 'நான் போரை எதிர்ப்பவன் அல்ல; ஆனால், ஊமையான, மடத்தனமான போர்களை எதிர்க்கிறேன்!' என ஈராக் போர் குறித்து கடுமையாக விமர்சித்தார். தேர்தல் சமய வாக்குறுதியின்படி, ஈராக்கில் இருந்து படிப்படியாக அமெரிக்கப் படைகளைத்திருப்பி அழைத்துக்கொண்டார்!

✱ 2009ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு ஒபாமாவுக்கு வழங்கப்பட்டது. ''அந்தப் பரிசுக்கு ஒபாமா தகுதியானவரா என்பது ஒருபுறம் இருக்கட்டும்... இந்தப் பரிசை அளித்ததன் மூலம் அமெரிக்கர்களைத் தர்மசங்கடத்தில் ஆழ்த்திவிட்டது நோபல் கமிட்டி. பதவி ஏற்ற ஒன்பதே மாதங்களில் அவருக்கு அளிக்கப்பட்ட இந்த அங்கீகாரம் மிகவும் பிரமாண்டமானது!'' என தலையங்கம் எழுதியது அமெரிக்காவின் மனசாட்சியான 'தி லொஸ் ஏஞ்சல்ஸ் டைம்ஸ்' பத்திரிகை!

✱ 'உலகப் பொருளாதார மந்த நிலையைப் போக்க நான் எடுக்கும் நடவடிக்கைகள் அனைத்தும் 100 சதவிகிதம் சரியானவையாக இருக்கும் என்று சொல்ல முடியாது. நாம் செய்வது சரியா, தவறா என்பதைக் காலம்தான் தீர்மானிக்கும்!' -எதிர்க்கட்சிகளின் குற்றச் சாட்டுகளுக்கு ஒபாமாவின் அடக்கமான பதில் இது!

✱ உலகமே எதிர்பார்த்தபடி அதிபராகப் பதவியேற்றவுடன் ஒபாமாவால் அற்புதங்களை நிகழ்த்த முடியவில்லை. அமெரிக்காவின் இன்றைய அரசியல் நிலையும், யதார்த்த சூழ்நிலையும் ஒபாமாவின் கனவுகளை இப்போதைக்குச் சாத்தியப்படுத்தாது! என்கிறார்கள் அமெரிக்க அரசியல் விமர்சகர்கள்!

## மாதிரிக் கவிதைகள்

விலைவாசி
பத்தினி
எப்போது
கற்பழிக்கப்பட்டாளோ...
வறுமைக் குழந்தைகளுக்கு
தந்தை யாரென்றே
தெரியவில்லை!

* * *

புரிந்துணர்வுச் சகோதரிக்கு
கொடுமையை
சம்பந்தம் பேசி
மனிதாபிமானம்
மாமா வேலை செய்கிறது.

* * *

அநியாயம்
இரண்டாம் தாரமாய்
சமத்துவத்திற்கும்
தாலி கட்டி
தம்பதியாகியது!

* * *

ஜனநாயக மாப்பிள்ளை
சமுதாய மனைவிக்கு
விவாகரத்து கொடுத்துவிட்டு
அதிகார மைந்தர்களின்
ஆணவப் புதல்விகளோடு
மட்டும்
கள்ளத்தொடர்பு
வைத்துக் கொள்கிறார்!

* * *

அகதி யுவதிகளுக்கு
சீதனம்
சித்திரவதையாகின்றது.

* * *

அநாதைத் தாய்மார்களிடம்
வேதனை
களவில் பால்குடிக்கிறது

* * *

இனவாதப் பெண்
சிறுபான்மை
இளைஞர்களோடும்
உடல் உறவு
வைத்துக் கொள்கிறாள்!

* * *

சட்ட மங்கை
மலடாகவே
இருந்து கொண்டு
சமரச ஆண்மகனை
குறை சொல்கிறாள்!

* * *

மின்சாரம் இல்லாது
போகின்ற இரவுகளில்
மின்மினிப் பூச்சிகளுக்கும்
சேர்த்து - விட்டில்
உணவு சமைக்கிறேன்!

* * *

சேற்றின் நாற்றத்துக்கு
மூக்கைப் பொத்திக் கொண்டே
இரசிக்க வேண்டியிருக்கிறது
அழகிய தாமரைகளை!

* * *

பூக்கடைக் காரியை
திட்ட வேண்டும் போல
இருக்கிறது
ஏமாற்றி
பூவிடமே பூவை
விற்றிருக்கிறாளே!

* * *

(மாதிரிகள் தொடரும்)

நெடுந்தீவு முகிலன்

# குண்டுத் தாக்குதல்களில் அல் - குவைதா கையாளும் தந்திரங்கள்



விமானங்கள் மூலம் அமெரிக்காவின் முக்கிய நகரங்களைத் தகர்க்க திட்டமிடப்பட்ட பயங்கரச் சதி, ஆரம்ப கட்டத்திலேயே முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

சமீபத்தில், ஏமனிலிருந்து அமெரிக்காவுக்கு விமானத்தில் சக்திவாய்ந்த வெடிபொருள் பொதி அனுப்பி வைக்கப்பட்ட சம்பவத்தின் பின்னணி குறித்தும், அந்த வெடிபொருட்களைக் கண்டுபிடிப்பதற்காக பாதுகாப்பு அதிகாரிகள் நடத்திய மூன்று நாள் தேடுதல் வேட்டை குறித்தும் பரபரப்பான புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த மாத இறுதியில், ஏமனின் சானா நகரிலுள்ள, 'யுனைடெட் பார்சல் சர்வீஸ்', 'பெட்எக்ஸ் பார்சல் சர்வீஸ்' ஆகிய அலுவலகங்களுக்கு ஓர் இளம் பெண் வந்தார். தான் கையோடு கொண்டு வந்த பொதிகளை அங்கு ஒப்படைத்த அந்தப் பெண், அவற்றை அமெரிக்காவின் சிக்காகோ நகருக்கு அனுப்பி வைக்கும்படி கூறினார். தனது பெயர், கையடக்கத் தொலைபேசி எண், முகவரி ஆகியவற்றை அவர்களிடம் கொடுத்தார். (இவை எல்லாம் போலியானவை)

அந்தப் பொதிகளை அனுப்பி வைப்பதற்கான கட்டணங்களையும் கொடுத்துவிட்டு, சில நிமிடங்களில் அங்கிருந்து கிளம்பிச் சென்றுவிட்டார். அந்தப் பெண் கொடுத்த பொதிகளில் தான், சக்திவாய்ந்த வெடிபொருட்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. கணினி பிரின்டர் கருவிக்குப் பயன்படுத்தப்படும், 'ரோனர் கேட்ரிட்ஜ்'க்குள், பவுடர் வடிவிலான சக்தி வாய்ந்த வெடிபொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அதில் கையடக்கத் தொலைபேசி 'சிப்' வைக்கப்பட்டு, அதனுடன், 'வயர்' ஒன்றும் இணைக்கப்பட்டிருந்தது.

கையடக்கத் தொலைபேசியை இயக்கினால், அந்தப் பொதிக்குள் இருக்கும் வெடிபொருட்கள் வெடித்து, பயங்கர விளைவுகளை உண்டாக்கும். தொழிற்சாலையிலும், இராணுவ வட்டாரங்களிலும் மட்டுமே அந்த வெடிபொருள் பயன்படுத்தப்படும்.

இதற்கு, 'பென்டா எரித்ரிட்டால் டிரைநைட்ரேட்' (பி.இ.டி.என்.) என்று பெயர். அத்தனை எளிதில் இதைக் கண்டுபிடித்து விட முடியாது.

'பெட் எக்ஸ் பார்சல் சர்வீஸ்' மூலம் அனுப்பி வைக்கப்பட்ட வெடிபொருள் பொதி, ஏமனில் நிறுத்தப்பட்டிருந்த கட்டார் ஏர்வேஸுக்குச் சொந்தமான பயணிகள் விமானத்தில் ஏற்றப்பட்டது.

அடுத்த நாள், அந்த விமானம் ஏமனிலிருந்து கட்டாருக்குப் புறப்பட்டு அமெரிக்கா செல்ல இருந்தது. இதற்கு சற்று முன்னரே 'யுனைடெட் பார்சல் சர்வீஸு'க்குச் சொந்தமான சரக்கு விமானத்தில், மற்றொரு வெடிபொருள் பொதி ஏற்றப்பட்டது. இந்த சரக்கு விமானம், ஏமனிலிருந்து ஜெர்மனி, பிரிட்டன் வழியாக அமெரிக்காவுக்குச் செல்லும். இந்த இரண்டு விமானங்களிலும் வெடிபொருள் பொதி ஏற்றப்பட்டிருந்ததை ஏமன் அதிகாரிகளால் கண்டுபிடிக்க முடியவில்லை. வெடிபொருள் அடங்கிய பொதிகளுடன் கட்டார் ஏர்வேஸ் பயணிகள் விமானம் கட்டாரில் தரை இறங்கியது. யுனைடெட் சரக்கு விமானம், ஜேர்மனியின் கூலின்ச் நகரில் தரை இறங்கியது.

இந்த நேரத்தில் தான், சவூதி அரேபியாவின் உளவுத்துறை அதிகாரிகளுக்கு, ஏமனிலிருந்து அமெரிக்காவுக்குச் செல்லும் விமானங்களில் வெடிபொருள்கள் அனுப்பி வைக்கப்பட்ட குறித்த இரகசிய தகவல்கள் தெரியவந்தன. சிக்காகோவிலுள்ள யூத வழிபாட்டு மையங்களைத் தகர்க்கும் நோக்கத்துடன் இந்த வெடிபொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ள தகவலும் அவர்களுக்கு தெரிந்தது.

உடனடியாக இதை அமெரிக்காவின் வெள்ளை மாளிகை அதிகாரிகளுக்கு அவர்கள் தெரிவித்தனர். அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்பு ஆலோசகர் ஜோன் பிரன்னன், இந்தத் தகவலை ஜனாதிபதி ஒபாமாவுக்குத் தெரிவித்தார். ஒபாமாவுக்குப் பதற்றம் தொற்றிக் கொண்டது.

அமெரிக்க அதிகாரிகள் முழு வீச்சில் களத்தில் இறங்கினர். எப்படியாவது அசம்பாவிதம் நடக்காமல் தவிர்க்க வேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக இருந்தனர். அமெரிக்காவின் அனைத்து விமான நிலையங்களும் உஷார் படுத்தப்பட்டன. யூத வழிபாட்டு மையங்களும், யூத தலைவர்களுக்கான பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டன. பிரிட்டன், ஜேர்மன் பாதுகாப்பு அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

ஜேர்மனின் கூலின்ச் நகரிலிருந்து பிரிட்டனுக்குப் புறப்பட, 'யுனைடெட் பார்சல் சர்வீஸுக்குச் சொந்தமான சரக்கு விமானம் தயாராக இருந்தது. அந்த விமானத்தை நிறுத்துவதற்கான முயற்சியில் ஜேர்மன் அதிகாரிகள் களம் இறங்கினர். அதற்குள் அந்த விமானம் பிரிட்டனுக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டது. அடுத்த 30 நிமிடங்களில் அந்த விமானம், பிரிட்டனின் கிழக்கு மிட்லண்டில் தரை இறங்கியது. அங்கிருந்து அமெரிக்கா புறப்படும்.

வெடிபொருள் பொதி இருப்பது தெரியாமலேயே அந்த விமானம், அதற்குள் 24 மணி நேரம் பயணித்துவிட்டது. அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்த தகவல்படி, பிரிட்டிஷ் பாதுகாப்பு அதிகாரிகள், மிட்லண்ட் விமான நிலையத்தில் தயார் நிலையில் இருந்தனர்.

விமானத்திலிருந்த ஒவ்வொரு பொருளையும் தீவிரமாகச் சோதனையிட்டனர். அதே நேரத்தில், கட்டாரிலிருந்து மற்றொரு வெடிபொருள் பொதியுடன் வந்த பயணிகள் விமானம், துபாயில் தரை இறங்கியது. தயாராக இருந்த அதிகாரிகள், விமானத்தைச் சோதனையிட்டனர். வெடிபொருள் பொதி வெற்றிகரமாகக் கண்டுபிடிக்கப்பட்டு, பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது.

ஆனால், மிட்லண்ட் நகருக்கு வந்த யுனைடெட் சரக்கு விமானத்தில், அதிகாரிகள் தொடர்ந்து சோதனையிட்டும் வெடிபொருள் பொதிகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் ஜோன் பிரென்னன் மறுபடியும் பிரிட்டிஷ் அதிகாரிகளை தொடர்புகொண்டு, விமானத்தை சோதனையிடும்படி கூறினார்.

இதையடுத்து, இரண்டாவது முறையாக விமானம் அங்குலம், அங்குலமாக சோதனையிடப்பட்டது. விமானம் பிரிட்டனில் தரை இறங்கி 12 மணி நேரமாகிவிட்டது.

இருந்தபோதும், வெடிபொருள் பொதியைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இறுதியாக, ஏமனிலிருந்து அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அனைத்துப் பொதிகளும் கீழே இறக்கப்பட்டு, அவை அனைத்தும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

பல மணி நேர தேடுதல் வேட்டை, நீண்ட இடைவெளிக்குப் பின்னர் முடிவுக்கு வந்தது. ஒரு வழியாக வெடிபொருள் பொதியை அதிகாரிகள் கண்டுபிடித்தனர். இதுகுறித்த தகவல் அமெரிக்காவுக்கு தெரிவிக்கப்பட்டது.

இதன்பின் தான், அமெரிக்க உளவுப் பிரிவு மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு மூச்சே வந்தது. ஒக்டோபர் 27ஆம் திகதி ஆரம்பித்த இந்த துரத்தல் வேட்டை, 29ஆம் திகதி தான் முடிவுக்கு வந்தது.

இந்த மூன்று நாட்களும் அமெரிக்கா, ஜெர்மனி, பிரிட்டன், ஏமன், ஐக்கிய அரபு எமிரேட் ஆகிய ஐந்து நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும், ஒவ்வொரு நொடியும் ஒரு யுகமாக கடந்தது. இந்த மூன்று நாட்களும் அவர்களின் தூக்கமும் தொலைந்து போனது.

வளைகுடாவிலுள்ள ஏமன், அல்-குவைதா ஆகியவை தீவிரவாதிகளின் கூடாரமாக மாறியுள்ளன. வெடிபொருள் பொதிகள் ஏமனிலிருந்து அனுப்பப்பட்டதும், அமெரிக்காவில் பிறந்த அன்வர் அல் அவ்லாகி என்பவர் இதில் ஈடுபட்டுள்ளதும் தெரிந்தது. ஏற்கனவே, விமானத்தில் வெடிபொருள் வைத்த நைஜீரிய இளைஞரை அமெரிக்க பொலிஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர். இந்தச் செயலுக்கு, ஏமனிலுள்ள அல்-குவைதா இயக்கம் பொறுப்பேற்றது.

அதுபோல், துபாய் விமான வெடிபொருள் சம்பவத்தில் அல்-குவைதாவின் ஏமன் பிரிவுக்கு தொடர்பிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. இதனால், ஏமனின் செயல்பாடுகளை அமெரிக்க உளவுத்துறை தீவிரமாகக் கண்காணித்து வருகிறது.

இது தொடர்பாக, அந்நாட்டு அதிகாரிகளின் முறையான ஒத்துழைப்பு பெறப்பட்டுள்ளது. ஏமன் அல்-குவைதா பிரிவினர், தனி, 'ஆன்-லைன்' ஆரம்பித்து அதன்மூலம் புதிய ஆட்களை தெரிவு செய்தும் வருகின்றனர்.

ஏமனில் பயிற்சி பெற்று, அமெரிக்கா சென்று நாசவேலைகளில் ஈடுபடுபவர்களின் பேட்டிகளும் வெளியிடப்படுகின்றன. துபாய் விமான நிலைய பொதி வெடிபொருட்களைக் கண்டுபிடித்த சவூதி உளவுத்துறை, இதில் ஏமன் அல்-குவைதாவின் பங்களிப்புள்ளது என அமெரிக்காவுக்குத் தகவல் தெரிவித்தது.

ஏற்கனவே சவூதியின் பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட பொதி வெடிபொருட்களில் கையாளப்பட்ட தொழில்நுட்பம்தான் இதிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. கைதேர்ந்த தொழில்நுட்பத்தில், வெள்ளைநிறப் பவுடரில் மின் வயர்களைக் கொண்டு, கையடக்கத் தொலைபேசி சிம் கார்டுக்கு இணைப்பு கொடுக்கப்பட்டதும் சோதனையில் தெரியவந்துள்ளது.

சவூதி மன்னராட்சியை எதிர்த்து, இதுபோன்ற நடவடிக்கைகளில் ஏமன் அல்-குவைதா இயக்கத்தினர் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## உலகிலேயே மிக உயர்ந்த இயேசுநாதர் சிலை







போலந்து நாட்டில் இயேசு நாதருக்கு 167 அடி உயரமான சிலை எழுப்பப்பட்டிருக்கிறது. தற்போது பிரேசில் நாட்டில்தான் யேசு நாதருக்கு 225 அடி உயரத்தில் சிலை கட்டப்பட்டுள்ளது. பிரேசிலில் நிறுவப்பட்டிருக்கும் சிலையைப் போலவே இச்சிலையிலும் இயேசு நாதர் இரண்டு கைகளையும் அகல விரித்து காணப்படுகிறார்.

போலந்தில் கட்டப்பட்டுள்ள இச் சிலை ஒரு மேட்டுப் பகுதியில் அமைந்து இருக்கிறது. கடும் காற்று காரணமாக தடைப்பட்டிருந்த இறுதி வேலைகள் ஒரு பாரம் தூக்கி மூலம் விரைவாக நடந்தேறின. 30 தொன் எடையுள்ள தலை, கைகள், தோள்கள் ஆகிய மூன்று பகுதிகளும் பாரம் தூக்கி மூலம் உயர்த்தப்பட்டு சிலையில் பொருத்தப்பட்டன.

போலந்து நாட்டில் ஒரு கிராமத்திலுள்ள 22,000 மக்களினால் பாதிரியார் சில்வெஸ்டர் தலைமையில் இம் முயற்சி வெற்றியுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. சுவிபொட்சின் என்ற கிராம மக்கள் இப் புதிய இயேசுவின் சிலை மூலம் தமது கிராமத்துக்கும், போலந்து நாட்டுக்கும் உலகில் நல்ல மதிப்பு கிடைக்குமென்று நம்புகிறார்கள்.

தொகுப்பு: பாலா

# எதிரியை மரியாதையுடனும் திறந்தமனதுடனும் அன்புடனும் அணுக வேண்டும்

- ஏ.எச்.ஏ.ஹுஸைன் -

மனிதப் பண்புகளையும் வாழ்வின் பெறுமதியையும் மதிப்புக் கொள்ளச் செய்வது சாத்வீகத்தின் நோக்கமாகும். சாத்வீகமான முறையில் மாற்றத்தை விரும்பும் பொழுது நாம் நமது எதிரியை மரியாதையுடனும் திறந்தமனத்துடனும் அன்புடனும் அணுகுகின்றோம்.

நாம் ஒவ்வொருவரும் உண்மையை உடையவர்கள் என்பதையும் எமது ஊக்கத்தைப் பகிர்ந்து கொள்வதன் மூலமும் நமது எதிரியையும் சாத்வீக நடவடிக்கையாளரையும் ஒரே கண்ணோட்டத்தில் நடத்துவதன் மூலமும் பிறருக்கும் நன்மை கிடைக்கச் செய்யலாம் என்பதையும் அறிவோம்.

இந்த உலகம் நமக்காகச் செயற்பட வேண்டுமானால் நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்த உலகத்திற்காகச் செயற்படக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும். நாம் ஒவ்வொருவரும் சற்றுத் தடுமாற்றம் உடையவர்களாவோம். எனினும் சாத்வீகத்தின் ஊடாக நாம் உலக ஒருமைப்பாட்டை அடையலாம்.

சாத்வீகம், முடிவாக எமது எதிரிகளின் மாற்றத்தையும் நாம் நன்மையாகவே மாற்றிக்கொள்வதையும் எதிர்பார்க்கிறது.

ஒரு சாத்வீகப் புரட்சி என்பது அதிகாரத்தைக் கைப்பற்றும் ஒரு செயல் திட்டமாகாது , அது ஒரு முறைமைகளை மாற்றும் செயல் திட்டமாகும். அதன் நிறைவு சமாதானம் நிறைந்த அதிகார மாற்றமாகும் என்கிறார் எம். கே. காந்தி.

ஒரு குறிப்பட்ட செயலை வெற்றிகரமாக நிறைவேற்றும் தந்திரோபாயமாகச் சாத்வீகம் பயன்படுத்தப்படலாம். சாத்வீகத்தை ஒன்றிணைந்த வாழ்க்கை முறை என்றும் கொள்ளலாம். சாத்வீகம் இரண்டு நிகழ்வுகளிலும் நற்பயனை விளைவிக்கத்தக்கது.

ஆகவே, எந்தவொரு விடயத்திற்கும் சாத்வீக முறைமைகளைப் பயன்படுத்துவது இன்றியமையாததாகும். ஏனெனில், பாரம்பரியமற்ற முறைகளில் நம்பிக்கை கொள்ளவும் அவற்றைக் கடைப்பிடிக்கவும் நம்மைத் தூண்டுவதால் சாத்வீகத்தைப் பயன்படுத்துவது தவிர்க்க முடியாததாகிறது.

**சாத்வீகத்தின் சில கொள்கைகள்:**

★ துணிவுள்ள மக்களுக்கு சாத்வீகம்; என்பது ஒரு வாழ்க்கை முறை.

தீமைகளை எதிர்க்கும் சக்தி உயிரோட்டமான சாத்வீகத்துக்கு உண்டு. மனோரீதியாக , உளரீதியாக , ஆன்மீக ரீதியாக அது மனிதனை ஆக்கிரமிக்கிறது. உங்கள் பக்கத்திலுள்ள நியாயத்தை அறிந்து கொள்ள எதிரியைத் தூண்டுகிறது.

★ சாத்வீகம் சினேகத்தையும் புரிந்துணர்வையும் தேடித்தருகிறது. சாத்வீகத்தின் முடிவுதொல்லைகளில் இருந்து பெறும் விடுதலையும் சமாதானமும் ஆகும். சாத்வீகத்தின் நோக்கம் இரக்கமுள்ள , அன்பான மக்கள் வாழும் சமுதாயமாகும்.

★ சாத்வீகம் மக்களையன்றி அநீதியையே வெற்றி கொள்கிறது.

சாத்வீகம் தீங்கு செய்வோரையும் பாதிக்கப்பட்டவர்களாகக் கருதுமேயொழிய தீயவர்களாகக் கருதாது.




சாத்வீகத்தைக் கடைப்பிடிப்பவர் மக்களை அல்ல தீயதையே வெற்றி கொள்வார்.

★ வேதனைகள் நமக்கு கல்வியைப் புகட்டி மாற்றத்தை உண்டாக்குகின்றன என்று சாத்வீகம் நம்புகிறது. சாத்வீகம் எதிர்ப்புக் காட்டாமல் வேதனைகளைத் தாங்கிக் கொள்கிறது. சாத்வீகம் தேவையானால் மாத்திரம் வன்முறையை அடுத்தவருக்கு உண்டு பண்ணாமல் தனக்கு மாத்திரம் ஏற்றுக்கொள்ளும். சாத்வீகம் தனது செயல்களால் ஏற்படும் விளைவுகளை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறது. வருத்தி ஏற்றுக்கொண்ட வேதனைகள் மீட்சி அளிக்கக் கூடியது, போதனைகளையும் மாற்றங்களையும் தரவல்லது. நியாயங்கள் உயிர் பிழைக்கும் சமயத்தில் வேதனைகள் எதிரியையும் மாற்ற வல்லவை.

★ சாத்வீகம் வெறுப்புக்குப் பதில் அன்பையே தெரிவு செய்கிறது. உடல் மற்றும் உள்ளத்து வன்முறைகளையும் சாத்வீகம் எதிர்க்கிறது. சாத்வீக அன்பானது தன்னலத்தாலோ பணபலத்தாலோ உண்டாவதல்ல. திரும்பி வரப்போவது பகைமை என்று அறிந்த போதிலும் சாத்வீகம்; அன்பையே தாராளமாகவும் மனப்பூர்வமாகவும் அள்ளி வழங்கும். சாத்வீக அன்பு துடிப்பானது. அது சோம்பிக்கிடப்பதில்லை. சமூகத்தை வாழவைப்பதற்காக மன்னிப்பு வழங்குவதில் சாத்வீக அன்பு என்றும் முடிவடைவதில்லை. அது என்றும் தொடர்ந்து கொண்டே இருக்கும். சாத்வீகமான அன்பு வெறுப்பின் அளவுக்குக் கீழிறங்குவதில்லை. எதிரிக்குக் காட்டும் அன்பானது , நாம் நமக்குக் காட்டும் அன்பு போன்றது. அன்பு சமூகத்தைப் பாதுகாத்து, மீளச்சமைத்து அநீதியை எதிர்க்கிறது. எல்லா உயிர்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டது என்று சாத்வீகம் மதிக்கிறது.

★ உலகம் நீதியின் பக்கம் சாய்ந்திருக்கிறது என்று சாத்வீகம் நம்புகிறது. சாத்வீகத்தை ஆராதிப்பவர், முடிவில் தர்மமே வெல்லும் என்பதில் அசையாத நம்பிக்கை உள்ளவர். இறைவன் நீதியில் உயர்ந்தவன் என்று சாத்வீகம் நம்புகிறது.

**சாத்வீக செயற்பாடுகள்:**

சாத்வீகத்தை அடைவதற்கான தனிமத கடப்பாடுகள் - சாத்வீக முறைகளிலும் தத்துவத்திலும் நமக்குள்ள விசுவாசத்தை நாம் ஒவ்வொரு நாளும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். நமது மனதில் மறைந்திருக்கும் தீய எண்ணங்களை நீக்கி விட வேண்டும். நீதிக்கான எமது வேலைகளில் வேதனைகளைத் தாங்கிக் கொள்ள அல்லது ஏற்றுக் கொள்ள தயாராய் இருத்தல் வேண்டும்.

**சாத்வீகத்தின் ஊடான சமரசங்கள்:**

எதிராளியின் அநீதிகளை வரிசைப் படுத்திக்கொண்டு அவ் அநீதிகளை எடுத்துக் கூற உங்களுக்கு உரித்தான கருணை புத்தி சாலித்தனம்; நகைச்சுவை மற்றும் ஆக்கபூர்வமான யுக்தி என்பனவற்றுடன் எதிர்கொள்ளுங்கள். எதிரியின் ஒவ்வொரு அசைவுக்கும் ஆக்கபூர்வமாகப் பதிலளிக்கக் கூடியதாக உங்கள் நிலையை ஆக்கிக் கொள்ளுங்கள். எதிரியை எச்சந்தர்ப்பத்திலும் அவமானப்படுத்தாதீர்கள், அதற்குப் பதிலாக அவரில் காணும் நல்ல நடத்தைகளை எடுத்துப்பேசுங்கள். எதிரியும் சமமாக வெல்லக்கூடிய மாதிரியான சந்தர்ப்பங்களைத் தேர்ந்தெடுங்கள். அநீதிகளைக் களைய எதிரி உங்களுடன் சேர்ந்து வேலை செய்யக் கூடியவாறு மறைமுகமாகத் தூண்டும் நடவடிக்கைகளைத் தெரிவு செய்வதே சிறந்தது. எதிரியுடன் புரிந்துணர்வும் சினேகமும் வைக்க விரும்புவதும் தீமைகள், அடக்கு முறைகள், அதிகாரங்கள், அநீதிகள் இவற்றிற்கு எதிரானதுமான நடவடிக்கைதான் சாத்வீகம்.

மனிதத்துவத்திற்கு எதிரான நடவடிக்கை எடுப்பது சாத்வீகச் செயற்பாடு அல்ல , சமரசம் காண்பது என்பது எதிரியையும் நண்பனாக்குவது தான். இரு சாராரும் சேர்ந்து ஒரு திட்ட நடவடிக்கை மூலம் அநீதிக்குத் தீர்வு காண்பது என்பதுதான் சமரசமாகும். சமரசத்திற்கு ஆதரவாக எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் அன்பான சமூகத்தை நோக்கி வைக்கும் படியாகும். தனிமனிதர் மாத்திரமல்ல இந்த விடயத்தில் ஒட்டுமொத்த சமூகமுமே தற்பொறுப்பில் உள்ளதுதான். இதனோடு இணைந்துதான் புது ஆரம்பத்திற்கும் , புத்தாக்கத்திற்கும் , நீதிக்கும் புதுப் புரட்சி ஆரம்பமாகிறது. ★

உங்களது
அந்தரங்க பிரச்சினைகள் மற்றும்
குடும்பப் பிரச்சினைகள்,
சந்தேகங்கள் தொடர்பான
கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார்
உளநல ஆலோசகர்

**ஏ.எச்.ஏ.ஹுஸைன்.**

கேள்விகள் வந்துசேரவேண்டிய முகவரி:

" A.H.A. HUSSEIN
KAYAR ROAD,
ERAVUR .

ஈமெயில்:
abdulhussein525@gmail.com

# உதவி செய்வதால் உயர்ந்தவர்கள் ஆகிறீர்கள்

**கேள்வி:**

நான் ஓர் உதவும் எண்ணம் கொண்ட ஒருத்தர். ஆனால், என் வீட்டில் தொடங்கி சமூகம் வரையில் கூடுதலானோர் என்னை ஏமாற்றியிருக்கின்றார்கள். இதனால் நான் சில வேளைகளில் மனமுடைந்து போகிறேன். மனிதர்களில் ஒரு சிலர் ஏன் இப்படி நடந்து கொள்கிறார்கள் ?

**பதில் :**

மனித மன நிலைகள் பேராசை, பொறாமை, சுயநலம், தியாகம் என்பனவற்றால் ஆளப்படுகின்றன. இதன் வெளிப்பாடாகவே உங்களுக்கு இந்த அனுபவங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

சொந்த பந்தங்கள், நட்புறவுகள் என்பனவற்றைத் தாண்டி இத்தகைய காரணிகள் செல்வாக்குச் செலுத்தி விடுவதால் தியாக உணர்வும், பொது நலமும் அற்றுப் போய் அற்பமான இந்த உலக விவகாரங்களில் மனிதர்களில் ஒரு சாரார் மயங்கி விடுகிறார்கள். தியாகத்தின் மூலம் உள்ளூரக் கிடைக்கும் மன மகிழ்ச்சி, மன நிறைவு, திருப்தி என்பன நிரந்தரமானவை.

அதேவேளை, நயவஞ்சகத் (மோசடி, ஏமாற்று, நம்பிக்கைத் துரோகம்) தினால் கிடைக்கும் திருப்தி தற்காலிகமானதாக இருப்பதோடு அது பின் நாட்களில் தங்களைத் தாங்களே அவஸ்தைப்பட வைத்து வருத்திக் கொள்ளவும் வழி சமைக்கும்.




தியாக உள்ளத்தோடு கண்ணியமாகவும் நேர்மையாகவும் வாழாத நயவஞ்சகர்கள் ஒரு போதும் மனிதர்களாலும் இயற்கையாலும் அகர்சிக்கப் படவும் மாட்டார்கள். எனவே இதன் மறுஅர்த்தமாகத் தெரிவது யாதெனில் உயர்வான பண்புகளோடும் நன்றியுணர்வோடும் வாழ்பவர்கள் எப்போதும் இறையருளையும் இயற்கையின் வாழ்த்துக்களையும் பெற அருகதையுள்ளவர்கள் என்பதே. உண்மையில் ஏமாற்றுபவர்கள், தாங்கள் புத்தி சாதுரியமாக மற்றவர்களை ஏமாற்றி விடுவதாக புளகாங்கிதம் (பரவசம்) அடைந்தாலும் உண்மை அதுவல்ல. யதார்த்தம் யாதெனில் அவர்கள் தங்களைத் தாங்களாகவே ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள், அவர்களுக்கு விமோசனம் இல்லை.

நீங்கள் மனம் சலிக்காமல் உங்கள் உதவும் மனப்பான்மையைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ளுங்கள், பணியைத் தொடருங்கள்.

## கூட்டுக் குயில்

பாட்டெழுத முனைகையிலென்
பாட்டுக்கே பதம்சொல்லும்
கட்டழகுப் பெட்டகந்தான்
கவிஞனிவன் புதுக்கவினில்
சொட்டுகின்ற மதுதன்னை
சுகித்திடுவாள் சுவையென்பாள்!



மெட்டணிந்து கலைக்காவின்
மீதுலவும் தமிழ்நடையைத்
தொட்டெழுதத் தோகையிவள்
துணைவருவாள் தோள்தருவாள்
இட்டமுறச் சந்தங்களின்
இளமையெலாம் விழாவெடுக்கும்!

கன்னத்தில் கைவைத்துக்
கற்பனையை நான்அழைக்க
எண்ணத்தில் என்னவளாய்
எழில்பூத்த கவிதுளிர்க்கும்
பின்னரதை இழைபிரித்துப்
பிரியமொடு காதலிப்பேன்!

கிண்ணத்தில் மதுரசமாய்க்
கிடக்கின்ற தமிழ்க்கவிதா
வண்ணத்தில் பின்னிவரும்
வார்த்தைகள் அத்தனைக்கும்
உண்மையிலென் மனையரசி
ஒயிலொன்றே உரிமைபெறும்!

ஆதிமுதல் அந்தம்வரை
அடுக்குமொழி உயிர்சுமந்து
வீதிவலம் வந்தவனின்
விலாவொடிந்த வார்த்தைகளை
கோதித்தன் மார்தனிலே
கொலுவைத்த அவள்மழலை!

பாட்டுக்கும் வீட்டுக்கும்
பணிசெய்து பாடுகண்ட
கூட்டுமணிக் குயிலிவளின்
குரலினிமை ஒன்றதனால்
பாட்டுக்குள் துள்ளும்அனு
பல்லவியாய் நானானேன்!

கவிஞர் திருமலை
- ஏ.ஆர்.நாகூர், கந்தளாய் -

## விட்டுப் போனது!

புகைத்தல் பழக்கம் பட்ஜெட் டோடு
போனது எனை விட்டு-தினம்
தொகையாய் துண்டு விழுந்த வகைபோய்
தங்குது சில துட்டு!

இருமல் களைப்பு இதய வலிப்பு
இப்போ மிகக் குறைவு-என்
திருமதி தனக்கும் மழலைகள் தமக்கும்
திருப்தி; மன நிறைவு!

ஓசிப் புகைஞர் ஒட்டுவ தில்லை
ஓடி விட்டார் தூரம்-கரைந்த
காசில் சிலதுளி மீண்டும் என்றன்
கைக்கு வரும் நேரம்!

ஆண்டொன் றுக்குப் பல்லா யிரங்கள்
ஆமாம் முதல் இழந்தேன்-ஓடி
ஆண்டுகள் இருபது போனபின் னாலே
ஐயோ, இதை உணர்ந்தேன்!

கவிஞர் அ.கௌரிதாசன்,
ஆலங்கேணி கிழக்கு, கிண்ணியா.

## குறிஞ்சிக் கோவில்கள்



கவிஞர்
- ஸி.எஸ். காந்தி -

### பண்டாரவளை ஸ்ரீ முருகப்பெருமான்

பண்டார வளையில் துண்டாடும் நகரில்
பாங்குநீள் குன்றில் கோயில்-ஆகா
ஓங்குஞ்சீர் சிற்ப வாயில்
கொண்டாடும் விழாவில் மன்றாடும் பக்தர்
குமரன்தாள் போற்றி நிற்பர்-சின்னக்
குரவன்பேர் ஏத்தி நிற்பர்!

குன்றத்தில் குமரன் கோயில்மணி யோசை
காதினில் வந்து வீழும்-நெஞ்சில்
சோதியன் உருவந் தோன்றும்
மன்றத்தில் குந்தி தமிழோம்பி வந்த
முருகனை நெஞ்சே நாடு-மாயோன்
மருகனின் புகழைப் பாடு!

பாசிமலைக் குன்று ஊசியிலைக் காடு
பயணத்தில் வழியில் பார்த்தேன்-இரண்டு
நயனங்கள் குளிரப் பார்த்தேன்
கூசும்வேல் ஏந்தும் காசிநாதன் பிள்ளை
கோயிலை வந்து சேர்ந்தேன்-கோபுர
வாயிலைப் பார்த்து நேர்ந்தேன்!

இரயில்வந்து தரிக்கும் நிலையமும் நீண்டு
நகர்ப்புறம் பார்த்து நிற்கும்-கோணல்
முகப்பிணைக் காட்டி நிற்கும்
அயில்வீரன் காண கதிர்காமம் நண்ணும்
அடியார்கள் வந்து சேர்வர்-பிந்தும்
அடியாரும் அல்லில் சேர்வர்!

தங்குமட மிங்கு தூங்குமட மாக
ஆடியில் அல்லில் மாறும்-அடியார்
கூடிங்கு தங்க நேரும்
பொங்குஞ்சீர் கந்தன் மீதிங்கு அல்லில்
பாடுவர் பக்தர் நாடி-காலை
நாடுவர் கதிரை கூடி!

## கனவுக் கன்னி...


இன்பக் கனவொன்று கண்டேன்-உந்தன்
இதழ்கள் அளித்தசுவை செந்தேன்...!
தங்கத் தளிர்நிறத்தில் வந்தாய்-இன்னும்
தாபம் உனைநினைத்தாற் பொங்கும்...!
எங்கும் இருள்நிறைந்த வேளை-எந்தன்
இதயம் மகிழ்வித்து நின்றாய்...!
பொங்கும் வதனந்தான் நிலவு-பொழுதும்
புலரும்... தாபங்கள் வாட்டும்...!

தூங்கும் படுக்கையிலே வந்தாய் சுகம்
தந்து எனைவிழுங்க மென்றாய்..!
நீண்ட இரவெல்லாம் இன்பம்-நான்
நனைந்து ருசித்துண்டேன் உன்னை
ஏன்தான் இரவான நல்லாள்-ஓடி
ஒளித்தாள் எனஎண்ணிற் சோகம்
மீண்டும் இரவெல்லாம் வந்து-என்னை
மீளாத் துயிலோடே அணைப்பாய்..!

நடுங்கும் நள்ளிரவு வேளை-உந்தன்
நயன ஒளிக்கதிரோ... வேகம்...
தடுத்தல் இயலாதுன் அணைப்பை-உயிர்
தகிக்கும் சுகந்தானே தந்தாய்..?
அடுத்த மறுஇரவும் வந்து-என்னை
அணைத்துச் சுகந்தருவாய் அன்பே...!
படுக்கை இனிக்கிறது நாவில்-உந்தன்
பாவல் மறப்பேனோ பெண்ணே...?

இரவுச் சுகம்தந்த கள்ளி-என்னை
இனிமைக் கடலுக்குள் போட்டாய்
அரவம் தெரியாமல் வந்தாய்-சுகம்
அள்ளிக் குடம்குடமாய் வா[illegible]தாய்
பருவம் தெரியாமல் நீயும் [illegible]
படுக்கைச் சுகம்நாடி வந்[illegible]
உருவம் தெரிகிறது கண்ணில்-உயிர்
ஒன்றிக் கலந்ததுணை நீயே...!

- முல்லை வீரக்குட்டி






## சரித்திரம் படைப்போம் 02

பச்சையக் குழந்தைகள் ஒன்றாய் -நித்தம்
பாலுக்கு விம்மியே அழுவதைப் பார்!
மிச்சமென் றொன்றுமே இல்லை-பெற்ற
வயிறுகள் பற்றியே எரிவதைப் பார்!

வளமான மண்ணொன்றாய்ப் பறித்தார்-நாங்கள்
வாழ்ந்தந்த மனைகளுங் கைக்கெட்ட வில்லை
எழுந்தொன்றாய் எல்லோருங் கூடி-எங்கள்
அழிவினைத் தடுத்தேயாம் நிறுத்துவோம் வாரீர்!

தெய்வத்தா லாகாது எனினும் முயற்சி
திருவினை ஆக்கிடும் என்பதை அறிவீர்
மெய்தட்டிக் கைகொட்டி எழுவோம்-நாங்கள்
வையகம் அதிர்ந்திடச் சரித்திரம் படைப்போம்!

ஒன்றுபட் டுழைத்திடல் வேண்டும்-உள்ள
உறுதியைக் கைவிட்டு அழிந்திடல் ஆமோ?
நன்றென்ன எண்ணுபவை எல்லாம்-இங்கு
நாடியாம் பெறுதற்கு முயற்சிக்க வேண்டும்!

- ஞானம், வவுனியா -



## முதிர்கன்னி!

நரைதிரை மூப்பெய்தி
நங்கைதனைக் காவல்செய
இரையாகிப் போய்விடாது
இருக்கிறாள்; குமரியாக!

பதினெட்டு வயதுமுதல்
பட்டோலை எடுத்துவந்தும்
மதிகெட்ட தனஞ்சேர
மணவாழ்வு அமையவில்லை



காணிநிலம் அத்தோடு
காசுபொருள் கேட்டிட்டார்
வாணிஅவள் என்செய்வாள்
வாழ்க்கைத்துணை அமையவில்லை

பொருத்தமது இலையென்று
பொய்ச்சாட்டு கூறிநின்று
வருத்தம்வர வைத்ததன்றி
வாழ்வுபெற வைக்கவில்லை!

- கவிஞர்.செ.ஞானராசா, திருகோணமலை -



## சீதை வேடத்தில் நயன்தாரா

தெலுங்கில் உருவாகும் 'ராமராஜ்ஜியம்' படத்தில் சீதை வேடத்தில் நயனதாரா நடிப்பது உறுதியாகிவிட்டது. இதுதொடர்பாக எழுந்த எதிர்ப்புகளைப் புறக்கணித்துவிட்டு சீதை வேடத்தில் நயனையே நடிக்க வைப்பது எனத் தீர்மானித்துவிட்டார்களாம். தெலுங்கில் 'ராமராஜ்ஜியம்' என்ற பெயரில் புராணப்படம் ஒன்று உருவாகிறது. இதில் ராமர் வேடத்தில் என்.டி.ஆர். பாலகிருஷ்ணா நடிக்கிறார். சீதை வேடத்தில் நயனதாராவை நடிக்கவைக்க விருக்கின்றனர்.

ஆனால், இதற்கு தெலுங்குத் திரையுலகில் எதிர்ப்புகள் எழுந்தன. பிரபுதேவாவுடன் கள்ளக்காதலில் ஈடுபட்டுள்ளார் நயனதாரா. இதுதொடர்பாக நீதிமன்றில் வழக்குகளையும் சந்தித்து வருகிறார். இப்படிப்பட்டவரை சீதை வேடத்தில் நடிக்க வைப்பதா என்று எதிர்ப்புக் குரல்கள் எழுந்தன. இதையடுத்து சீதை வேடத்திற்கு நயனதாராவை நடிக்க வைப்பது குறித்து தயாரிப்பாளர் தரப்பு மறு பரிசீலனை செய்வதாகத் தகவல்கள் வெளியாகின. ஆனால் தற்போது நயனதாராவையே சீதை வேடத்தில் நடிக்க வைப்பது எனத் தீர்மானித்துவிட்டார்களாம். திட்டமிட்டபடி இப்படம் உருவாகிறது, அந்தந்த வேடங்களுக்கென, ஏற்கனவே முடிவுசெய்யப்பட்டவர்களே தொடர்ந்து நடிக்கவிருப்பதாகவும் படத்தயாரிப்புக் குழு கூறுகிறது.



## தமிழை மறந்தார் இலியானா

தமிழ் படங்களில் நடிக்க விரும்பாமல், தெலுங்குப் படங்களில் தொடர்ந்து நடித்து முன்னணி நாயகியாகத் திகழும்,கவர்ச்சிக் கன்னி இலியானா கன்னடத்தில் ஒரே ஒரு பாடலுக்கு குத்தாட்டம் போட்டுள்ளாராம். 'ஹுடுகா ஹுடுகி' என்ற படத்தில் ஒரு பாடலுக்கு இலியானா நடனமாடியுள்ளார் என்பதுதான் படத்தின் சிறப்பம்சம். தெலுங்கின் முன்னணி நாயகியாகத் திகழும் இலியானா, தமிழ்ப் படத்தின் மூலம்தான் அறிமுகமானவர். ஆனால் இப்போது அவரை தமிழில் நாயகியாக நடிக்க வைக்க பலரும் முயன்றும், நடிக்க விரும்பம் தெரிவிக்கமாமல் இருக்கிறார் இலியானா. 'ஹுடுகா ஹுடுகி' படத்தில் ஒரு பாடலுக்குக் குத்தாட்டம் போட்டுள்ளாராம் இலியானா.

## சிம்பு படத்தில் கௌதம்

சிம்புவை வைத்து இயக்கிய கௌதம் மேனன், இப்போது சிம்பு நடிக்கும் 'போடா போடி' படத்தில் சின்ன வேடம் ஒன்றில் நடிக்கிறாராம். சிம்புவை புதிய கோணத்தில் காட்டியவர் கௌதம் மேனன். 'விண்ணைத் தாண்டி வருவாயா' படத்தில் சிம்புவின் வேடங்கள் ரசிகர்களின் பாராட்டுக்களைப் பெற்றன. இந்த நிலையில் தற்போது சிம்பு நடிக்கும் 'போடா போடி' படத்தில் கௌரவ வேடத்தில் நடிக்கவுள்ளார் கௌதம் மேனன். படத்தின் படப்பிடிப்பு நடந்து கொண்டிருக்கிறது. சிம்புவுக்கு ஜோடியாக நடிப்பவர் சரத்குமாரின் மகள் வரலட்சுமி. இப்படத்தில் ஒரு முக்கிய வேடத்துக்காக ஆளைத் தேடியுள்ளனர். சிம்புவின் மனதில் கௌதம் வரவே, அவரிடம் நேரடியாக கேட்டு சம்மதிக்க வைத்து நடிக்க வைத்துள்ளாராம்.





## அமைப்பான - உடல்வாகான நடிகை ஸ்ரேயா - நடிகர்கள்

ஸ்ரேயாவின் நடிப்புக்குப் பாராட்டு கிடைக்கின்றதோ இல்லையோ அவரது அழகுக்கும், உடல் அமைப்புக்கும், நடிகர்களிடமிருந்து நிறைய பாராட்டுக்கள் கிடைக்கின்றனவாம். அமைப்பான உடல் அழகைக் கொண்டவர்களுக்குத் தான் இன்று சினிமாவில் மதிப்பு இருக்கிறது. தமிழ் சினிமாவில் இருந்த அமைப்பான உடல் அழகைக் கொண்ட நாயகிகள், உடல் எடையை உயர்த்தி விட்டனர். ஆனால் ஸ்ரேயாவின் உடல் வாகு தொடர்ந்து ஒரே மாதிரியாக இருப்பதாக ஆச்சரியத்துடன் கூறுகிறார்கள். நடிக்க வந்தபோது என்ன மாதரிரியான அமைப்பாக இருந்தாரோ அதை அப்படியே கவனித்து வருகிறாராம் ஸ்ரேயா. தற்போது மேலும் 'ஸ்லிம்'மாகி பல நாயகர்களின் பாராட்டுக்களைப் பெற்றுள்ளாராம். ஆனால் இந்த நாயகர்கள் எல்லாம் ஹிந்திக் காரர்களாம். அவர்கள் ஸ்ரேயாவின் அழகைப் பாராட்டியதோடு, எப்படி இப்படித் தொடர்ந்து கட்டுக்கோப்பாக உடலை வைத்துக்கொள்ள முடிகிறது என்றும் ஆச்சரியத்தோடு கேட்கிறார்களாம். எல்லோருக்கும் ஸ்ரேயா சொல்லுகின்ற ஒரே பதில் யோகா செய்வதால்தான், என்பதுதானாம். ஸ்ரேயாவைப் பின்பற்றி, உடல் எடையைக் குறைக்க யோகா பயிற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளாராம் ஸ்ரேயாவின் தோழியான ரீமா சென்.

## தங்கை படத்தில் நாயகியாகாத சோகத்தில் சமீரா

சமீரா ரெட்டி சோகத்துடன் உள்ளாராம். காரணம், தனது தங்கை தயாரிக்கும் படத்தில் தன்னை நாயகியாகப் போடவில்லை என்பதனாலாம். ஹிந்தியில் நடித்து வரும் சமீரா ரெட்டி, 'வாரணம் ஆயிரம்' படம் மூலம் தமிழ் ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்தார். ஆனால் 'அசல்' படத்தில் அவர் ரசிகர்களை ஏமாற்றிவிட்டார். இருந்தாலும் தற்போது மீண்டும் கௌதம் மேனனின் 'நடு நிசி நாய்களை' நம்பியுள்ளார். இந்தப் படம் தனக்கு நல்ல பெயரை மட்டுமல்லாமல் விருதையும் சேர்த்து அள்ளித் தரும் என்று நம்பியிருக்கிறாராம் ரெட்டி. இந்தச் சந்தோஷத்தில் இருந்து வந்த சமீராவுக்கு, தங்கை சுஷ்மா ரெட்டி மூலம் ஒரு சோகம் வந்து சேர்ந்தது. சுஷ்மா ரெட்டி ஒரே நேரத்தில் தெலுங்கு மற்றும் ஹிந்தியில் ஒரு படம் தயாரிக்கிறார். அந்தப் படத்தில் நாயகியாக சமீராவை அவர் தேர்வுசெய்யவில்லையாம். சொந்த தங்கையே தனது படத்தில் தன்னை நாயகியாகப் போடாதது குறித்து சமீராவுக்கு பெரும் ஏமாற்றமாம். இருந்தாலும் 'நடுநிசி நாய்கள்' மூலம் தனக்கு வரப்போகும் ஏற்றத்தை நினைத்து தன்னைத் தானே ஆறுதல் படுத்திக்கொண்டாராம்.





# முன்னெச்சரிக்கையாக இருக்கிறார் அசின்

மலையாளத்தில் வெளிவந்த 'பொடிகாட்' படத்தின் தமிழ் ரீமேக் தான் 'காவலன்'. இந்தப் படத்தில் விஜய்க்கு ஜோடியாக அசின் நடித்துள்ளார். இப்போது இதே படத்தின் ஹிந்தி ரீமேக் உரிமையை சல்மான் கானின் தங்கை அல்விரா பெற்றுள்ளார். இதில் சல்மானுக்கு ஜோடியாக நடிக்குமாறு அசினைக் கேட்டபோது, ஒரு பெரிய'நோ' சொல்லி விட்டாராம். ஏன்? ஹிந்தியில் சல்மான் கானுடன் 'லண்டன் ட்ரீம்ஸ்', 'ரெடி' என இரண்டு படங்களில் ஜோடி சேர்ந்துவிட்டார். பொலிவூட்டில் அசினுக்கும் சல்மானுக்கும் காதல் என்று ஏற்கனவே கிசுகிசு நிலவி வருகிறது. வதந்திகள் பெரிதாவதைத் தடுக்கத்தான் முன்னெச்சரிக்கையாக சல்மானுக்கு 'நோ' சொன்னாராம் அசின்.



# தெய்வமகன் படத்தில் இன்னொரு இரண்டாவது நாயகியாக அமலா

விக்ரம் - அனுஷ்கா நடித்துக்கொண்டிருக்கும் 'தெய்வமகன்' படத்தில் இணையும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார், அமலா பால். 'சிந்து சமவெளி' என்ற படத்துக்காக தனது பெயரை அனகா என மாற்றிக்கொண்டவர், அப்படத்தின் சர்ச்சையை அடுத்து 'மைனா' படத்துக்காக அமலா பால் என்ற தனது நிஜப் பெயரையே வைத்துக் கொண்டார். 'மதராசப்பட்டினம்' விஜய் இயக்கத்தில் விக்ரம் நடிக்கும் 'தெய்வமகன்' படத்துக்கு நடிகை அனுஷ்கா ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார். அதில், இன்னொரு முக்கியமான கதாபாத்திரத்தில் நடிக்க அமலா பாலை ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். அண்மையில் தனது குடும்பத்தினருடன் மைனா படத்தைப் பார்த்த விக்ரம், அதில் அமலாவின் நடிப்பைக் கண்டு வியந்து பாராட்டியிருக்கிறாராம். அதன் தொடர்ச்சியாகவே, தான் நடித்து கொண்டிருக்கும் 'தெய்வ மகன்' படத்துக்கு அமலா பாலை பரிந்துரை செய்திருக்கிறார் விக்ரம். அப்படத்தில் ஏழு வயது மகளை மீட்கப்போராடும் மனநிலை பாதிக்கப்பட்டவராக விக்ரம் நடிக்கிறார். அவருக்கு உதவும் நேர்மையான வழக்கறிஞராக வருகிறாராம் அனுஷ்கா. விக்ரமுக்கு மனைவியாக நடிக்கவிருக்கிறாராம் அமலா பால்.

# அஜித்துக்கு அறிவுரை கொடுத்தார் த்ரிஷா

அஜித்துடன் இணைந்து 'மங்காத்தா' படத்தில் நடித்துக்கொண்டிருக்கிறார் திரிஷா. 'மன்மதன் அம்பு' படப்பிடிப்பை முடித்த கையோடு 'மங்காத்தா' படப்பிடிப்பில் கலந்துகொண்டுள்ளதால், பெரும் உற்சாகத்துடன் இருக்கிறார் திரிஷா. படத்தின் முதல் கட்டப் படப்பிடிப்பு வெற்றிகரமாக முடிந்துள்ளதாம். இந்த நிலையில் 'ட்விற்றர்' என்ற இணையத்தளத்தின் மூலம் திரிஷா ஒரு செய்தியைக் கொடுத்துள்ளார். அதில் திரிஷா கூறியிருப்பதாவது,

அஜித் படப்பிடிப்பின்போது, தானே தனது கையால் தயாரித்த பிரியாணியைக் கொடுத்து அனைவரையும் அசத்திவிட்டார். உண்மையிலேயே அஜித் மிகப் பெரிய சமையற்கலை நிபுணர். ஒரு 'ரெஸ்ரோறன்டை' தொடங்கி விடுங்கள் என்று அவருக்கு அறிவுரை கூறியுள்ளேன் என்று தனது இணையத்தளத்தில் குறிப்பிட்டுள்ளார் திரிஷா.

அதேபோல நவம்பர் 7ஆம் திகதி பிறந்த நாள் கண்ட கலைஞானி கமல்ஹாசனுக்கும், மங்காத்தா இயக்குநர் வெங்கட் பிரபுவுக்கும் பிறந்த நாள் வாழ்த்துக்களையும் தெரிவித்திருந்தார் திரிஷா. அதில், கமல்ஹாசனுக்கு எனது மகிழ்ச்சிகரமான பிறந்த நாள் வாழ்த்துகள். எனக்குப் பிடித்த 'சூப்பர் ஸ்ரார்' அவர்தான். அவருடன் நடித்தது பெருமையாக இருக்கிறது. எனது இயக்குநர் வெங்கட்பிரபுவுக்கும் எனது பிறந்த நாள் வாழ்த்துகள். அவருடன் பணியாற்றுவது உற்சாகமாக உள்ளது என்று கூறியுள்ளார் திரிஷா.



# யோகா ஆசிரியராக நமீதா

கன்னடத்தில் நமீதா நடித்துள்ள புதிய படத்துக்கு 'நமீதா ஐ லவ் யூ' என்றே பெயர் வைத்துவிட்டனர். படத்தில் யோகா ஆசிரியராகக் கலக்கியுள்ளாராம் நமீதா. கவர்ச்சி, கவர்ச்சி, கவர்ச்சியைத் தவிர வேறு எதுவும் இல்லை என்ற நிலையில் இருப்பவர் நமீதா. இவரை வைத்து கவர்ச்சிப் படம் டுமே எடுப்பது என்ற கொள்கையுடன் அனைத்துத் திரையுலகங்களும் வரிந்து கட்டிக்கொண்டு படம் எடுத்துக்கொண்டிருக்கின்றன. 'ஹூ' என்ற படத்தின் மூலம் கன்னடத்திலும் புகுந்த நமீதா, முதல் படத்திலேயே ரசிகர்களைப் படபடக்க வைத்துவிட்டார். இப்போது 'நமீதா ஐ லவ் யூ' என்ற படம் மூலம் கன்னட ரசிகர்களுக்கு யோகா கற்றுத்தரவிருக்கிறார்.

ஜெயசிம்ம ரெட்டி இயக்கியுள்ள இப்படத்தில் யோகா ஆசிரியராக வருகிறாராம் நமீதா. படப்பிடிப்பின்போது நேரம் தவறாமல் சரியான நேரத்திற்கு வந்து போகிறாராம் நமீதா. படத்தில் யோகா செய்வதோடு, சண்டைக் காட்சிகளிலும் அசத்துகிறாராம் நமீதா. இது சமூகத்திற்கு ஒரு தகவலைத் தரும் படம் என்கிறார் ரெட்டி.

# ரஸியா ஸுல்தானா


17
புத்தாக்கம் : கே.கான்
ஒரு நாள் தர்பாரில்
ஜிஸ்யா வரியை நீக்கிவிட வேண்டுமென நான் கருதுகிறேன்.
ஜிஸ்யாவை நீக்கினால் எமது பிடி தளர்ந்து போய்விடும்
ஜிஸ்யா - முஸ்லிம் அல்லாதவர்கள் மீது விதிக்கப்படும் வரி
இந்த வரி,நாம் அவர்களது எஜமான் என்பதைப் பிரகடனப்படுத்துகிறது.
அவர்களை எதற்காக அவமதிக்க வேண்டும் ?
ஜிஸ்யா காரணமாக பெருந்தொகையான ஹிந்துக்கள் முஸ்லிமாகிவிட்டனர். மேலும். இதன் மூலம் வருமானமும் கிடைக்கிறதே.
சிலவேளை அவர்கள் பயத்தின் காரணமாக இஸ்லாத்தை ஏற்றிருப்பார்கள்.
பிரஜைகள் அனைவரும் ஆட்சிக்கு விசுவாசமுள்ளவர்களாக இருக்க வேண்டும் என நான் விரும்புகிறேன். எனவே நான் ஜிஸ்யா வரியை ரத்துச் செய்கிறேன்.
ஸுல்தானாவின் இந்தச் சிந்தனைகளால் இஸ்லாத்துக்கு அபாயம் நேரக்கூடும்.
18
நிஸாமுல் முல்க்கும் மற்றும் சில தலைவர்களும் ரஸியாவின் ஆட்சியைக் கவிழ்க்கத் திட்டம் தீட்டினார்கள்.
செய்ய வேண்டியதை இப்போதே செய்துவிட வேண்டும்.
ஆனால், நம்பிக்கைக்குரிய அல்துனியா, நேரகாலத்தோடு ரஸியாவை ஜாக்கிரதையாக இருக்குமாறு சொல்லி வைத்தான்.
ஸுல்தானா, நீங்கள் கவனமாக இருங்கள். சில தலைவர்கள் உங்களுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்கிறார்கள்.
நிஸாமுல் முல்க் ரகசியமாக என்னோடு ஒப்பந்தம் செய்வதாக உங்களுடைய வேவுகாரர்களைக் கொண்டு வதந்தி பரவவிடுங்கள்.
இந்தத் தந்திரம் பலிக்கலாயிற்று.
ரஸியாவுக்கு எதிராக நிஸாமுல் முல்கின் எந்தப் பேச்சையு நம்ப வேண்டாம். அவர் அரசியின் கையாள்.
இவ்வாறு தலைவர்களிடையே பிளவு உண்டாயிற்று. அவர்கள் பலமிழந்து போயினர். அத்தோடு விரைவிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது ராஜதுரோக வழக்குப் போடப்பட்டது.
நிஸாமுல் முல்க் ஸிமூர் மலைப்பகுதியில் தஞ்சமடைந்தார். அங்கேயே அவர் மரணமடைந்தார்.
19
அவனது விசுவாசம் காரணமாக அல்துனியா படிங்டா பிரதேச கவர்னராக நியமிக்கப்பட்டான்.
இப்போது இராஜ்யத்துக்குக் குறைந்தபட்சம் அந்த மாகாணத்திலிருந்து எந்த அபாயமும் நேராது.
ரஸியா என்னைத் திருமணம் செய்து கொள்ளேன்.
எப்படிச் செய்வது அல்துனியா! தலைவர்கள் இன்னும் பொறாமைப்படுவார்களே.
எங்களுடைய உள்ளங்களைப் பற்றியும் யோசித்துப் பாருங்கள். நாங்கள் வாலிப வயதினர்கள். எனக்கு நீங்களும் உங்களுக்கு நானும் தேவையாயிற்றே.
திருமணம் செய்துகொள்ளும் விருப்பம் எனக்கு இல்லையென்று நினைக்கிறீர்களா? ஆனால், தற்போதைக்கு அரசியல் விவகாரங்களில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.
20
அல்துனியா படிங்டா சென்ற பிறகு -
தவறை மன்னித்துக் கொள்ளுங்கள். தம்மீது உங்களுக்கு நம்பிக்கையில்லை என்று அமீர்கள் (தலைவர்கள்) நினைக்கிறார்கள்.
இல்லை, பல்பல், எனக்கு அவர்கள் மீது பூரண நம்பிக்கை உண்டு.
ஸுல்தானா, ஜமாலுத்தீன் யாகூத்தை நீங்கள் அமீர்களின் தலைவராக ஏன் நியமித்தீர்கள் என்று எங்களால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. அவர் அபிஸீனியாவைச் சேர்ந்தவர். ஒரு துருக்கியன் இந்தப் பதவிக்குத் தகுந்தவன் என்று உங்களுக்குப் படவில்லையா?
ஏன் இல்லாமல்? அமீர்களில் பலர் இதற்குத் தகுதியானவர்கள் தான். ஆனால் யாகூத்தும் தகுதியானவர். அத்தோடு விசுவாசமானவரும் கூட. அவருக்கும் பதவி உயர்வு கிடைக்க வேண்டும்.
ஆனால், அவர் துருக்கியர் அல்ல.
எல்லா முஸ்லிம்களும் சகோதரர்கள் என்பது புனித குர்ஆனின் அறிவுரை.
(தொடரும்)




(சென்றவாரத் தொடர்ச்சி...)

சந்திரன் கயிற்றைப் பிடித்துக் கொண்டு கிணற்றினுள் இறங்கினான். கிணற்றின் ஆழத்தில் ஒரு கதவு தென்பட்டது. அதை எப்படித் திறப்பது என்று தெரியாமல் மந்திரக்கோலை அதன் மீது வைத்தான். என்ன ஆச்சரியம்! கதவு தானாகத் திறந்து கொண்டது. உள்ளே தங்க மாளிகை தகதகவென மின்னியது.

சந்திரன் உள்ளே சென்றதும் மூன்று பேய்களும் அவன் முன் வந்து நின்று தங்களுடைய விகாரமான பற்களைக் காட்டியபடி ''யார் நீ?'' என்று விசாரித்தன.

உடனே என்ன செய்வது என்று தெரியாத சந்திரன் மந்திரக்கோலை எடுத்து பேய்களின் முன் ஆட்டினான். அவ்வளவு தான், அவை இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டன.

உள்ளே சென்றான் சந்திரன். அங்கு மூன்று இளவரசிகளும் இருப்பதைக் கண்டான். உடனே தான் அரண்மனையிலிருந்து வந்திருக்கும் விஷயத்தை அவர்களிடம் சொன்னான். அதைக் கேட்டு அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர்.

எல்லோரும் மாளிகையிலிருந்து வெளியே வந்தார்கள். இதுவரை தன்னுடைய வலது கையில் வைத்திருந்த மந்திரக்கோலை இடது கைக்கு மாற்றினான் சந்திரன். கயிற்றைப் பிடித்து இழுக்க வேண்டும் என்பதற்காக. அவ்வளவு தான், தங்க மாளிகை மாயமாய் மறைந்துவிட்டது. எல்லோருக்கும் மிகவும் ஆச்சரியமாக இருந்தது. மறுபடியும் மந்திரக்கோலை வலது கைக்கு மாற்றினான். மீண்டும் தங்க மாளிகை தோன்றியது.

பிறகு இளவரசிகள் ஒவ்வொருவரையும் கயிற்றின் மூலமாக மேலே அனுப்பினான் சந்திரன். தனக்குக் கயிறு வரும் என்று காத்திருந்தான். ஆனால், மேலே போன கயிறு போனது தான், திரும்பி வரவேயில்லை.

இளவரசிகள் மூன்று பேரும் மேலே வந்ததும் நந்திவர்மனுக்கும் ராஜசிம்மனுக்கும் மிகுந்த சந்தோஷமாகிவிட்டது. உடனே அவர்களுடைய வக்ரபுத்தி வேலை செய்தது. தாங்களே இவர்களை மீட்டு வந்ததாக மன்னனிடம் கூறி, அரசில் பாதியைப் பெற வேண்டும் என்று நினைத்தார்கள்.

உடனே இளவரசிகளைப் பார்த்து, ''உங்களை நாங்கள் தான் மீட்டு வந்ததாக உங்கள் அப்பாவிடம் சொல்ல வேண்டும், சத்தியம் செய்துகொடுங்கள். இல்லையென்றால் உங்களைக் கொன்று விடுவோம்'' என்று மிரட்டினார்கள். இளவரசிகளும் பயந்து அப்படியே சொல்வதாகச் சொன்னார்கள்.

அரண்மனைக்கு எல்லோரும் திரும்பிவிட்டார்கள் சந்திரனைத் தவிர. அரசருக்கு மகள்களைப் பார்த்ததும் ஆனந்தக் கண்ணீரே வந்துவிட்டது. நந்திவர்மனுக்கும் ராஜசிம்மனுக்கும் இரு இளவரசிகளைத் திருமணம் செய்துகொடுக்கும் ஏற்பாடுகள் தடபுடலாக நடந்தன.



கிணற்றுக்குள் அகப்பட்டுக் கொண்ட சந்திரன் எப்படி மேலே வருவது என்று யோசித்துக் கொண்டிருந்தான். உடனே மந்திரக்கோலை எடுத்து தன் வலது கைக்கு மாற்றினான். தங்க மாளிகை தோன்றியது. மந்திரக்கோலை ஆட்டினான். உடனே பேய்கள் அவன் முன்னே வந்து நின்று ''தங்களுக்கு என்ன வேண்டும்'' என்று கேட்டன. ''என்னை இங்கிருந்து வெளியே கொண்டுசென்று விடுங்கள்'' என்று சந்திரன் சொன்னான். உடனே பேய்கள் அவனை கிணற்றினுள் இருந்து வெளியில் கொண்டுவந்துவிட்டன.

சந்திரன் மீண்டும் மந்திரக்கோலை தனது இடதுகையில் மாற்றி வைத்துக் கொண்டு அரண்மனை வந்து சேர்ந்தான். அரசரிடம் வந்து தான் இளவரசிகளை மீட்டதாக நடந்ததைக் கூறினான். ஆனால், நந்திவர்மனும் ராஜசிம்மனும் ''சுத்தப்பொய். இவன் கூறுவது அத்தனையும் கட்டுக்கதை'' என்று கூச்சலிட்டார்கள். அரசருக்கு இதைக் கேட்டதும் ஒரே குழப்பமாகிவிட்டது.

அவர் இளவரசிகளை அழைத்து, ''உங்களை யார் மீட்டுக்கொண்டு வந்தது? சொல்லுங்கள்'' என்று கேட்டார். உண்மையைச் சொல்லக் கூடாது என்று இரு படைத்தலைவர்களிடமும் சத்தியம் செய்து கொடுத்திருப்பதால், ''நாங்கள் இருந்த தங்க மாளிகையை யார் இங்கு வரவழைக்கிறார்களோ அவர்களே எங்களை மீட்டுக்கொண்டு வந்தவர்கள்'' என்று சமயோசிதமாகப் பதில் கூறிவிட்டார்கள்.

உடனே அரசர் நந்திவர்மனையும் ராஜசிம்மனையும் பார்த்து, ''இளவரசிகள் சொன்ன மாளிகையை வரவழையுங்கள்'' என்று சொன்னார். இருவரும் ஆடு திருடிய கள்வர்கள் போல் திருதிருவென விழித்தார்கள். சந்திரன் ''நான் வரவழைத்துக் காட்டுகிறேன்'' என்று கூறிவிட்டு, தன்னுடைய இடது கையில் இருந்த மந்திரக்கோலை வலது கைக்கு மாற்றினான்.

அவ்வளவுதான்! அழகிய தங்கமாளிகை ஒன்று அரண்மனையின் உள்ளேயே தோன்றிவிட்டது. இதைக் கண்ட அரசன் யார் உண்மை வீரன் என்பதைக் கண்டுகொண்டான். தன்னுடைய பெண்கள் மூவரையும் சந்திரனுக்குத் திருமணம் செய்துகொடுத்து நாட்டுக்கே அரசனாக்கினான். உண்மையை மறைத்த படைத்தலைவர்களைச் சிறையில் அடைத்தான்.

ஸ்ரீ கிருஷ்ணவேணி

(முற்றிற்று)




---

ஜூலியஸ் சீசர் காலத்தில் ரோமர்களின் கலண்டரில் ஒன்பதாவது மாதமாக இடம்பெற்றது நவம்பர் மாதம். பிறகு ஜனவரியே வருடங்களில் முதன்மையானது என்று கொண்டுவரப்பட்டது. என்றாலும், பெயர்கள் எந்த மாற்றமும் அடையவில்லை.

## நவம்பர் மாதத்தின் கதை



மார்ச் மாதமே வருடத்தின் முதல் மாதமாக இருந்தது அல்லவா? அந்த நிலை மாறி மார்ச்சுக்கு முன் ஜனவரி பெப்ரவரி மாதங்கள் இடம்பெற்றன. இவற்றை முன்னால் சேர்ந்ததால் பின்னால் வந்த மாதங்களின் பொருள் மாறுபட்டது. ஆனால், வேறு பெயர் வைக்கப்படவில்லை.

ஒன்பது என்று பொருள்படும் சொல்லே பதினோராவது மாதமாக வந்தது. இம்மாதம் ஆங்கில -செக்ஸன் என்னும் ஒரு மக்களினத்தவரால் ரத்த மாதம் என்றே வழங்கப்படுகிறது.

ஏனெனில், இந்த மாதத்தில் குளிர்ப்பிரதேசங்களில் அதிகமாகப் பனிகொட்ட ஆரம்பிக்கும். வீடுகளும் வீதிகளும் பனியில் மறைந்துவிடும். மனிதர்கள் வாழ்வதே மிகக் கடினம் என்று நினைக்கும்படியான நிலத்தில் ஆடுமாடுகளை வைத்திருப்போர் எப்படிக் காப்பாற்றுவார்கள்? தரையெல்லாம் பனிக்கட்டியில் மறைந்திருக்கும்போது ஆடுமாடுகளுக்கு வேண்டிய பசும்புற்கள் எப்படிக் கிடைக்கும்?

எனவே குளிர்ப் பிரதேசத்தில் இருப்போர் தங்கள் கால்நடைகளைக் கொன்று உண்டுவிடுவர். எனவே, இம்மாதம் blood & Month என வழங்கப்படுகிறது.

---

## லபக்



'கொடைக்கானல், பழநி மலைகளின் அடர்ந்த காடுகளிலும் மலைக் குகைகளிலும் வாழும் உண்மையான ஆதிவாசிகளான மலை வேடர், பளியர், காட்டுநாயக்கர்கள் வேட்டையாடித்தான் வாழ்கிறார்கள்.



அவர்களின் திறமை பிரமாதமானது. ஓர் எலி வளையில் இருக்கும் மண்ணின் தன்மையைப் பார்த்தே வளைக்குள் என்ன இருக்கிறது என்பதைச் சொல்லிவிடுவார்கள். வளைக்குள் குட்டிபோடும் தறுவாயில் எத்தனை தாய் எலிகள் இருக்கின்றன என்பதைக் கூடச் சொல்லி விடுவார்களாம். வளையில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் எலிகளின் எண்ணிக்கையைக் கூட அவர்கள் கண்டுபிடித்து விடுவார்கள். அடுத்தபடி கம்பியை விட்டு எலியை உயிரோடு 'லபக்'கி விடுவார்கள்.

---

## கொஞ்சம் சிரியுங்கள்!

**அம்மா:** வடையைத் தின்டுட்டு கையில இருக்கிற எண்ணெயை காலில தடவிக்கோ.

**மகன்:** ஒரு காலில எண்ணெய் தடவிட்டேன் அம்மா. மற்றக் காலுக்கு இன்னொரு வடை தாம்மா.

**ராஜு:** என்னடா, மணி என்னன்டு கேட்டதுக்கா ஆசிரியர் உன்னை அடிச்சாரு? அநியாயமா இருக்கே!

**தேஜு:** ஆமப்பா...! அவர் ஸ்கூலுக்கு லேட்டா வந்தபோது மணி என்னன்டு கேட்டேன்.

**தமிழ் ஆசிரியர்:** இனிமே தமிழ் வகுப்பில் ஆங்கிலமே பேசக் கூடாது.

**மாணவர்கள்:** ஒகே சேர், வீ வில் ஃ பலோ யுவர் இன்ஸ்டரக்ஷன்.

**ஆசிரியர்:** சுந்தர், நேத்து நீ வரல்லை. உங்கப்பாட்ட இருந்து லீவ் லெட்டர் வாங்கிட்டு வந்தியா?

**மாணவன்:** இல்லை சார், அதுக்குப் பதிலா எங்கப்பா கேசட் கொடுத்தனுப்பினாரு.



**வாத்தியார்:** இப்போ நான் கேக்கிற கேள்விக்கு 'டக்'குன்னு பதில் சொல்ல வேண்டும். நிலத்திலும் நீரிலும் வாழும் பறவை இனம் ஒன்டு சொல்லு.

**பையன்:** 'டக்' சார்.

**வாத்தியார்:** வெரி குட், கரெக்டான பதில்.



# மும்பையில் மையம் கொண்ட மிஷேல் புயல்

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் இந்திய வருகை எதிர்ப்புகளையும் தாண்டி பெரும் ஆவலை ஏற்படுத்தியிருந்தது. நான்கு நாள் விஜயத்தின்போது சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளை மும்பையில் கழித்தார் ஒபாமா. வர்த்தக ரீதியிலான உறவுகளை மேம்படுத்தும் வகையில் தொழிலதிபர்களுடன் ஒபாமா பேச்சு நடத்தினார். ஒபாமாவுடன் அவரது மனைவி மிஷேல் மற்றும் குழுவினர் நான்காயிரம் பேர் வந்திருந்தனர்.

ஒபாமாவின் வருகையால் தெற்கு மும்பை கடந்த சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பாதுகாப்புக் கெடுபிடியால் திணறியது. இந்தப் பகுதி மக்கள் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாட முடியாமல் தவித்தனர்.

மும்பை செயிண்ட் ஜோசப் கல்லூரியில் நடந்த நிகழ்ச்சியில் 300இக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். இதில் ஒபாமா தம்பதியுடன் கலந்துரையாடும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்தது. ஒபாமாவும், அவரது மனைவியும் எவ்வித பந்தாவும் இல்லாமல் சகஜமாகப் பேசியது அனைவரையும் ஆச்சரியப்படுத்தியது.

முதலில் பேசிய மிஷேல், பதில் அளிக்க முடியாதபடி தன் கணவரிடம் கடினமான கேள்விகளைக் கேளுங்கள் என்று மாணவர்களுக்கு அன்புக் கட்டளையிட, ஆடிப்போய் விட்டார் ஒபாமா. மனைவியின் கிண்டலை ரசித்த ஒபாமா, மனைவியைப் புகழ்ந்து தள்ளிவிட்டார். மிஷேல் சிறந்த பேச்சாளர். அவருக்குப் பின்னால் நான் பேசினால் என் பேச்சு எடுபடாது. எனவே, கடினமான கேள்விகளைக் கேட்டுவிடாதீர்கள் என்று மாணவர்களிடம் கெஞ்சாத குறையாக கேட்டார் ஒபாமா.ஒபாமாவும், அவரது மனைவி மிஷேலும் அடித்த நகைச்சுவைகளால் அரங்கமே அதிர, மாணவர்கள் மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போனார்கள்.

அதன் பின்னர் நடந்த நிகழ்ச்சியில் பள்ளிக் குழந்தைகளுடன் நடனம் ஆடிய மிஷேல் எவ்வித பந்தாவும் இல்லாமல், அந்த குழந்தைகளாகவே மாறிப்போனார். ஒபாமாவுடன் தொழில் அதிபர்கள் பங்கேற்ற நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வந்த மகாராஷ்டிர முதல்வர் அசோக் சவானிடம் ரேஷன்கார்ட், பான்கார்ட் ஆகிவற்றை அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் கேட்க, பதற்றமடைந்தார் அவர். ஒபாமாவின் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளாமல் வெளியேறிய அவரை அதிகாரிகள் சமரசப்படுத்த முயன்றனர். ஒபாமாவை வரவேற்க ஏககெடுபிடி செய்யப்பட்ட போதும், அசோக் சவான் மனக்குழப்பத்துடன் அங்கிருந்து புறப்பட்டு, தனது சொந்த ஊருக்குச் சென்றுவிட்டார். முதல்வருக்குப் பதிலாக துணை முதல்வர் தான் அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டார். பல தடவைகள் பாதுகாப்பு வளையத்தை உடைத்துக்கொண்டு வெளியே வந்து மக்களோடு கைகுலுக்க ஆர்வம் காட்டினார் ஒபாமாவின் மனைவி மிஷேல்.

# ரோஜாவும் அர்த்தமும்



இன்றைய உலகில் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்குமிடையில் அன்பைப் பரிமாறிக்கொள்ள முதலிடம் வகிப்பது ரோஜாப்பூவே, இவ் ரோஜாப்பூக்கள் பற்பல நிறங்களில் காணப்படுவது அதிசயம் தான். ஒவ்வொரு நிற ரோஜாப்பூவும் என்ன அர்த்தத்தை வெளிப்படுத்துகின்றது என்பதை சற்று விரிவாக நோக்கினால்......,

★ சிவப்பு ரோஜாக்கள் அன்பையும், காதலையும் வெளிப்படுத்தும். ஆழ்மனதில் இருக்கும் அழகையும் பிரகாசிக்கச் செய்யும் வல்லமை சிவப்பு ரோஜாக்களுக்கு உண்டு.

★ இளஞ்சிவப்பு ரோஜாவை மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ள வழங்கலாம். பாராட்டுவதற்கும், வாழ்த்து கூறவும், நட்பு பாராட்டுவதற்கும் ஏற்றது.

★ மெல்லிய இளம்சிவப்பு ரோஜாக்கள் அழகை வெளிப்படுத்தக் கூடியவை. கருணை, மகிழ்ச்சி, ஆளுமைத்திறனை வெளிப்படுத்தச் சிறந்தது இந்த ரோஜாக்கள்.

★ அடர்ந்த 'பிங்க்' நிற ரோஜா நன்றி தெரிவிக்க கொடுக்கப்படவேண்டியது.

★ இளம்நீல நிற ரோஜா, முதல் பார்வையில் இதயத்தைக் கொள்ளை கொண்டவருக்கு கொடுக்கப்பட்டால் அவரது அன்பை மேலும் பெருக்கித்தரும்.

★ வெள்ளை ரோஜா உயிரில் கலந்த தூய காதலை வெளிப்படுத்த வழங்கப்படுவதாகும். திருமணம் நிச்சயமான சமயத்தில் உங்கள் வாழ்க்கைத் துணைக்கு கொடுக்கலாம். பயபக்தி, பணிவைக் காட்டவும் வெள்ளை ரோஜா பொருத்தமானது. குற்றமற்றவன் என்பதைச் சொல்லவும் வெள்ளை ரோஜா ஏற்றது.

★ நட்பு, மகிழ்ச்சி, பெருமிதம், சுதந்திரம் போன்றவற்றில் உங்களுக்கு இருக்கும் அக்கறையை வெளிக்காட்ட மஞ்சள் ரோஜா பொருத்தமானது.

★ வெளிர்நிற ரோஜாக்கள் எல்லாம் நட்பை வெளிப்படுத்துவன. 12 ரோஜாக்கள் சேர்ந்த மலர்ச்செண்டு நன்றி தெரிவிக்கவும், 25 ரோஜாக்களின் இணைப்பு வாழ்த்துச் சொல்லவும், 50 ரோஜாக்கள் சேர்ந்தது நிபந்தனையற்ற அன்பை வெளிப்படுத்தவும் ஏற்றது.

★ மலர்ந்திருக்கும் நேரங்களில் மனிதர்களை மகிழச்செய்யும் பண்பு மலர்களுக்கே உரியது. அன்பையும், காதலையும் இதமாகச் சொல்லும் ரோஜாக்களை உங்கள் இதயம் கவர்ந்தவர்களுக்கு கொடுங்கள்!









இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் எண்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2010, நவம்பர் 14ஆம் திகதி வெளியிடப்பட்டது